விலை ரூபா: 15.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினெட்டு
Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 புரட்டாதி 23 சனிக்கிழமை (09.10.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 294

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## போதியளவு உறுப்பினர்கள் இல்லை; நாடாளுமன்றம் நேற்று ஒத்திவைப்பு!

(கொழும்பு)

நாடாளுமன்ற அமர்வுகளை நடத்துவதற்குத் தேவையான குறைந்த பட்ச உறுப்பினர்கள் அவையில் பிரசன்னமாகாத காரணத்தினால் நேற்று நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

அமர்வுகளை முன்னெடுப்பதற்குத் தேவையான குறைந்த பட்ச உறுப்பினர்கள் அவையில் பிரசன்னமாகாத காரணத்தினால் அமர்வுகளை எதிர்வரும் 19 ஆம் திகதிவரை ஒத்திவைப்பதாகச் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ அறிவித்தார்.

குறைந்த பட்சம் 20 நாடாளுமன்ற உறுப்பினர்களேனும் அவையில் பிரசன்னமாகியிருக்க வேண்டும் என்ற போதிலும் நேற்று 18 உறுப்பினர்கள் மட்டுமே அவையில் பிரசன்னமாகியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்வதற்காக சகல (18 ஆம் பக்கம் பார்க்க)

## அமைதிக்கான நோபல் பரிசு சீன மனித உரிமை போராளிக்கு

### நோபல் பரிசுத் தேர்வுக் குழு அறிவிப்பு



(ஸ்டாக்ஹோம்)

2010 ஆம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசை சீனாவின் மனித உரிமைகள் போராளி லியூ ஜியாபோ வென்றார். இவர் சீன அரசின் எதிர்ப்பாளர் என்பது கவனிக்கத்தக்கது.

செய்தியாளர்களிடம் நேற்று அறிவித்த ஸ்வீடன் அகடமி அடிப்படை மனித உரிமைகளுக்காக நீண்ட காலமாக அகிம்சை வழியில் போராடி வருவதற்காக லியூ ஜியாபோவை அமைதிக்கான நோபல் பரிசுக்கு நோபல் குழு தேர்வு செய்தது என்று' தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் போராளியும் எழுத்தாளரும், சீன அரசின் எதிர்ப்பாளருமான லியூ ஜியாபோ, உலக (18 ஆம் பக்கம் பார்க்க)

# இறுதி யுத்த மனித உரிமை மீறல் குறித்து

# சுயாதீன சர்வதேச விசாரணைகள் தேவை

## ஐ.நாவின் முன்னாள் உதவிச் செயலர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**இலங்கையின் இறுதி யுத்தத்தின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல் சம்பவங்கள் இலங்கை மீது சுயாதீனமாக, சர்வதேச விசாரணைகளை நடத்த வேண்டிய தேவையை ஏற்படுத்தியுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் உதவி பொதுச் செயலாளர் நாயகம் டெனிஸ் ஹலிடேய் தெரிவித்துள்ளார்.**

இலங்கையில் யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில் அரசும் புலிகளும் மேற்கொண்ட யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், வன்முறைகள் என்பவை மறக்கப்பட்டுள்ளதாகவும் அவை சர்வதேசத்தின் முன்னால் தவிர்க்கப்பட்டு விட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

டப்ளினில் இடம்பெற்ற இரண்டு பொதுக் கூட்டங்களின்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளதாக ஜதிஸ் ரைம்ஸ் என்ற இணையத் தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தக் கூட்டத் (18 ஆம் பக்கம் பார்க்க)

## சரத் பொன்சேகா வழக்கு நீதிபதிகள் திடீர் விலகல்

### வழக்குகள் பிற்போடப்பட்டன

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் மேன்முறையீட்டு மனுவை விசாரிக்கவிருந்த மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகள் இருவர் அந்த வழக்கை விசாரிப்பதிலிருந்து விலகிக் கொண்டுள்ளனர்.

இதனையடுத்து சரத் பொன்சேகாவின் மேன்முறையீடு தொடர்பான விசாரணைகள் இம் மாதம் 15 ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளன.

சரத் பொன்சேகாவுக்கு எதிரான குற்றச் சாட்டுக்களை விசாரித்த முதலாவது இராணுவ நீதிமன்றம் செல்லுபடியாகாது என்று அறிவிக்கக் கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று விசாரணைக்கு வந்தபோதே இந்த இரு நீதிபதிகளும் விசார (18 ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் 10 சிங்களக் குடும்பம் நேற்று யாழ்ப்பாணம் வருகை

தென் பகுதியிலிருந்து பத்துச் சிங்களக் குடும்பங்கள் நேற்று யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளன. ஏற்கெனவே 180 குடும்பங்கள் யாழ்ப்பாணத்துக்கு மீளக் குடியேறவென வந்துள்ள நிலையில் மேலும் பத்துக் குடும்பங்கள் நேற்று யாழ்.வந்தன.

அவர்கள் புகையிரத நிலையத்தில் தங்கியுள்ளனர். இதேவேளை நேற்று 500 குடும்பங்கள் வரும் எனத் தெரிவிக்கப்பட்ட போதும் பத்துக் குடும்பங்களே யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளனர். இவர்களின் வருகையுடன் இதுவரையில் 190 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 500ற்கும் மேற்பட்ட சிங்கள மக்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (சு)

## ஜனாதிபதி செயலக ஆலோசனைப்படியே சிங்கள மக்கள் குடியமர்த்தப்படுவர்

### யாழ். அரச அதிபர் அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)

மீளக்குடியமரவென வந்துள்ள சிங்கள மக்கள் தொடர்பில் சரியான ஆவணங்களை ஜனாதிபதி செயலகத்துக்கு அறிவித்து அவர்களின் ஆலோசனையின் படியே குடியேற்ற முடியும் என யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இந்தக் குடும்பங்களுக்கு யாழ்ப்பாணத்தில் சொந்தக் காணிகள் இருக்கவில்லை. இவ்வாறு இடம்பெயர்ந்ததாகத் தெரிவிக்கும் குடும்பங்களை மீள்குடியேற்றும் நடவடிக்கைகள் எதுவும் இப்போது இடம்பெறவில்லை.

இறுதியாக நடைபெற்ற யுத்தத்தின்போது இடம்பெயர்ந்த குடும்பங்கள் மற்றும் அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட குடும்பங்கள் ஆகியவற்றை மீள்குடியமர்த்தும் நடவடிக்கைகளே தற்போது மேற்கொள்ளப் (18 ஆம் பக்கம் பார்க்க)



## நான் மன்னிப்புக் கோரினேனா? மறுக்கின்றார் முன்னாள் ஜனாதிபதி

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவிடம் மன்னிப்புக்கோரி தனது கணவர் விஜய குமாரதுங்கவை விடுவித்ததாக அமைச்சர்களான விமல் வீரவன்சவும் ஹெகலிய ரம்புக் வெலவும் கூறியது உண்மைக்குப் புறம்பானது எனவும் தான் சட்ட வழியிலேயே தனது கணவரை விடுவித்ததாகவும் சந்திரிகா குமார துங்க கூறியுள்ளார்.

30 மாத கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறார் பொன்சேகா. பொன் (18 ஆம் பக்கம் பார்க்க)

## எம்.பி. பதவி வெற்றிடத்துக்கு சபாநாயகர் அறிவிக்கவில்லை

### ஐ.தே.க. தெரிவிப்பு

(கொழும்பு)

சரத் பொன்சேகாவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடமாகியுள்ளது என சபாநாயகர் அறிவிக்கவில்லை என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் பதவி வெற்றிடமாகினால் அது குறித்து நாடாளுமன்றில் அறிவிப்பது வழமையான நியதியாகும் என கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறான ஓர் சூழ்நிலையில் சரத் பொன்சேகாவின் வெற்றிடத்துக்கு வேறு ஒருவரை நியமிக்குமாறு தேர்தல் ஆணையாளருக்கு நாடாளுமன்ற செயலாளர் நாயகம் எவ்வாறு அறி (18 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## காணி விற்பனை

சரசாலை ஞானியார் தோட்டம் வீரமாகாளி அம்மன் கோயிலுக்கு அருகாமையில் உள்ள 50 பரப்பு தோட்டக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு :- 0775096916
0112361834

(2627)



## செல்லா சினிமா




பாடல்கள் : வைரமுத்து, நந்தலாலா, சினேகன், விவேகா.

காட்சி நேரம்:- 10.30, 2.30, 6.00, 9.00


## கேள்விப் பத்திரம் கோரல்

பனை அபிவிருத்திச் சபையின் தலைமை அலுவலகத்தில் கீழ்க் குறிப்பிடப்படும் வேலைகளிற்கு கேள்விப்பத்திரம் மூலம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. தலைமை அலுவலக (06) ஆறு அறைகளிற்கு குளிரேற்றி (A/C) பொருத்துதல்.
2. தலைமை அலுவலக மின் இணைப்பு வேலை.
3. பனை அபிவிருத்திச் சபைக்கு பெரிய விளான், கீரிமலை வீதியில் 20'x30' அளவுடைய பனை வெல்லம் தயாரிக்கும் கட்டிடம் அமைத்தல்.

மேற்படி வேலைகள் தொடர்பான விபரங்களை எதிர்வரும் 11.10.2010ஆம் திகதியிலிருந்து சபையின் தேசிய வீடமைப்புச் செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் பெற்று 18.10.2010 ஆம் திகதிக்கு முன்னர் கேள்விப் பத்திரம் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு :-

சனி, ஞாயிறு விடுமுறை தினங்களில் ந.பகல் 12.00 மணி வரையும் காரியாலயம் திறந்திருக்கும்.

பொது முகாமையாளர் , பனை அபிவிருத்திச்சபை. (C-1380)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வேலாயுதம் ரவிதரன் (BBA) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கடந்த (06.10.2010) புதன்கிழமை நடைபெற்ற 26 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற வேலாயுதம் ரவிதரனை மேலும் பட்டங்கள் பல பெற்று நீடூழி காலம் வாழப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
பரா & நிலா

(2638)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/மாரீசன் கூடல் றோ.க.த.க. பாடசாலை அதிபரும், இளவாலை புனித யூதாததேயு ஆலய அருட்பணிச்சபைச் செயலாளரும், புனித யூதாததேயு சன சமூக நிலையச் செயலாளரும், இளவாலை கியுடெக் வேளாண்மிய தலைவரும், இளவாலை கியுடெக் புனித யூதாததேயு வாழ்வாதாரச்சங்கப் பொருளாளரும், இளவாலைத் திருமறைக் கலாமன்ற ஆலோசனைச் சபை உறுப்பினரும், இளவாலை புனித வளனார் சமூக கூட்டுறவுக்கழக உறுப்பினரும், சண்டிலிப்பாய்க் கல்விக் கோட்டப் பொருளாளருமாகிய

திரு சூ. நோபேட் உதயகுமார் SLPS 2-I, BA,PGDE அவர்கள் 06.10.2010 அன்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 26 ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டம் பெற்றதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

புனித யூதாததேயு கிராமச் சமூகம், இளவாலை.

(2640)


## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை ,மானிப்பாய்
## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

பின்வரும் வேலைகளுக்கு பொருத்தமான அட்டவணையில் காட்டப்பட்டவாறான இக்ராட் (ICTAD) உடைய ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.கீழே சுட்டிக்காட்டப்பட்ட கேள்விக்கான கேள்வி வைப்புப் பணத்தையும்,கேள்வி பத்திரக்கட்டணத்தையும் செலுத்தி படிவத்தை பெற்றுக் கொள்ளலாம்.

1.கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 11.10.2010 -21.10.2010 பி.ப.2 மணிவரை
2.கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் திகதி: 25.10.2010 நண்பகல் 12 மணிவரை
3.கேள்வி திறக்கப்படும் திகதி: 25.10.2010 பி.ப.2 மணி
(திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
4.கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரமுண்டு.
5.மூல கேள்விப்பத்திரத்தை அரக்கு முத்திரையிட்டு செயலாளர்,வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபை, தலைமையலுவலகம்,மானிப்பாய் என்ற முகவரிக்கோ அல்லது தலைமையலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியிலோ 2-ம் பந்தியில் குறிப்பிட்டதற்கமைவாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.ஒரு பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
6.வேலைகள் யாவும் ஒப்பந்தம் கைச்சாத்தாகியதிலிருந்து இரு மாத காலத்திற்குள் நிறைவேற்றப்பட வேண்டும்.
7.மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் (வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை ,மானிப்பாய் )பெற்றுக்கொள்ளமுடியும்.

| இல. | வேலை விபரம் | இக்ராட் தரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்க முடியாதது. கேள்விப் பத்திரப்பணம் | NBT வரி 3% | Vat வரி 12% |
|---|---|---|---|---|---|---|
| 1. | வடலியீடைப்பு கலைவாணி (கலட்டி) வீதி மீள் புனரமைப்பு | C9 | 12900.00 | 500.00 | 15.00 | 61.80 |
| 2 | பண்டத்தரிப்பு கிராமிய வைத்தியசாலை வீதி மீள் புனரமைப்பு | C9 | 12100.00 | 500.00 | 15.00 | 61.80 |
| 3 | மாகியப்பிட்டி 1வது வெள்ள ஒழுங்கை மீள் தாரிடல் | C9 | 1150.00 | 500.00 | 15.00 | 61,80 |
| 4 | மானிப்பாய் உப அலுவலக மீள் நிர்மாண தொடர்வேல்லை | C9 | 1600.00 | 500.00 | 15.00 | 61.80 |
| 5 | ஆனைக்கோட்டை முள்ளி வெள்ளவாய்க்கால் நிர்மாணம் | C9 | 3650.00 | 500.00 | 15.00 | 61.80 |

திருமதி பு.சிவலிங்கம்
செயலாளர்
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை , மானிப்பாய். (சி-1379)


## சரவணா ரெக்ஸ் நல்லூர்

தீபாவளியை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை
2010.10.10 - 2010.11.05 வரை



- இந்தியன் சில்க் சாறி → 500 /-
- இந்தியன் கொட்டன் சாறி → 800 /-
- இந்தியன் டஸ் சாறி → 1000 /-
- பன்சி கொட்டன் சாறி → 1500 /-
- பாகிஸ்தான் பஞ்சாபி துணி → 650 /- (லைனிங் தேவை இல்லை)

✦ மற்றும் சீக்குன்ஸ் சாறிகள், சில்க் சாறிகள், சில்க் பஞ்சாபி துணிகள், கொட்டன் பஞ்சாபி துணிகள் மற்றும் விதவிதமான பஞ்சாபிகள், சாறிகள் என்பன மலிவான விலையில் விற்பனையாகிறது.

குறிப்பு:-
தீபாவளியை முன்னிட்டு ஏழு நாட்களும் வியாபாரம் நடைபெறும்.

526, 529 பருத்தித்துறை வீதி,
நல்லூர் (பின் வீதி),
(சிவன் கோயில் அருகாமை)
யாழ்ப்பாணம்.

(C-1373)

# இன்று ஒரு தகவல்

## அறிமடம் சான்றோர்க்கு அணி

'அறிந்தும் அறியாமல் இரு' என்று பெரியவர்கள் சொல்வார்கள். அது ஒரு பெரிய பண்பு. சான்றோர்களெல்லாம் அப்படித் தான் நடந்து கொள்வார்கள்.

'பழமொழி நானூறு' என்று ஒரு சங்க இலக்கியம். அதில் ஒரு பழமொழி வருகிறது.

அதாவது 'அறிமடம் சான்றோர்க்கு அணி' என்று அறிந்தும் அறியாதது போல் நடந்து கொள்வது ஞானிகளின் சிறப்பு என்று அதற்கு அர்த்தம். பக்தி அதிகமாகப் போய் விடுவதால் சிலபேர் பைத்தியம் மாதிரிக்கூட நடந்து கொள்வார்கள். அதை நாம் தப்பாக புரிந்து கொள்ளக்கூடாது. ஒரு முல்லைக்கொடி வளரவேண்டும் என்பதற்காக தன்னுடைய தங்கத் தேரையே நிறுத்தி வைத்தரே பாரி அவரைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ஒரு மயில் குளிரினால் அவதிப்படுகிறது என்பதற்காக அதற்கு தன்னுடைய பீதாம்பரத்தையே போர்த்தினாரே பேகன். அவரைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

வரகுண பாண்டியனைப் பற்றி கேள்விப் பட்டிருக்கறீர்களா? அவரும் பக்தி அதிகமாகிவிட்டதால் ஒரு சமயம் கொஞ்சம் வித்தியாசமாக நடந்து கொண்டிருந்தார்.

திருவிடைமருதூரில் ஓரிடத்தில் எள் காயவைத்திருந்தார்களாம். கோயிலுக்கு எண்ணெய் தயார் பண்ணுவதற்காக இப்படிச் செய்தார்களாம்.

அந்தச் சமயம் பார்த்து அந்தப் பக்கமாக ஒருத்தர் வந்திருக்கிறார். எள் காயப்போட்டிருந்ததைப் பார்த்தார். என்னமோ நினைத்தார். அந்த எள்ளில் கொஞ்சம் எடுத்து வாயில் போட்டுக் கொண்டார்.

சுவாமிக்கு உபயோகப்படுத்துவதற்காக காயவைத்திருந்த எள்ளை இப்படி அள்ளி வாயில் போடலாமா? அது பெரிய தப்பல்லவா. சிவ அபராதம்!

அங்கே காவல் காத்துக் கொண்டிருந்தவர்கள் இதைப் பார்த்து விட்டார்கள்.

"ஐயையோ, அபசாரம்! அபசாரம்!" என்று கத்திக் கொண்டே ஓடி வந்தார்கள். அந்த ஆளைப் பிடித்துக் கொண்டார்கள்.

நேராக கொண்டு போய் வரகுண பாண்டியனின் முன் நிறுத்தினார்கள். வரகுண பாண்டியன் நிமிர்ந்து பார்த்தார். அவருக்கு மிகவும் ஆச்சரியமாகிவிட்டது. ஏனெனில் எள்ளை அள்ளி வாயில் போட்டுக் கொண்டிருக்கிறாரே அவர் எப்படி இருக்கிறார் தெரியுமா?

நெற்றியில் திருநீறு. உடம்பெல்லாம் பக்திமயம். இப்படிப்பட்ட சிவ பக்தரா அந்த சிவ அபராதத்தை பண்ணினார். ராஜாவால் இதை நம்பவே முடியவில்லை.

அதனால் அன்பாக அவரைப் பார்த்து, ''தாங்கள் ஏன் இப்படியொரு காரியத்தைச் செய்தீர்கள்?'' என்று கேட்டார்.

அதற்கு அந்த சிவபக்தர் சொன்னார்.

'' நான் பசியின் காரணமாக அந்த காரியத்தை செய்யவில்லை. இந்த ஊர் எனக்கு மிகவும் பிடித்து விட்டது. சிவ அபராதம் செய்துவிட்டால் ஏழு ஜென்மங்களுக்கு இந்தக் கோயிலுக்குச் செக்கு இழுக்கிற மாடாகப் பிறப்பேன் என்பது எனக்குத் தெரியும். அதற்காகத் தான் அப்படிச் செய்தேன் என்றார்.

அந்த ஊரிலேயே பிறக்கவேண்டும். அதுவும் செக்கு மாடாகப் பிறக்கவேண்டும். அந்த ஆலயத்திலேயே தொண்டு செய்ய வேண்டும். ஒரு தவறு செய்தால்தான் அது சாத்தியம் என்பதை புரிந்து கொண்டு அவர் அப்படிச் செய்திருக்கிறார். எப்பேற்பட்ட பக்தி வரகுண பாண்டியன் பார்த்தார். எங்கே உங்களுடைய வாயைச் கொஞ்சம் திறவுங்கள் என்றார். அந்த சிவபக்தர் வாயைத் திறந்தார்.

அங்கே கூடியிருந்தவர்கள்லெல்லாம், "ராஜா அந்த ஆளின் வாய்யக் கிழிக்கப் போகிறார்" என்று நினைத்தார்கள். ஆனால் ராஜா என்ன செய்தார் தெரியுமா?

அவருடைய வாயில் ஒட்டிக் கொண்டிருந்த ஒரு எள்ளை எடுத்து தன் வாயில் போட்டுக் கொண்டார். அதற்குப் பின் பதில் சொன்னார்." நீங்கள் செய்த அபச்சாரத்தை நானும் செய்து விட்டேன். உங்களோடு சேர்ந்து நானும் செங்கு இழுப்பேன்" என்றார்.

இது தான் சான்றோர்கள் இயல்பு.

இப்படி பக்தியினால் தவறு செய்பவர்கள் அந்தக் காலத்தில் அதிகம்.

புத்தியில்லாமல் தவறு செய்பவர்கள் தான் இந்த காலத்தில் அதிகம்.

ஒரு அரிசி ஆலையில் நெல் காயவைத்திருந்தார்கள்.

அதைத் திருடிவிட்டு ஒருத்தன் சிறைக்குச் சென்றான். சிறை அதிகாரிகளிடமெல்லாம் மிகவும் நெருக்கமாக பழகினான். தண்டனைக்காலம் முடிந்து விடுதலையாகி வெளியில் புறப்பட்டான்.

போவதற்கு முன் சிறை அதிகாரி அவனைப் பார்த்து "வெளியில் போய் என்னப்பா செய்யப்போகிறாய்?" என்றார்.

'' மறுபடியும் எங்கேயாவது நெல் காயவைத்திருந்தால் அதைத் திருடலாம் என்று இருக்கிறேன்" என்றான்.

" ஏண்டா பாவி... நீ கொஞ்சம் கூட திருந்தவில்லையா?" என்றார் அந்த அதிகாரி.

" திருந்தி விட்டேன் சேர். இருந்தாலும் எப்பொழுதும் உங்களிடமே தொண்டு செய்ய வேண்டும் என்று ஒரு ஆசை. அதற்கு இதுதான் வழி" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வீட்டுக் கழிவுப் பொருட்களை வீதிகளில் போட வேண்டாம்

## யாழ். மாநகரசபை அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

மழைகாலம் அண்மிப்பதால் வழமைக்கு மாறாக வீடுகளில் அதிகளவில் சேரும் கழிவுப் பொருட்கள், வாழைக்குற்றிகள் மற்றும் செடிகள் போன்றவற்றை வீதிகளில் போடுவதால் வீதிப்போக்குவரத்துக்கு இடையூறாகவும் சுகாதார சீர்கேட்டுக்கும் வழியேற்படுகிறது.

இவ்வாறான நிலைமைகள் ஏற்படுவ தைத் தவிர்த்து மேற்படி குப்பைகளை வீட்டு வளவினுள் ஓர் இடத்தில் குவித்துக் கொண்டு அவற்றை அகற்றுமாறு நேரிலோ அல்லது தொலைபேசி மூலமாகவே (021222 2275, 0212222335 மற்றும் 021320 7625) தொடர்பு கொண்டு எமக்கு அறியத் தருமிடத்து அவற்றை குறைந்த கட்டண அறவீட்டில் உடனுக்குடன் அகற்ற முடியு மென்பதை அறியத்தருகிறோம்.

இவ்வாறான செயற்பாடுகள் மூலமாக நகரையும் வீதிகளையும் சுத்தமாகவும் தொடர்ந்து பராமரிப்பதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி. யோகேஸ்வரி பற்குணராஜா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# வட இலங்கை சங்கீத சபை தேர்வுக்கான விண்ணப்பம்

(வட்டக்கச்சி)

2011 ஆம் ஆண்டுக்கான வட இலங்கை சங்கீதசபை தேர்வுக்கான அறிவுறுத்தல்களும் விண்ணப்பப்படிவங்களும் கிளிநொச்சி வலய கல்விப் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தேர்வுக்கான விண்ணப்பங்களை கிளிநொச்சி வலயப் பாடசாலை அதிபர்கள் எதிர்வரும் 13ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் குறித்த திகதி வரையே விண்ணப்பங்கள் மீள ஏற்றுக் கொள்ளப்படும் எனவும் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ)

# குடிநீர் விநியோக சேவையும் கட்டண அறவீடும் ஒன்றிணைப்பு

இரு வெவ்வேறு இடங்களில் நீண்டகாலமாகவே இயங்கி வந்த யாழ்ப்பாணம் மாநகரசபையின் குடிநீர் விநியோகப் பகுதியும் மற்றும் நீர் விநி யோகக்கட்டண அறவீட்டுப் பகுதியும் வரியிறுப்பாளர்களின் நன்மைகருதி தற் போது ஒரேயிடத்தில் தனது செயற்பாடுகளை இயங்க ஆரம்பித்துள்ளது.

இதற்கமைய தனியார் நீரிணைப்புக்கள் , பொது நீர்க் கம்பங்களுக்கான கட்டணங் கள் மற்றும் நீர் விநியோகக் கட்டணங்கள் போன்றவற்றை நல்லூர் இந்து விடுதியில் இயங்கும் நீர்வேலைப் பகுதியிலேயே செலுத்திப் பற்றுச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளுவதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி. யோ.பற்குணராஜா அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

# இராசி பலன்

*09.10.2010*
*(புரட்டாதி 23, சனிக்கிழமை)*
*துதியை முன்னிரவு 9.12 மணிவரை*
*சுவாதி பின்னிரவு 4.27 மணிவரை*
*இராகுகாலம் 9.02-10.32 மணிவரை*
*சுபநேரம் 3.02- 4.32 மணிவரை*
*நான்காம் புரட்டாதிச் சனி ,அமிர்தசித்தம்*

**மேடம்** தொலைபேசி மூலம் மகிழ்சியான தகவல் வந்து சேரும், ஒரு கடனை அடைக்க மற்றொரு கடனை வாங்க வேண்டிய நிலை ஏற்படலாம், பெரியோரின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**இடபம்** செல்வ நிலை உயர எடுத்த முயற்சி வெற்றி பெறும், முன்னோர் சொத்துக்களில் வரவேண்டிய இலாபம் வந்து சேர்வதற்கான அறிகுறி தோன்றும், தேகநலன் சீராகும்.

**மிதுனம்** வாகன யோகமுண்டு, சொத்துக்கள் தொடர்பில் எடுத்த முயற்சி வெற்றி பெறும், உத்தியோகத்தில் எதிர் பார்த்த சலுகைகள் கிடைக்கலாம், பிள்ளைகளின் தேவைகள் நிறைவு செய்யப்படலாம்.

**கடகம்** விருப்பங்கள் நிறைவேற விரதம், வழிபாடுகளை கடைப்பிடிக்க வேண்டிய நாள், வருமானம் அதிகரிப்பதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள், வீடு தொடர்பான எடுத்த முயற்சிகள் நிறைவேறும்.

**சிங்கம்** நினைத்த காரியம் நிறைவேறும் நாள், பணத்தேவைகள் பூர்த்தியா கும், நண்பர்களிடம் ஒப்படைத்த வேலைகளை நல்ல விதமாக முடித் துக் கொடுப்பர், பகை விலகும், வழக்குகளில் வெற்றி கிட்டும்

**கன்னி** எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடித்து வெற்றி காண்பீர்கள், திடீர் பணவரவு மனதிற்கு சந்தோஷம் தரும், உஷ்ண சம்பந்தமான வியாதி ஏற்படும்.

**துலாம்** கோயில் வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், தொழில் ரீதியாக பயணம் ஒன்றை மேற்கொள் வீர்கள், செலவிற்கேற்ப வருமானம் வந்து சேரும், சான்றோர்களின் சந்திப்பு கிடைக்கும்.

**விருச்சிகம்** பணத்தேவைகள் பூர்த்தியாகும், பயணங்களால் பலன் கிடைக்கும், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும், உறவினர் வருகையுண்டு, தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும் நாள், சொன்ன சொல்லை காப்பாற்றி மகிழ்வீர்கள், புதிய பணியை மேற்கொள்வீர்கள், உறவினர்களின் வருகையால் ஏற்றம் காண்பீர்கள்.

**மகரம்** பெண்களால் பெருமை வந்து சேரும் நாள், தந்தை வழி உறவில் ஏற்பட்ட விரிசல் மாறும், ஒரு சொத்தை விற்று மற்றொருசொத்தை வாங்கும் எண்ணம் மேலோங்கும்.

**கும்பம்** இறைவழிபாட்டில் இனிமை காண வேண்டிய நாள், வாழ்க்கைத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முன் வருவீர்கள், மாலை நேரம் பிரிய மானவர்களின் சந்திப்பு கிடைக்கும்.

**மீனம்** வளர்ச்சி காண வழிபாடுகளை மேற் கொள்ளவேண்டிய நாள், வரவை விட செலவுகள் கூடலாம், குடும்பத்தினரிடையே கோபமாக பேசிவிட்டு பின்னர் வருத்தமடையும் சூழ்நிலை தோன்றலாம்.

வளவன்

# வீதியோரங்களில் கட்டடப்பொருட்கள் பறிப்பதைத் தவிர்க்குமாறு அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் புதிதாக கட்டடங்களை நிர்மாணிப்போர் கட்டடப் பொருட்களான கண்டகல் , மணல் , கிறேசர் , சல்லி, கட்டட இடிபாடுகள் போன்றவற்றை தமது வதிவிடத்திற்கு முன்னாலுள்ள வீதியோரங்களில் பறிப்பதன் காரணமாக வாகனப் போக்குவரத்துக்கு இடையூறாகவும் , வீதி விபத்துக்களுக்கு காரணமாகவும் இருந்து வருவதைத் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது.

எனவே, வீதியோரங்களில் கட்டடப் பொருட்கள் எதனையும் குவித்து வைத்திருப்பதை நிறுத்துமாறும் இவ் அறிவித்தலை கவனத்திற்கொண்டு செயற்படத் தவறுவோரின் கட்டடப் பொருட்கள் யாவும் எவ்வித முன்னறிவித்தலுமின்றி மாநகரசபையினால் அகற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் தண்டப்பணமும் அறவிடப்படும் என யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோ. பற்குணராஜா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 90 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 80 |
| பச்சைமிளகாய் | 50 | 70 | 60 |
| தக்காளி | 50 | 60 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 70 |
| கோவா | 60 | 60 | 60 |
| கரட் | 80 | 40 | 40 |
| பூசணி | 40 | 40 | 35 |
| புடோல் | 30 | 40 | 30 |
| வாழைக்காய் | 40 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 80 | 50-70 | 90 |
| பெரிய வெங்காயம் | 80 | 40 | 80 |
| பாகற்காய் | 120 | 80 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 30 | 50 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 60 |
| பயற்றங்காய் | 120 | 100 | 120 |
| லீக்ஸ் | 90 | 120 | 120 |
| பீற்றூட் | 30 | 20 | 40 |
| கறிமிளகாய் | 70 | 80 | 70 |
| முருங்கைக்காய் | 120 | 120 | 150 |
| போஞ்சி | 140 | 120 | 130 |
| கத்தரிதம்புள்ள | 60 | 70 | 50 |
| கீரை - 1 பிடி | 25 | 20 | 20 |
| தேசிக்காய் | 100 | 80 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-40 | 40 |






யாழ்.நல்லூர் ஞானோதய வித்தியாலய ஆசிரியர் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஓய்வுபெற்ற முன்னாள் அதிபர் சு.இராசலிங்கம் , பாடசாலை அதிபர் கி.தர்மஜீலன் ஆகியோர் மங்கல விளக்கேற்றுவதையும் விருந்தினர்களுடன் கௌரவிக்கப்பட்ட அதிபர், ஆசிரியர்களையும் நிகழ்வில் பங்குபற்றி பேச்சு நிகழ்த்திய மாணவி ஒருவரையும் படத்தில் காணலாம்.

## அரிச்சுவடி ஏடுகள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

விஜயதசமி அன்று ஏடு தொடக்கவுள்ள ஆலயங்கள், பாடசாலைகள் மற்றும் சைவ நிறுவனங்கள் அனைத்தும் இல 525/2 , காங்கேசன் துறை வீதியில் அமைந்துள்ள மில்க் வைற் தொழிலகத்தில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை அரிச்சுவடி ஏடுகளை அன்பளிப்பாகப் பெற்றுக்கொள் ளலாம் என சிவநேயர் இ. தவகோபால் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## சிறுத்தீவு, குருச்சாட்டித்தீவு என்பன வேணைப் பிரதேச சபையிடம் ஒப்படைப்பு




மண்டைதீவுப் பிரதேசத்திற்குட்பட்ட சிறுத் தீவு, குருச்சாட்டித்தீவு மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு ஒதுக்கப் பட்டிருந்த 101 ஏக்கர் காணிஎன்பன வேலணை பிரதேச சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள தாக பிரதேச சபைச் செயலாளர் கெ. தீவ ராசா தெரிவித்தார்.

வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியின் பணிப்புரைக்கமையவே இக்காணி வழங்கப் பட்டுள்ளது.

உள்ளூர் மக்களின் வேலைவாய்ப்பு, உள்ளூர் உற்பத்திகளின் விற்பனை அதி கரிப்பு மற்றும் வேலணைப் பிரதேச சபை யின் வருமானம் என்பவற்றை கருத்தில் கொண்டு சுற்றாடல் அபிவிருத்தித் துறையை மண்டைதீவில் வளர்ப்பதற்கு ஏற்ப இந் நிலங்கள் ஆளுநரால் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிலங்களில் வேலணைப்பிரதேச சபை யின் பெயர்ப்பலகையும் பொறிக்கப்பட் டுள்ளது. (ச)

## முன்பள்ளி சிறுவர்களுக்கான கண்காட்சி

(வட்டுக்கோட்டை)

வலிகாமம் கல்வித் திணைக்களத்தால் நடத்தப்படவுள்ள 'முன்பள்ளி சிறுவர்களுக் கான கண்காட்சி'நாளையும் நாளை மறுதின மும் காலை 8 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக வட்டுக் கோட்டை முன்பள்ளி ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2)




## உலக உளநல நாள் நிகழ்வுகள் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

உலக உளநல நாள் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்.பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வரவேற்புரை, தலைமை யுரையை யாழ்.மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் நிகழ்த்தவுள்ளார். அத்து டன் "நாட்பட்ட உடல் நோய்களும் உள நலமும்" எனும் சிறப்புரையை யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை பொது வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி தி.குமணன் நிகழ்த்தவுள்ளார்.

தொடர்ந்து " மஞ்சள் வெயிற்பொழுது" இசைநிகழ்வை சு.கோபிதாஸ் (வயலின்),த. றொபோட் (கீபோட்), வ.ரமணா (மிருதங்கம்), நா.சிவசுந்தர் (கடம்) ,க.ரஜீவன் (தம்புரா) ஆகியோர் சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்/ ஸ்கந்தவரோதயா கல்லூரி அதிபர் ஆறுதிருமுருகன் கலந்துகொள்ளவுள் ளார். (ஸ்ரீ)

## மனை முகாமைத்துவ தொழிற்பயிற்சி கண்காட்சி

(அல்வாய்)

வடமராட்சி வலய முறைசாராக் கல்விப் பிரிவின் அனுசரணையுடனும் மற்றும் இலங்கை வங்கி அனுசரணையுடனும் யாழ். இமையாணன் அ.த.க.வித்தியாலய முறை சாராக் கல்விப் பிரிவு நடத்தும் மனை முகாமைத்துவ தொழில் பயிற்சிநெறி கண் காட்சி இன்று காலை 10 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை யாழ். இமையாணன் அ.த.க.வித்தியாலயத்தில் அதிபர் திருமதி .ந.சந்திரசேகரம் தலைமையில் நடை பெறவுள்ளது.இந்நிகழ்வின் பிரதம விருந் தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ.புஸ்பலிங்கம்,கௌரவ விருந் தினராக வடமராட்சி வலய கல்விப் பணிப் பாளர் வ.செல்வராசா, கர வெட்டி கோட்ட கல்வி அதிகாரி த.தவேந்திர ராசா, நெல் லியடி இலங்கை வங்கிக்கிளை முகாமை யாளர் க.சகாதேவன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-2-19)

## இல்ல மெய்வன்மை போட்டி

(அல்வாய்)

யாழ்.விக்னேஸ்வரா ஆரம்பப் பாடசாலை யின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று காலை 9 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் ம.மகாகேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன் கலந்துகொண்டு வெற்றியீட்டிய வீரர்களுக் குப் பரிசில்களை வழங்கிக் கௌரவிப் பார். (ஸ்ரீ-2-19)

## முதியோர் தின விழா

(சாவகச்சேரி)

சர்வதேச முதியோர் தினவிழா தென்ம ராட்சி பிரதேச செயலகத்தினால் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் தலைமை யில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண தியாகி அறக்கொடை நிறுவன பணிப்பாளர் ரி.கமலநாதன் உட்பட பல பிர முகர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் முதியோர்களும் வலுவிழந் தோரும் கௌரவிக்கப்படவுள்ளமை குறிப் பிடத்தக்கதாகும். (ஸ்ரீ-29)

## நுணாவில் மேற்கிலுள்ள வீடொன்றில் 25 ஆயிரம் ரூபா பணம்,நகை கொள்ளை

(சாவகச்சேரி)

நுணாவில் மேற்கு வீரபத்திரர் கோவில டியில் உள்ள வீடொன்றினுள் கடந்த 6 ஆம் திகதி நள்ளிரவு திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதில் 22 ஆயிரம் ரூபா பணம் மற்றும் நகைகள் என்பன கொள்ளையிடப்பட்டுள் ளதாக முறையிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

வீட்டின் யன்னல் கம்பியை உடைத்து புகுந்த திருடன் வெளிக்கதவை திறந்து வைத்து விட்டு திருட்டை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அவ்வீட்டு முதியோரின் கூக்குரலை அடுத்து பக்கத்து அறையில் இருந்தவர் ஓடிச் சென்ற போது அவர்களைப் பிடிக்க முடிய வில்லை எனக் குறிப்பிடப்படுகிறது. இச்சம் பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-29)

## பனை விதை நடுகை விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பனை அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் பனை விதை நடுகை விழா இன்று சனிக்கிழமை காலை11.30 மணிக்கு யா/ஸ்கந்தவரோதயா கல்லூரியில் பனை அபிவிருத்தி சபைத்தலைவர் பசுபதி சீவரத்தினம் தலைமையில் நடைபெறவுள் ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத் தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ்.மாவட்ட இராணுவ கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் எம்.ஹத்துருசிங்க, உலக உணவுத்திட்டப் பொறுப்பாளர் தேவதாஸ் சங்கதாச், உடுவில் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன்,யா/ ஸ்கந்தவரோ தயா கல்லூரி அதிபர் ஆறு.திருமுருகன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஸ்ரீ)

## முகமூடி கொள்ளையர்களின் தாக்குதலுக்கு இலக்கான நபர் வைத்தியசாலையில் அனுமதி

(கரவெட்டி)

அல்வாய் வடக்குப் பகுதியில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் ஒன்றில் குடும்பத்தவர் ஒருவர் படுகாயம் அடைந்து மந்திகை ஆதார வைத் தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது , நேற்று முன்தினம் காலை 8மணிக்கு குறித்த நபர் தொழில் நிமித்தமாக தனது வீட்டிலிருந்து யாழ். போதனா வைத்தி யசாலைக்கு புறப்பட்டுள்ளார்.

இச்சமயத்தில் அல்வாய் வடக்கு பகுதி முகமூடி அணிந்த கொள்ளையர்கள் குறித்த நபரை கடுமையாகத் தாக்கியதுடன் அவர் அணிந்திருந்த நகைகளை அபகரித்து சென்றதோடு அவரை அருகில் உள்ள பற்றைக்குள் தூக்கி வீசிவிட்டு சென்றுள்ள னர்.

இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த எஸ்.பொன்னையா (வயது-50) என்ற குடும்பஸ்தரே படுகாயம் அடைந்து மயக்க முற்ற நிலையில் அப்பகுதி மக்களினால் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஸ்ரீ-24)

## சிறப்பு பட்டிமன்றம்

(நவாலி)

யாழ்.நவாலி மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவின் இரண்டாம் நாளான நாளை இரவு 8 மணிக்கு விசேட பட்டி மன்றம் நடைபெறவுள்ளது.

"இன்றைய மாறி வரும் பண்பாட்டுச் சூழலில் மாணவர்களை பெரிதும் வழிப்படுத் துவதில் முன் நிற்கவேண்டியவர்கள் ஆசிரி யர்களா அல்லது பெற்றோர்களா" என்ற தலைப்பில் இப்பட்டிமன்றம் இடம்பெறவுள் ளது.

இதன் நடுவராக யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்பு பொருளியல் விரிவுரையாளர் ஏ.கே.குமாரவேல் கலந்துகொண்டு சிறப்பிக் கவுள்ளார். (ஸ்ரீ-26)

# யா/ நவாலி மகா வித்தியாலய நூற்றாண்டு விழா சிறப்புமலர் – 09.10.2010

## ஆசியுரை



"வாக்குண்டாம் நல்லமனமுண்டாம் - மாமலரால்
நோக்குண்டாம் மேனி நுடங்காது
பூக்கொண்டு துப்பார்திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு"

"யாழ்ப்பாணம் மாவட்டத்தின் வடபால் நவாலி என்னும் கிராமத்திலே பேரும் புகழும் பூத்து நிற்கின்ற இந்த நவாலி மகாவித்தியாலயம் நூற்றாண்டு விழாக் கொண்டாடு வதையிட்டு நான் பெரு மகிழ்ச்சிய டைகின்றேன். ஓர் ஊரின் சிறப்பு அந்த ஊரிலே வாழ்ந்த, வாழ்கின்ற பெருமான்களு டைய சிறப்பினால் தான் பெருமையடைகின்றது. அந்த வயில் எமது நவாலியூரிலே தங்கத்தாத்தா என அழைக் கப்படும் சோமசுந்தரப் புலவர் இன்னும் பல்வேறு பெருந் தகைகள் வாழ்ந்திருக் கிறார்கள். எனக்கு இப்போது வயது அறுபத்தியிரண்டு. ஏறக்குறைய கடந்த 1961, 62ஆம் ஆண்டு காலங்களில் இப்பாடசாலையிலே நான் கல்வி பயின்றேன். அப்போது இப் பாடசாலையின் அதிபராகக் காலஞ்சென்ற திருவாளர் நவரட்ணராஜா அவர்கள் கடமையாற்றினார். அவர் எமது வேலைக்கைப்பிள்ளையார் ஆலய மகோற்சவ காலத்தில் ஒன்பதாம் திருவிழா உபய காரராகவும் இருந்தார். தொன்றுதொட்டே இப் பாடசாலைக்கும் எமது வேலைக்கைப் பிள்ளையார் ஆலய த்திற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. அதே போன்று இப்போது எமது ஆலயத்தை வழிநடத்துகின்ற தம்பி. திரு.இரா.வசந்தகுமார் அவர்கள் இப்பாடசாலையின் அதிபராக இருக்கின்றார். அவர் மிகவும் பெருமைக் குரியவர், விடா முயற்சியுடையவர். இவரது முயற்சியின் பயனாக தற்போது க.பொ.த. உயர்தர வகுப்புக்களும் இங்கு மீள ஆரம் பிக்கப்பட்டன. காலத்தின் தேவை கருதிய அவரது தூர நோக்கான எண்ணத்தை வெளிப் படுத்துகின்றது. தம்பி அவர் களின் வழிநடத்தலின் கீழ் இப்பாடசாலை மென்மேலும் பல்லாண்டுகள் விழாக்கான எல்லாம் வல்ல "சிந்தாமணி விநாயகரையும் வேற்கை முருகனையும்" வேண்டி ஆசி கூறுகின்றேன்.

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"

**சிவஸ்ரீ.ந.சுப்பிரமணியக்குருக்கள்,**
**வேலைக்கைப் பிள்ளையார் கோவில் வீதி, நவாலி.**

## செஞ்சொற்செல்வரின் ஆசியுரை



நற்றமிழ் அறிஞர்கள் வாழ்ந்த புண்ணிய பூமி நவாலி. கல்வியாலும் கலை, பண்பாட்டினாலும் புகழ் பெற்ற திருவூர். பண்டிதர், பாவலர்கள் பாடிப்பரவிய பழந்தமிழ் மாநிலம். சைவத்தமிழ் காத்திடப் பண்டிதர் ஸ்ரீமான் தம்பையா வள்ளலின் அர்ப்பணிப்பால் நூறு ஆண்டுகளுக்கு முன் உருவாக் கப்பட்ட பாடசாலையே நவாலி மகா வித்தியாலயம். இப் பாடசாலையின் பெருமை அறியாதவர்களில்லை. இன்று க.பொ.த. உயர்தரம் வரை சிறப்புடன் இயங்கும் இக் கல்விச்சாலையின் நூற்றாண்டு விழாக் குறித்து மலர் வெளியிடு மவது பாராட்டுக்குரிய விடயமாகும்.

இன்று இப்பாடசாலையின் அதிபராக விளங்கும் திரு. இராசேந்திரம் வசந்தகுமார் உயர்ந்த நோக்கமும் அர்ப் பணிப்பும் மிக்கவர். சேர் .பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் மரபில் உதித்தவர். கல்விக்கும் சமயத்துக்கும் பெருந் தொண்டாற்றிய குடும்ப உறுப்பினர் இவரது சேவைக் காலத்தில் நூற்றாண்டு விழாக் காண்பது சிறப் புக்கும் பெருமைக்குமுரிய வாய்ப்பாகும்.

இப்பாடசாலையில் இரு பெருந்தகைகளின் உருவச் சிலைகளை திறந்துவைக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அதிபர் திரு.பு.ஸ்ரீவிக்கினேஸ்வரன் அவர்களது சேவை க்காலத்தில் பண்டிதர் ஸ்ரீமான் தம்பையா அவர் கட்கும் சோமசுந்தரப் புலவருக்கும் உருவச்சிலை அமைத் தமை நினைவில் கொள்ள வேண்டியவை. கல்வியாலும் பண்பாட்டுப்பாரம் பரியத்தாலும் தனித்துவம் பெற்ற இப் பாடசாலை சூரியன், சந்திரன் நிரந்தரமாய் ஒளிதருவது போல் என்றும் நிலை வென்று சிறக்கப் பிரார்த்தித்து வாழ்த்தி நல்லாசி கூறி அமைகின்றேன்.

"யாவர்க்குமாம் இன்னுரை தானே"

**திரு.ஆறு.திருமுருகன்,**
**தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தலைவர், சிவபூமி அறக்கட்டளை.**

## கல்வி அமைச்சின் செயலாளரிடமிருந்து....




யா/ நவாலி மகா வித்தியாலயமானது தனது நூற்றாண்டு அகவையைப் பூர்த்தி செய்தமை பாராட்டுதற் குரியதொன்றாகும். அப்பாடசாலை சைவப்பாடசாலையின் தேவையை உணர்ந்து பண்டிதர் தம்பையா அவர்கள் "பார்வதி வித்தியாலயம்" என்ற பெயருடன் ஆரம்பித்து வைத்தார். நவாலியூர் சோமசுந்தரப் புலவர், இராம லிங்க உபாத்தியாயர், திரு.சி.சுப்பையா அவர்களது அயராத முயற்சியினால் 1919இல் அரசாங்கத்திடம் ஒப்படைக் கப்பட்டது. தொடர்ந்து நவாலி மகாவித்தியாலயம் என தரமுயர்த்தப்பட்டு கல்விப்பணியைச் சிறப்பாகச் செய்தமை பெரும் வரவேற்பிற்குரிய விடயமாகும்.

பல அதிபர்களின் அயராத பணியின் மூலம் வகுப் பறைக் கட்டடங்கள், ஆய்வுகூட வசதிகள், விளையாட்டு மைதானம் போன்ற வசதிகளைப் பெற்று முழுநிறைவான பாடசாலையாக முன்னேறி வருவது அவதானிக்கக் கூடியதொன்றாக இருக்கின்றது. எனவே தற்போதைய அதிபர், ஆசிரியர் குழாத்தின் முன்னெடுப்புடன் கல்விச் சமூகத்தின் பங்களிப்புடன் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாட விரும்புவது சிறப்பான அம்சமாகும்.

இவ் வித்தியாலயத்தின் கல்விச் சமூகத்திற்கு இதனை வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பு உண்டு என நினைவூட்டுவதோடு இவ் வித்தியாலய மாணவர்கள் வேலை உலகிற்கும் சக வாழ்விற்கும் உரியவர்களாக ஆக்க வேண்டும் எனவும் கூறி எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.இ.இளங்கோவன்,**
**செயலாளர்,**
**கல்வி பண்பாட்டலுவல்கள்**
**விளையாட்டுத்துறை அமைச்சு,வடமாகாணம்.**



## யா/நவாலி மகா வித்தியாலய அதிபர்கள்

| இல | பெயர் | காலம் | |
|---|---|---|---|
| 01 | திரு.ஆறுமுகம் | 1921 | |
| 02 | திரு.S.சோமசுந்தரம் | 1922 | |
| 03 | திரு.G.S. வல்லிபுரம் | 1931 | |
| 04 | திரு.S.A. செல்லையா | 1935 | |
| 05 | திரு.V.சின்னையா | 1941 | |
| 06 | திரு..P.E.D.ஐயாத்துரை | 01.01.1950 | 31.12.1958 |
| 07 | திரு.S. சிவகுருநாதன் | 01.01.1965 | 02.05.1960 |
| 08 | திரு.K.நாராயணபிள்ளை | 03.05.1960 | 31.01.1961 |
| 09 | திரு. K.நவரட்ணராஜா | 01.02.1961 | 31.12.1966 |
| 10 | திருமதி.A.W. தங்கராஜா | 15.06.1966 | 31.12.1971 |
| 11 | திருமதி.S.ஆறுமுகராஜா | 01.01.1972 | 18.05.1978 |
| 12 | திரு.P. சிவசுப்பிரமணியம் | 10.07.1978 | 31.12.1980 |
| 13 | திரு பொ.தி.சம்பந்தபிள்ளை | 01.01.1981 | 31.03.1981 |
| 14 | திரு.த.மார்க்கண்டு | 01.04.1981 | 11.05.1983 |
| 15 | திரு.பொ.தி.சம்பந்தபிள்ளை | 12.05.1983 | 31.09.1984 |
| 16 | திரு.செ.கதிர்காமத்தம்பி | 01.10.1984 | 14.04.1988 |
| 17 | திரு.K.M. மாணிக்கம் | 15.04.1988 | 23.05.1989 |
| 18 | திரு.ஐ.மனோகரன் | 24.05.1989 | 22.06.1993 |
| 19 | திருமதி வி.விஸ்வலிங்கம் | 23.06.1993 | 18.02.1999 |
| 20 | திரு.அ.அலெக்சாண்டர் | 05.03.1999 | 12.04.2003 |
| 21 | திரு.பு.ஸ்ரீவிக்னேஸ்வரன் | 25.07.2003 | 30.03.2007 |
| 22 | திரு.அ.அலெக்சாண்டர் | 01.05.2005 | 01.01.2006 |
| 23 | திரு.இ.வசந்தகுமார் | 30.04.2007 | ............... |

## அதிபரின் உள்ளத்திலிருந்து....



நூற்றாண்டு காலக் கல்விப்பணியில் கால் பதிக்கும் எமது வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா மலருக்கு வாழ்த்து கூறுவதற்கு வாய்ப்புத்தந்து தோன்றத் துணையாக நின்று எம்மை வழிப்படுத்திக் கொண்டிருக்கும் இறை வனுக்கு முதற்கண் நன்றிகளைக் கூறுகின்றேன்.

புகழ் பெற்ற சோமசுந்தரப் புலவர், பண்டிதர் தம்பையா போன்ற கல்விமான்கள் வாழ்ந்த இந்நவாலியூரின் கண் உள்ள பாடசாலையில் தற்பொழுது அதிபராகக் கடமையாற்றும் பேறு கிடைத்தமையை இட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒரு சமூகத்தை வளர்த்தெடுப்பதில் கல்விக் கூடங்கள் அளப்பரிய சேவைபுரிகின்றன. இவ்வகையில் 1910 ஆம் ஆண்டில் உயர்.திரு.பண்டிதர் தம்பையா அவர்களின் நல்ல சிந்தனையில் உருவாக்கிய இப் பாடசாலை இன்று ஆலமரம் போல் விரிந்து கல்விமணம் பரப்பித் தனது நூறாவது அகவையில் கால்பதித்துள்ளமை மிகவும் மகிழ்விற்குரியதே. இந்த வகையில் இப் பாடசாலை உன்னத நிலையை அடைய முன்னின்று உழைத்த முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்களை நாமும் நன்றியு ணர்வுடன் போற்றுவோம்.

இவ்வித்தியாலயத்தின் நூறு ஆண்டு காலப்பகுதியினை நாம் மீட்டுப் பார்க்கும் போது இவ்வித்தியாலயமானது பல்வேறுபட்ட வளர்ச்சிகள், தளர்ச்சிகள், தடைகள், இன்னல்கள் நிறைந்திட்ட போதிலும் தன்னம்பிக்கையில் தளராது நின்று இன்று புதுப்பொலிவுடன் காட்சியளிக் கின்றமை யாவருக்கும் பேருவகை தருகின்றது.

இப்பாடசாலையில் கல்வி கற்ற பழைய மாணவர்கள் பரந்துபட்ட பிரதேசங்களில் பல்வேறு உயர் பதவிகளில் சிறந்து விளங்கு கின்றமையானது யாவருக்கும் பேருவகை தருகின்றது.

இப்பாடசாலையில் கல்வி கற்ற பழைய மாணவர்கள் பரந்துபட்ட பிரதேசங்களில் பல்வேறு உயர் பதவிகளில் சிறந்து விளங்குகின்றமையானது இவ்வித்தியாலய அன்னையின் புகழினைப் பறைசாற்றி நிற்கின்றது.

இந்நூற்றாண்டு மலரானது பழைய மாணவர் சங்கத்தின் முன்னோடிச் செயற்பாடுகளினாலும் அபிவிருத்திச் சங்கத்தின் ஒத்துழைப்புடனும் சிறப்புடன் வெளிவருவது பாராட்டுக்குரியதொன்றாகும்.

இவ்வித்தியாலய மாணவர்கள் பொதுப்பரீட்சை, இணைபாடவிதான செயற்பாடுகள், விளையாட்டுத்துறை என்பனவற்றில் முன்னேற்றம் கண்டுள்ளார். எனினும் இவை மென்மேலும் வளர்ச்சி பெற்று ஓர் உரிய இடத்தினைப் பெறுவதற்கும் இன்றைய நவீனயுகத்திற்கமைய விஞ்ஞான தகவல் தொழில் நுட்பத்தில் முன்னேற்றம் கண்டு இவ் வித்தியாலயம் ஆனது மென்மேலும் வளர்ச்சி பெற இறைவன் அருள் புரிவாராக.

**இரா.வசந்தகுமார்,**
**அதிபர்,**
**யா/நவாலி மகா வித்தியாலயம்.**

**மலரமைப்பு :- S,சுஜிதரன்**

## ஆசியுரை



நூற்றாண்டு விழாவைக் காணும் எமது நவாலி மகாவித்தியாலயத்தை வாழ்த்துவதில் பேருவகை கொள்கின்றேன். "கற்றாங்கு ஒழுகு" என்ற விருதுவாக்கிற் கேற்ப கற்ற கல்வியில் இருக்கும் அறநெறிக் கோட்பாடு களுக்கு அமைய எமது மாணவச் செல்வங்களை ஒழுக வைத்து அறத்திலும் தர்மத்திலும் எமது சமயப் பாரம் பரியங்களுக்கேற்ப பாகுபாடு இன்றி பரந்த மனப்பான்மை யோடு செயற்படுவதையிட்டு நான் மகிழ்ச்சி யடைகின்றேன்.

சோமசுந்தரப்புலவர் கற்றுக்கொடுத்த பாடசாலையில் எமது பிள்ளைகள் பிள்ளைத்தமிழின் பக்தி மார்க்கத் தையும், மெய்யியலையும் உளவியலையும் கற்று தமிழ் மணம் கமழ "உருவாகு உருவாக்கு" என்னும் கோட் பாட்டிற்கேற்ப பாடசாலைச் சமூகம் வளர்ச்சியடைந்து க.பொ.த உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு கல்வியில் முன்னேற்றம் கண்டுள்ளது. இந்த வளர்ச்சி யானது ஆலமரவிழுதுகள் போல பல துறைகளிலும் முன்னேறி சிறந்தொரு எதிர்காலச் சந்ததியை உருவாக்க ஆசிக்கின்றேன்.

பண்டிதர் தம்பையா கண்ட கனவு நனவாக போரின் வடுக்கள் ஆறி அனைத்தும் நாம் கற்றபாடத்தால் உலகுசார் அரசியல் நிலைமையோடும் தொழில்நுட்ப தொடர்பாடல் கணனி வளர்ச்சியோடும் மீண்டும் கட்டியெழுப்பும் முகமாகத் தமிழினம் மீண்டும் எழுந்து நிற்க பிரார்த்திக்கின்றேன்

**அருட்பணி.யோ.ப.ஜோதிநாதன்,**
**பங்குத்தந்தை, ஆனைக்கோட்டை, நவாலி.**

## வாழ்த்துச் செய்தி



வலிகாமம் வலயத்தில் நீண்ட ஆயுள் கொண்ட புகழ் பூத்த பாடசாலைகளுள் நவாலி மகாவித்தியாலயமும் ஒன்று. நவாலியூர் என்றால் தமிழ் பேசும் மக்கள் அனை வரதும் உள்ளத்திலும் தோன்று பவர் "தங்கத் தாத்தா" என அன்புடன் அழைக்கப்படும் சோமசுந்தரப்புலவஸ்ரீ அத்தகைய சான்றோர் தோன்றிய கிராமத்தில் வாழும் மக்கள் தூரநோக்கு சிந்தனையுடன் இற்றைக்கு-நூறு ஆண்டுகளுக்கு முன்னரே பாடசாலை அமைத்துத் தம் மக்களை நெறிப்படுத்தியமை பாராட்டிற்குரிய ஒன்றாகும். தமிழ்ப் புலமைமிக்க சான் றோர்களின் இயல்பூக்கத்தினால் ஆக்கப்பட்ட இப் பாடசாலை காலத்திற்குக் காலம் ஏற்பட்ட பல்வேறு பயங்கர யுத்த சூழலுக்கும் இடையில் தன்னிலை குன்றாமல் நிமிர்ந்து நிற்கின்றது என்றால் அதனை ஆரம்பித்தவரின் உள வலிமையையே துல்லியமாக எடுத்துக் காட்டுகின்றது.

இப்பாடசாலையில் கற்றுத் தெளிந்த அறிஞர்களும் பாடசாலை நிர்வாகத்தினரும் ஒன்றிணைந்து வெளியிடும் நூற்றாண்டு விழா மலருக்கு ஆசி வழங்குவதில் பெருமகிழ் வடைகின்றேன். எல்லாம் வல்ல இறைவன் மேலும் மேலும் இப் இப்பாடசாலை சிறந்து வளர்ந்தோங்க நல்லருள் புரிவாராக.

**திரு.ப. விக்னேஸ்வரன்,**
**மாகாணக்கல்விப் பணிப்பாளர்,**
**மாகாணக் கல்வித் திணைக்களம்,வடமாகாணம்.**

## வாழ்த்துச் செய்தி



"தங்கத்தாத்தா" என அழைக்கப்படும் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் உதித்த நவாலியூருக்கு நூற்றாண்டு காலக் கல்வியினை கொடுத்துக் கொண்டிருக்கும் யா/ நவாலி மகாவித்தியாலயம் இன்று தனது நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடுவது யாவருக்கும் ஒரு மகிழ்ச்சியான விடயமாகும். பண்டிதர் தம்பையா அவர் களால் "பார்வதி வித்தியாலயம்" என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட்ட இவ்வித்தியாலயம் இன்று ஒரு பெருவிருட்சமாக வளர்ந்து யா/ நவாலி மகாவித்தியாலயம் என்ற பெயருடன் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடும் இச்சந்தர்ப்பத்தில் அதன் வரலாற்றினை தாங்கி வரும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்கக் கிடைத்த சந்தர்ப்பத்தினையிட்டு மிக மனமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஆரம்பப் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டுப் படிப் படியாக தரம் உயர்த்தப்பட்டு 1C பாடசாலையாக விளங்கு கிறது. இடையில் சில தடங்கல் ஏற்பட்ட போதும் தற்போதைய அதிபர் திரு.இரா.வசந்தகுமார் பொறுப்பேற்றவுடன் அவரது அயராத முயற்சியினால் மீண்டும் க.பொ.த (உயர்தர) வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு இன்று புதுப் பொலிவுடன் விளங்குகிறது. நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடும் இச்சந்தர்ப்பத்தில் இப்பாடசாலையானது மென்மேலும் வளர்ச்சிகண்ட பாடசாலையாக விளங்க வேண்டும் என வாழ்த்திநிற்கின்றேன்.

**திரு.சி.கந்தசாமி,**
**கோட்டக்கல்விப் பணிப்பாளர்,சண்டிலிப்பாய்.**

## வாழ்த்துச் செய்தி



1910 ஆம் ஆண்டில் நவாலியில் வாழ்ந்து வந்த சமூகநல முன்னோடி பண்டிதர் தம்பையா அவர்களின் பரோபகாரச் சிந்தனையின் செயல் வடிவமாக யா/ நவாலி மகா வித்தியாலயம் தோற்றம் பெற்றுத் தனது சமூகத்தின் நூற்றாண்டு கால வளர்ச்சிக் கோலங்களில் ஆழமாகத் தடம் பதித்து உயர்வு பெற்று விளங்குகின்றது. இப் பாடசாலையின் நூற்றாண்டு/ஞாபகார்த்த மலருக்கு எனது நல்லாசிகளை நல்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இப்பாடசாலையின் வளர்ச்சிக் கட்டங்களில் முதன்மையானவர் தமிழ் மக்களின் ஜனரஞ்சகமான புலவரான நவாலியூர் சோமசுந்தரப் புலவராவார். இவரது புலமைப் பண்புகள் யாவும் ஆசிரியர் சேவையினூடாக இப் பாட சாலையில் சங்கமித்துப் புலமைசார் மாணவர் பரம்பரை செம்மையுற்றுச் சமூகத்தின் விடி வெள்ளிகளாகத் திகழச் செய்தன.

இந்நூற்றாண்டு விழாவானது வித்தியாலயத்தில் கடந்தகால வரலாறுகளை சீர்தூக்கிப் பார்த்து இரண்டாவது நூற்றாண்டில் தடம்பதிக்கும் இவ் வேளையில் எதிர்கால நிகழ்வுகளின் பசுமையான எண்ணங்களை செயல்வடிவம் பெறச்செய்வதற்கு உந்துசக்தியாக இருக்கவேண்டும் என எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**திரு.சு. சுந்தரசிவம்,**
**பிரதிக்கல்விப் பணிப்பாளர்,**
**வலிகாம வலயம்.**

# நல்வாழ்வு வாழவேண்டி நவராத்திரி நன்னாளில் சக்தியைப் போற்றுவோம்



## நவராத்திரி தின சிறப்புக் கட்டுரை

மக்களாகப் பிறந்த எமது வாழ்வு முழுமையானதாக அமைய வேண்டு மெனின் அதற்கு கல்வி, செல்வம், வீரம் ஆகிய மூவகைச் சிறப்புக்களும் நன்றாக அமைய வேண்டும். இம் முன்று செல்வங் களும் சக்தி வடிவான துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி ஆகிய இறையருட் சக்தியினாலே தான் எமக்கு கிடைக்கின்றது.

இதனை நம் சமயச்சான்றோர் வருடந் தோறும் புரட்டாதி மாதத்திலே வரும் நவராத் திரி தின வழிபாடுகள் மூலம் சிறப்பித் துள்ளனர். இந்த நவராத்திரி தினங்கள் புரட்டாதி மாத அமாவா சையின் மறுநாட் பிரதமை முதல் தசமி வரை கொண்டாடப் படும்.

இந்தச்சக்தி வழிபாட்டிலே முதல் முன்று தினங்களும் வீரம் வேண்டித் துர்க்கா தேவியையும், அடுத்த மூன்று தினங்களும் செல்வம் வேண்டி மகாலட்சுமியையும், இறுதி மூன்று தினங்களும் கல்வியை வேண்டி சரஸ்வதியையும் பத்தாம் நாளாகிய விஜய தசமி அன்று முச்செல்வங்களையும் பெற்று வாழ்க்கையில் வெற்றியுடன் வாழவும் இதற்கு எதிரி யான,பகைமையான, கோழைத்தனம், தரித்திரம், மூடத் தனம் ஆகிய அசுரத்தனத் தை அழித்து வெற்றி வாழ்வு வாழ வும் விஜயதசமி வழிபாட்டினையும் கொண்டாடு கின்றோம்.

மேலும் நம் வாழ்க்கைக்கு அத்தியாவசி யமான சக்தி கடாச் சரத்தைப் புரட்டாதி மாதத்திலே ஏன்? கொண்டாடுகின்றோம் எனில் சூரிய பகவான் புரட்டாதி மாதத்திலே கன்னி இராசியிற் பிரவேசிப்பதும் கன்னி இராசியிற் புதன்கிரகம் ஆட்சி பெற்றிருப்பதும் இப் புதன் புத்திகாரகனாகச் சகல கலைகளை யும் அறிந்து கொள்ளவும் அறிவாற்றலைப் பெருக்கவும் காரணமாய் இருந்து வளர்பிறைத் திதி யிற் புதன் கன்னி இராசியிற் சஞ்சரிக் கும் காலத்தில் வழி பாடுகள் செய்வது எமது சக்தியையும் அறிவாற்றலை யும் வளர்க்கமுடி யும்என் பதனாலாகும். இக் காலத்திலே தான் உலக மாதாவாகிய அன்னை பராசக்தியும் ஈசுவர கடாட்சம் வேண்டி நோன்பிருந்தார்.

சிறப்பு மிக்க புரட் டாதி மாத வளர்பிறைத் திதியில் சக்தி வழிபாடுகள் செய் வதுடன் விஜயதசமத்தினமாகிய பத்தாம் நாள் ஏடு தொடக் குதல், பல்வேறு கலைகளையும், தொழில்களையும் ஆரம் பித்தல் போன்ற வாழ்வியற் சிறப்பு நிகழ்வுகளையும் மன நிறைவுடனும் நம்பிக்கையுடனும் முன்னெ டுத்து அன்னை பராசக்தியை வழிபாடுகள் செய்கின்றோம்.

மேலும் புரட்டாதி மாதம் கன்னி மாதம் என்பதிலும் நவ ராத்திரியாக ஒன்பது தினங்கள் கொண்டாடப்படுவதாலும் ஒன் பது கன்னிப் பெண்களுக்கு புத்தாடை, அணி கலன் கொடுத்தும், மஞ்சள், குங்குமம் கொடுத்தும் வழிபாடுகள் செய்வார்கள்.

தை பிறந்தால் வழி பிறக்கும் எனத் தைத் திங்களைச் சிறப்பிப்பது போன்று புரட்டாதி மாதம் புதுவாழ்வு தரும் எனும் நம்பிக்கை யுடன் இந்த மாதத்தினையும் வழிபாட்டிற்குரிய நன் மாதமாக கருதிக் கிரக வழிபாடுகளும் மாளய சிரார்த்தத்தின் மூலம் பிதிர் வழிபாடு களும் எல்லாவற்றிற்கும் மேலாக சக்தி வழிபாடுகளும் செய்து மக்கள் மனநிறை வடைகின்றார்கள்.

மகாகவி பாரதியாரும் சர்வமும் சர்வ மயம் .அனைத்து உயிர் களையும் அகிலத்தையும் ஆட்டிப்படைப்பவள் அன்னை பராசக்தியெனப் போற்றி .

"எங்கெங்கு காணினும் சக்தியடா " என்று வியந்து பாடினார் . பெருமைக்குரிய சக்திக்கு, ஆற்றலுக்கு,வல்லமைக்கு எடுக்கும் நன்றிப் பெருவிழாவே நவராத்திரி விழாவாகும் .

வையக மக்கள் வாழ்வாங்கு வாழ வேண்டிய தனலட்சுமி, தான்ய லட்சுமி, வீரலட்சுமி, விஜயலட்சுமி, வித்யாலட்சுமி, சந்தானலட்சுமி, சௌபாக்யலட்சுமி, ஜெய லட்சுமி எனும் அட்ட ஐஸ்வர்யங்களை யும் தருபவளாக அன்னை பராசக்தி விளங்குகின் றாள்.எனவே தான் நாம் உலக வாழ்விற்கு குறைவற்ற நல்வாழ்வு வாழ நவராத்திரி நன்நாட்களில் துர்க்கை, லட்சுமி, சரஸ்வ தியாக எல்லாம் வல்ல அன்னையை வழிபட்டு நல்வாழ்வு காண்போம்.

நீர்வைமணி

# பாதுகாப்புக்கு அடுத்தபடியாக கல்விக்கே கூடுதல் நிதி ஒதுக்கீடு

## ஜனாதிபதி தெரிவிப்பு

பாதுகாப்புக்கு அடுத்தபடியாக அர சாங்கம் அதிகளவு நிதியை கல்விக்கே செலவிட்டுவருவதாகவும் பில்லியன் கணக் கில் நிதியினை ஒதுக்கி வருவதாகவும் ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

கம்பஹா பண்டாரநாயக்க வித்தியால யத்தில் 350 இலட்சம் ரூபா செலவில் புதி தாக நிர்மாணிக்கப்பட்டுள்ள நீச்சல் தடாகத் தினை உத்தியோகபூர்வமாக அங்குரார்ப் பணம் செய்து வைத்து உரையாற்றுகை யிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்வித்துறையை முன்னேற்றுவதில் அரசாங்கம் மிகுந்த கவனம் செலுத்தி வருவதாகவும் கடந்த வருடத்தில் பெரு மளவு ஆசிரியர்களை நாடளாவிய ரீதியில் புதிதாக நியமித்துள்ளதையும் சுட்டிக்காட்டி னார்.

எல்லாவற்றிற்கும் மேலானது மன மகிழ்ச்சியே. எமது பிள்ளைகளுக்கு கல் வியை வழங்குவதில் நாம் மட்டற்ற மகிழ்ச் சியடைகிறோம் எனவும் அவர் தெரிவித் தார். (ஸ்ரீ-2)


## மக்கள் வங்கி அறிவித்தல்

### அடகு நகைகள் பகிரங்க ஏல விற்பனை

யாழ்.பிரதேசத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளைகள், சேவைநிலையங் களில் 30.09.2009 இற்கு முன் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் எதிர்வரும் 10.10.2010 அன்று பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என முன்னர் அறி விக்கப்பட்டிருந்தது. மேற்படி ஏலவிற்பனை தவிர்க்க முடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிராந்திய தலைமையலுவலகம்,
யாழ்ப்பாணம்.
2010.10.08

(C-1377)


# வேலணைப் பகுதியில் தீவிர டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

(வேலணை)

வேலணைப் பிரதேச சபையினரும் சுகா தாரப் பிரிவினரும் இணைந்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடு பட்டுள்ளனர்.

டெங்குநோய் தொற்றுக்குள்ளாகி பெண்ணொருவர் மரணமடைந்ததையிட்டு இந் நடவடிக்கை முடுக்கி விடப்பட்டுள்ளது.

டெங்கு ஒழிப்பின் ஒரு கட்டமாக அப் பகுதிகளில் ஒலிபெருக்கி மூலம் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு பிரசாரமும் நடை பெற்று வருகிறது.

அத்துடன் டெங்கு நுளம்பு பரவக்கூடிய பகுதிகளை இனங்கண்டு புகையூட்டல் நட வடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

(ஸ்ரீ-2)

## பீப்பிள்ஸ் லீசிங் நிறுவனத்தினால்

# இந்தியாவில் இருந்து பேருந்துகள் இறக்குமதி

பீப்பிள்ஸ் லீசிங் நிறுவனம், 26 மில்லியன் அமெரிக்க டொலர் பெறு மதியான பிரயாணிகள் போக்குவரத்து பேருந்துகளை இறக்குமதி செய்வதற்கான உடன்படிக்கை ஒன்றை இந்தியாவின் அசோக் லேலண்ட் நிறுவனத்துடன் ஒப் பந்தம் ஒன்றை செய்துள்ளது.

ஒரு வருட காலத்துக்கு செல்லுபடியாகும் இந்த உடன்படிக்கை மூலம் 1000 பேருந்து களை இறக்குமதி செய்ய எதிர்பார்க்கப் படுகிறது. இப்பேருந்துகள் கொழும்பு மாநகருக்கு வெளியே உள்ள பீப்பிள்ஸ் லீசிங் நிறுவனத்தின் வாடிக்கையாளர்க ளுக்கு குத்தகை அடிப்படையில் சகாய விலையில் வழங்கப்படவுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பீப் பிள்ஸ் லீசிங் நிறுவனத்தின் கிளைகள் திறக் கப்பட்ட பின்னர் பயணிகள் போக்குவரத்து பேருந்து வர்த்தகத்திற்கு பெரும் கிராக்கி நிலவியதையடுத்து தனியார் பேருந்துச் சேவைகளை நடத்துவோரில் 300க்கும் மேற்பட்டோர் பீப்பிள்ஸ் லீசிங் நிறுவனத் திடம் இருந்து பேருந் துகளைக் கொள் வனவு செய்வதற் கான பதிவுகளை மேற்கொண்டு விட்டு அவற் றைப் பெற் றுக் கொள்வதற்கு காத்திருப்பதாக பீப்பிள்ஸ் லீசிங் கம்பனியின் யாழ்ப்பாண முகாமையாளர் ரி.கே. ஆனந்த ராஜா தெரிவித் தார். (ஸ்ரீ-2)


## பாராட்டி வாழ்த்துகிறோம்

சத்திஸ்வரன்–மலர்விழி தம்பதியினரின்



செல்வப் புதல்வன்

**ச.பிரவீணன்**

(யா/அச்சுவேலி மத்திய கல்லூரி)

2010 ஆம் ஆண்டு 5 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையில்
169 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்தமையிட்டு
மகிழ்ச்சியடைவதுடன், பல்கலைகளும் பெற்று
பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென
வாழ்த்துகின்றோம்.

நெல்லியடி,
கரவெட்டி.

வாழ்த்துவோர்:
சி.சிறிவிமலகாந்தன் (மாமா)

(சீ/1366)




இலங்கை வங்கியின் யாழ்.உயர்தரக்கிளையில் துரித கதி பணப்பரிமாற்றம் (Money Gram) மூலம் வெளிநாட்டிலிருந்து பணம் வரப் பெற்ற வாடிக்கை யாளர் ஒருவர் பிரதான முகாமையாளரிடமிருந்து தமக்கான பரிசினைப் பெறுவதைப் படத்தில் காணலாம். அருகில் வாடிக்கையாளர் சேவை முகாமையாளரும் செயற்பாட்டு முகாமையாளரும் காணப்படுகின்றனர்.



# அயோத்தி தீர்ப்பு எதிரொலி!

இந்து அமைப்புகளுக்கு இரண்டு பங்கு, முஸ்லிம் அமைப்புகளுக்கு ஒரு பங்கு என பாகம் பிரிக்கப்பட்ட சர்ச்சைக்குரிய நிலம் பற்றிய அயோத்தி தீர்ப்பு வந்தவுடன் இந்திய முஸ்லிம்களிடம் விரக்தி ஏற்பட்டது. உலகில் முஸ்லிம்கள் இரண்டாவது அதிக எண்ணிக்கையில் உள்ள இந்தியாவில் தாங்கள் இரண்டாவது குடிமக்களாகிவிட்டோமோ, பெரும் பான்மை மக்களின் குரல் தான் இந்தியாவின் தீர்மானிக்கும் சக்தியாக இருக்கிறதோ என்ற பயமும் அவர்களுக்கு வந்தது.

முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்தவரான பிரபல வரலாற்று அறிஞர் இர்பான் ஹபீப், "இந்திய தொல்லியல் துறை தன்னுடைய காபன் டேட்டிங் முறைப்படி அயோத்தியில் சர்ச்சைக்குரிய இடத்தில் ஒரு விதமான செங்கல் கட்டுமானம் பல ஆண்டுகளாக இருந்ததாகவும் கோயில்களுக்குரிய தூண்கள் இருந்ததாகவும் சொல்லியிருக்கிறது.

அதே மாதிரியான தூணின் வடிவத்தை விஸ்வ இந்துபரிஷத் கண்டெடுத்ததாக நீதிமன்றில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், காபன் டேட்டிங் முறைப்படி இதுவரை அந்த இடம் ஒரு இலட்சத்து 78 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் அங்கே தான் இராமர் பிறந்தார் என்றோ அப்போதே கோயில் இருந்தது என்றோ சொல்ல முடியாது. எனவே, இந்த ஆய்வின் அடிப்படையில் முடிவுக்கு வந்தது தவறு" என்று ஓங்கி அடித்தார்.

அருண்ஜெட்லி



முலாயம் சிங் யாதவ்



மோகன் பகவத்



இர்பான் ஹபீப்



அன்சாரி



காங்கிரஸ், பா.ஜ.க, தி.மு.க, அ.தி.மு.க, சி.பி.எம் உள்ளிட்ட பல கட்சிகளும், இது அனைவருக்கும் பொதுவான தீர்ப்பு என்று சொல்லிக்கொண்டிருந்த நிலையில், சமாஜ்வாடி கட்சித் தலைவர் முலாயம்சிங் யாதவின் குரல் கோபமாக ஒலித்தது. "இந்தத் தீர்ப்பு முஸ்லிம்களுக்கு எதிரானது.முஸ்லிம்கள் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள்" என்றார்.

அயோத்தி தீர்ப்பிற்குப் பின்னர் அரசியல் வட்டாரத்தில் முதன் முறையாக அதிர்வு உண்டானது. பா.ஜ.க., மாயாவதி ஆகியோர் முலாயமின் குரலுக்கு எதிர்ப்புத் தெரிவித்ததுடன், உ.பி.யில் உள்ள முஸ்லிம் தலைவர்கள் சிலரும், "இந்தக் கருத்து மோதலுக்கு வழி வகுக்கும்" என்றனர்.

டில்லியில் ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் தலைமையில் ஒரு சிந்தனை அமர்வு நடைபெற்றது."இது நமக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றி. கோயில் கட்டுவதற்கான உரிமையை இந்தத் தீர்ப்பு அங்கீகரித்திருக்கிறது. அதனால் சர்ச்சைக்குரிய நிலம் முழு வதையும் நம் பக்கம் கொண்டு வருவதுடன் அதைச் சுற்றியுள்ள இடங்களையும் வசப்படுத்த வேண்டும். இந்தத் தீர்ப்பை எதிர்த்து 90 நாளில் முஸ்லிம்கள் தரப்பில் உயர்நீதிமன்றிற்கு போகமுடியும். அதற்குள்ளாக முஸ்லிம் சார்பில் மனுத்தாக்கல் செய்த அன்சாரியையும் சன்னி வக்ஃப் போர்டையும் சமாதானப்படுத்த வேண்டும்" என்று அங்கு பேசப்பட்டது. இதற்காக அகில பாரதிய அக்காரா பரிஷத்தைச் சேர்ந்த கியான்தாஸ் என்பவரிடம் பகவத் பேசினார்.

91 வயதாகும் டெய்லரான அன் சாரியை சர்ச்சைக்குரிய இடத்தில் உள்ள ஹனுமந்த் கோயிலுக்கு அழைத்தார் கியான்தாஸ். நீதிமன்றிற்கு வெளியே பேசித் தீர்த்துக்கலாம் என்று கியான்தாஸ் சொல்ல, சரி என்றிருக்கிறார் அன்சாரி.

**நக்கீரன்**

ஆனால், இந்த சமாதான முயற்சியை வக்ஃப் போர்டு ஏற்கத் தயாராக இல்லை. இந்துத்வா அமைப்புக்கள் எப்படியாவது நீதிமன்றுக்கு வெளியே இந்தப் பிரச்சினையைத் தீர்த்து, அயோத்தியில் இராமர் கோயிலை கட்டவேண்டும் என்பதில் உறுதி காட்டுகிறது.

இதற்காக பா.ஜ.க பொதுச் செயலாளர் அருண் ஜெட்லி , முஸ்லிம் தனிநபர் சட்ட வாரியத்தைச் சேர்ந்த இலியாஸிடம் பேசினார். சட்ட வாரியத்தின் செயற்குழுவில் தான் எந்த முடிவும் எடுக்கப்படும் என ஜெட்லியிடம் இலியாஸ் சொல்லிவிட்டார். இதற் கிடையே, "முஸ்லிம் சட்டவாரியம் இப் பிரச்சினையில் தலையிட உரிமை கிடையாது"என சன்னி வக்ஃப் போர்ட் தெரிவித்துள்ளதுடன் உயர்நீதிமன்றம் அப்பீலுக்குச் செல்வதற்கு ஆயத்தமாகி வருகிறது.

மத்தியில் ஆளும் காங்கிரஸ் தரப்போ இந்து - முஸ்லிம் இருதரப்பிலும் நல்ல பிள்ளை என்ற பெயரை எடுப்பதற்கான வேலைகளில் இறங்கியுள்ளது. இந்து தரப்புக்கு ஆதரவான இந்தத் தீர்ப்பு பீகார் உள்ளிட்ட வடமாநிலங்களில் நடக்கும் சட்டமன்றத் தேர்தல்களிலும் அடுத்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலிலும் காங்கிரசுக்கு சேதாரத்தை ஏற்படுத்தாமல் இருக்கும் என நினைக்கும் காங்கிரஸ் மேலிடம் அதே நேரத்தில் முஸ்லிம்களின் பாரம்பரியமான வாக்குகளை இழந்து விடக்கூடாது என்பதிலும் கவனமாக இருக்கிறது. "அயோத்தி தீர்ப்பினால் பாபர் மசூதி இடிக்கப்பட்டது. நியாயப்படுத்த வில்லை. மசூதி இடிப்பு என்பது கிரிமினல் செயல்" என்றார் உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம். இதற்கு பா.ஜ.க. தரப்பிலிருந்து எதிர்ப்புக் குரல் எழுந்துள்ளது. நீதிமன்றில் உள்ள பாபர் மசூதி இடிப்பு வழக்கு பற்றி ப.சிதம்பரம் எப்படி பேசலாம் என இந்துத்வா அமைப்புகள் குரல் எழுப்புகின்றன.

அயோத்தி தீர்ப்பின் அடிப்படையில் அரசியல் காய் நகர்த்தல்கள் ஒருபுறம் நடந்து கொண்டிருக்க , நீதிமன்றுக்கு வெளியே இந்தப் பிரச்சினையை இந்து தரப்பிற்கு ஆதரவாக முடிப்பதற்கு பா.ஜ.க. உள்ளிட்ட இந்துத்வா அமைப்புகள் தீவிர முயற்சியில் இருக்கின்றன. காங்கிரஸின் இரகசிய விருப்பமும் அதுதான் என்கின்றன டில்லி வட்டாரங்கள்.

# சட்டவிரோத கடற்பயணங்களைத் தடுக்க கனேடிய குடிவரவு சட்டம் கடுமையாக்கப்படும்

## கனேடிய பிரதமர் அறிவிப்பு

இலங்கைத் தமிழர்கள் சட்டவிரோத கடற் பயணங்களை மேற்கொண்டு கனடா வரு கின்றமையைத் தடுக்கும் வகையில் குடிவரவு சட்டத்தை வெகுவிரைவில் கடுமையாக்கப் போவதாக கனேடியப் பிரதமர் ஸ்ரீபன் ஹாபர் தெரிவித்துள்ளார்.

ஓசியன் லேடி கப்பலில் கடந்த வருடம் 76 இலங்கைத் தமிழர்கள் கனடா வந்திருந்த துடன் எம்.வீ.சன்.சீ.கப்பலில் கடந்த ஓகஸ்ட் மாதம் மேலும் 492 இலங்கைத் தமிழர்கள் வந்துள்ளார்கள்.

இன்னும் ஒரு கப்பல் இலங்கைத் தமிழர் களுடன் கனடா நோக்கிப் புறப்பட்டிருக் கின்றது என்று நம்பப்படுகின்றது. இந் நிலை யிலேயே கனேடிய பிரதமர் நேற்று இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குடிவரவு சட்டத்தில் அரசு திருத்தத்தைக் கொண்டு வரும் சட்டம் கடுமையாக்கப்ப டும்.

இச் சட்டவிரோத கடல் பயணங்களுக்கு முடிவு கட்டப்படும் என்று திட்டவட்டமாக அவர் கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

# புனர்வாழ்வு பெற்ற புலி உறுப்பினர்களுக்கு

## சுயதொழிலுக்கான கடனுதவி

(கொழும்பு)

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பி னர்கள் சுய தொழில்களை ஆரம்பிப்பதற் கான உதவிகளைச் செய்து கொடுக்க நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய 4% வட்டியின் கீழ் அவர் களுக்கான கடன் உதவிகளை வழங்குவதற் குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகப் புனர்வாழ்வு ஆணையாளர் நாயம் சுதந்த ரணசிங்க குறிப்பிட்டார்.

அரச வங்கிகள் ஊடாகச் சுயதொழில் திட்ட அறிக்கையைச் சமர்ப்பிப்பதன் மூலம் கடன் உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியு மென அவர் சுட்டிக்காட்டினார்.

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர்களுக்கு கடன் வழங்கும் திட்டத் தை ஒருங்கிணைப்பதற்காக வவுனியாவில் அலுவலகமொன்று திறந்து வைக்கப்பட்டுள் ளதாகவும் இந்தத் திட்டத்தின் கீழ் முதற் கட்ட மாக 25 ஆயிரம் ரூபா கடன் உதவி வழங் கப்படுமெனப் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார்.

புனர்வாழ்வு நிலையங்களில் இருந்த முன்னாள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு உறுப்பினர்களுக்கு ஏற்கனவே பல்வேறு துறைகளில் தொழிற் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் அவசரகால சட்டவிதிகளை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## நல்லிணக்க ஆணைக்குழுவில் ஹரிம் பீரிஸ் சாட்சியம்

(கொழும்பு)

யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் அவசரகால சட்டவிதிகளை நீக்குவது அவசியமாகும். இல்லாவிடின் அவசரகால சட்டத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் அமைதியான நாடு இலங்கை என்ற பெயர் இலங்கைக்கு ஏற்பட்டு விடும். அத்துடன் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுக்கள் நடத்தப்படுவது அவசியமாகும் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் முன்னாள் ஊடகப் பேச்சாளர் ஹரிம் பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச கற்கைகளுக்கான நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கற்றுக்கொண்ட பாடங்களும் அனுபவங்களும் தொடர்பான தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணை அமர்வில் கலந்துகொண்டு சாட்சியமளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில், யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் இன்னும் அமுல்படுத்தப்பட்டு வருகின்ற அவசரகால சட்டவிதிகளைநீக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இருக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தப்பட வேண்டும் என்பதுடன் விரைவாக வடக்கில் மாகாண சபைத் தேர்தலை நடத்தி அங்கு மாகாண சபையை நிறுவவேண்டும்.

நாட்டின் ஏனைய பகுதிகளில் அமுல்படுத்தப்படுகின்ற அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் வடக்கிலும் அமுல்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மூன்று தசாப்தங்களாக நிலவிய யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ள நிலையில் தற்போது கடந்த கால காயங்களை ஆற்றவும் முன்னோக்கி பயணிக்கவும் இலங்கைக்கு சிறந்த சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

மூன்று தசாப்தகால இன முரண்பாடு முடிவுக்கு வந்துள்ளது. பூகோளவியல் ரீதியாக நாங்கள் நாட்டை ஒன்றிணைத்துள்ளோம்.

ஆனால் சமூகங்கள் ரீதியாகவும் ஒன்றிணைக்க வேண்டிய தேவை உள்ளது. பிரிந்திருந்த நாட்டை இராணுவ நடவடிக்கைகள் மூலம் இணைந்துள்ளோம். தற்போது மக்களின் மனதை வெல்வதற்கு முயற்சிக்க வேண்டும். அதாவது தேசிய நல்லிணக்கம் ஊடாக மக்களை ஒன்றிணைக்க முயற்சிக்க வேண்டும்.

மஹிந்த சிந்தனை வேலைத் திட்டத்துக்கு இவ் வருடத்தில் ஜனாதிபதி மக்களிடம் ஆணையைப் பெற்றுக்கொண்டார். அந்த வகையில் மஹிந்த சிந்தனையில் விரைவாக வடக்கில் மாகாண சபையை நிறுவுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஜனாதிபதி தேர்தல் முடிவடைந்து சுமார் 10 மாதங்கள் கடந்தும் இதுவரை வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவில்லை.

மேலும் மஹிந்த சிந்தனை வேலைத் திட்டத்தில் சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் செயற்பாடுகள் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே விரைவாக அந்தக் குழுவின் அறிக்கை வெளியிடப்பட வேண்டும் என்பதுடன் அது தொடர்பில் கலந்துரையாடப்படுவது அவசியம்.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் படிப்படியாக அகற்றப்படும் என்று மஹிந்த சிந்தனை வேலைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் யுத்தம் முடிவடைந்து ஒரு வருடம் நான்கு மாதங்களும் கடந்து விட்ட நிலையில் புலிகளின் ஆட்டிலறி தாக்குதல்களை தடுக்கும் நோக்கில் அமைக்கப்பட்ட பாதுகாப்பு வலயங்கள் இன்னும் அவ்வாறே உள்ளன. எனவே இது தொடர்பில் அவதானம் செலுத்தப்படுவது அவசியமாகும்.

அத்துடன் மீள்குடியேற்றப்படும் மக்களுக்கு 50 ஆயிரம் ரூபா நிதியும் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான கட்டடப் பொருட்களும் நீண்ட கால ரீதியில் மூன்று இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும் என்றும் மஹிந்த சிந்தனை வேலைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அவ்வாறு அந்த மக்களுக்கு நிதி வழங்கப்படுகின்றதா? என்ற கேள்வி எழுகின்றது.

வடக்கு- கிழக்கில் யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகள் விரைவாக நிறைவேற்றப்பட வேண்டும். அப்பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படுவது அவசியமாகும். மேலும் தனியார் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் வடக்கு- கிழக்கு மாகாணங்களில் ஊக்குவிக்கப்பட வேண்டும். அதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்படுவது அவசியம் என்பதனை தெரிவிக்கின்றேன்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட துறைகளில் விரைவான முன்னேற்றம் அவசியம் என்பதுடன் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்பட வேண்டும் வடக்கு- கிழக்கு மாகாணங்களின் மக்களின் மனங்களை வெல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டாக வேண்டும்.

சிவில் மற்றும் அரசியல் தலைமைத்துவங்களினால் இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது அவசியம்.

இதேவேளை வடக்கு மாகாண சபை தேர்தல் நடத்தப்பட்டு அங்கு முதலமைச்சர் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவேண்டும் என்பதுடன் வடக்கின் புனர்வாழ்வு மற்றும் நல்லிணக்க வேலைத் திட்டங்களில் அவர்களையும் இணைத்துக் கொள்ளவேண்டும்.

இதேவேளை தெரிவுசெய்யப்படாத ஓய்வு பெற்ற சிங்கள இராணுவ அதிகாரி களை ஆளுநராக நியமிப்பது வடக்கில் மீண்டும் இடம்பெறக்கூடாது.

நாட்டின் ஏனைய பாகங்களைப் போன்று அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை வடக்கிலும் அமுல்படுத்த வேண்டும் என்று யோசனை முன்வைக்கின்றேன்.

கல்வி மற்றும் பொது நிர்வாகத் துறைகளில் மறுசீரமைப்பு ஏற்பட வேண்டும். முக்கியமாக தமிழ் மக்களை அரச சேவையிலும் பாதுகாப்புச் சேவையிலும் இணைத்துக் கொள்ள வேண்டும்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்படும் நியமனங்களில் தமிழ் மக்கள் அதிகளவில் இணைத்துக் கொள்ளப் படுவது சிறந்ததாகும்.


மக்களின் தனிப்பட்ட ஜனநாயக உரிமை மற்றும் அடிப்படை உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

அதேவேளை சர்வதேச உடன்படிக்கைகளுக்கு அமைய கடப்பாடுகளை நிறைவேற்ற வேண்டும்.

கற்றுக்கொண்ட பாடங்களும் அனுபவங்களும் தொடர்பான தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணை அமர்வு அதன் தலைவர், முன்னாள் சட்டமா அதிபர் சி.ஆர்.டி.சில்வா தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் இரண்டு மணியளவில் ஆரம்பமானது. நேற்று முன்தினம் ஆணைக்குழுவின் தலைவருடன் ஐந்து உறுப்பினர்களே ஆணைக்குழு சார்பில் கலந்துகொண்டிருந்தனர். (ஸ்ரீ-2)

## மாங்காயில் அதிசயப் பிள்ளையார்!

(யாழ்ப்பாணம்)



மட்டக்களப்பு ஏறாவூர் கிராமத்தில் சிறி அதிசய விநாயகர் ஆலயம் உள்ளது.

இவ்வாலய வளாகத்தில் உள்ள மாமரத்தில் பிள்ளையார் உருவத்தினை ஒத்த மாங்காய் ஒன்று காய்த்துள்ளது.

இந்த அதிசயத்தினை பெருமளவான மக்கள் பார்த்து வருகின்றனர்.

மேற்படி ஆலயத்தின் புனர் நிர்மாணப் பணிகள் இடம்பெற்று வரும் வேளையில் இவ்வாறான அதிசயப் பிள்ளையாரின் தோற்றம் அப்பகுதி மக்களால் கண்டறியப்பட்டது.

இந்த இயற்கையான உருவ வளர்ச்சி பிள்ளையாரின் அருட்கடாட்சம் இந்த இடத்தில் கிடைப்பதாக மக்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

## புலிகளுக்கு தகவல் வழங்கிய குற்றச்சாட்டில் பொலிஸ் உத்தியோகத்தருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு தகவல்களை வழங்கிய பொலிஸ் உத்தியோகத்தரைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.


களுத்துறை பொலிஸ் நிலையத்தில் இன்ஸ்பெக்டராக கடமையாற்றிய மொஹமட் அஜ்மர் என்ற உத்தியோகத்தர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு புலனாய்வுத் தகவல்களை வழங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.


எதிர்வரும் 15 ஆம் திகதி வரையில் குறித்த சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிராண்ட்பாஸ் பொலிஸ் நிலையத்தில் கைது செய்யப்பட்ட கனகலிங்கம் நிசாந்தனிடம் திரட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில் பொலிஸ் உத்தியோகத்தர் அஜ்மர் கைது செய்யப்பட்டதாகவும் குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் தொடர்பிலான விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக பொலிஸார் நீதிமன்றில் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)



கனடாவில் உள்ள காரைநகர் மக்களின் கலாசார மன்ற ஆதரவில் காரைநகர் அபிவிருத்திச் சபையினால் நடத்தப்பட்ட புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவில் காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவர் கே.சோமசேகரம் தலைமையுரையாற்றுவதையும் யாழ்ற்றன் கல்லூரி அதிபர் த.சோமசேகரம், உதவி அரச அதிபர் இ.த.ஜெயசீலன் ஆகியோர் உரையாற்றுவதையும் தொழிலதிபர் இ.எஸ்.பி.நாகரட்ணம், சமுர்த்தி வங்கி முகாமையாளர் தி.சசிகுமார் ஆகியோர் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- காரைநகர் செய்தியாளர்)





அச்சுவேலி "தோப்பு அருள்நந்தி முன்பள்ளி" விளையாட்டுவிழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.விமலநாதன், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட ஓய்வு பெற்ற வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.இராசலிங்கம் ஆகியோர் மங்கல விளக்கேற்றுவதையும் விருந்தினர்கள், யா/தோப்பு அருள்நந்தி வித்தியாலய அதிபர், முன்பள்ளி ஆசிரியர்கள், முன்பள்ளி மாணவர்கள் ஆகியோர் நிற்பதனையும் படங்களில் காணலாம்.

# பொலிஸாரை பயன்படுத்தி தொழிற்சங்க நடவடிக்கைகளை முடக்க அரசு முயற்சி

## தொழிற்சங்க கூட்டமைப்பு குற்றச்சாட்டு

பொலிஸாரைப் பயன்படுத்தி அரசாங்கம் தொழிற்சங்க நடவடிக்கைகளை முடக்குவதற்கு முயற்சி மேற்கொண்டு வருவதாக தொழிற்சங்க கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தொழிற்சங்கங்கள் நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து போராட்டங்களை முன்னெடுக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு பொலிஸார் இடையூறு ஏற்படுத்தி வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொழிற்சங்கங்கள் எதிர்நோக்கி வரும் அடக்குமுறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து உச்சநீதிமன்றில் அடிப்படை உரிமைமீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

சுவரொட்டிகளை ஒட்டுவோரை பொலிஸார் கைது செய்து வழக்குத் தொடர்வதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

உறுதியளிக்கப்பட்ட சம்பள உயர்வை வழங்கமுடியாத அரசாங்கம் வேறுவழிகளில் தொழிற்சங்கங்களை அடக்குமுறைக்கு உட்படுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# வடக்கிற்கான சொகுசு பஸ் அனுமதிப்பத்திரத்திற்கு வருடமொன்றிற்கு ரூ.11இலட்சம் அறவீடு

கொழும்பு உள்ளிட்ட ஏனைய பிரதேசங்களிலிருந்து வடக்கு நோக்கி பயணிக்கும் அதி சொகுசு மற்றும் சொகுசு பஸ்களுக்கான அனுமதிப்பத்திரத்துக்கு வருடமொன்றுக்கு தலா 11 இலட்சம் ரூபா அறவிடப்படவுள்ளதாக அரசாங்கத் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை சாதாரண வசதிகளைக் கொண்ட சொகுசு பஸ்களிடமிருந்து வருடம் ஒன்றுக்கு தலா ஏழு இலட்சம் ரூபா அறவிடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. வடக்கில் முறையானதொரு பஸ் சேவையை நடத்தும் பொருட்டே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக மேற்படி தகவல் வட்டாரங்கள் மேலும் குறிப்பிடுகின்றன. (ஸ்ரீ-2)

# சட்டவிரோத திருமணங்களை தடுக்க விசேட நடவடிக்கை

இலங்கையில் சட்டவிரோத திருமணங்களை தடுப்பதற்கு விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. வெளிநாடுகளுக்கு குடிபெயரும் நோக்கிலும் வேறுபல தேவைகளுக்காகவும் இலங்கையில் அதிக எண்ணிக்கையிலான சட்டவிரோத திருமணங்கள் இடம்பெறுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

குறைந்த வயதுடைய சிறுவர் சிறுமியரை விவாகபந்தத்தில் இணைத்த 20 விவாகப் பதிவாளர்களின் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சட்டவிரோத திருமணங்களை தடுத்து நிறுத்தும் நோக்கில் விவாகப் பதிவின்போது தேசிய அடையாள அட்டை கட்டாயப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் காலங்களில் விவாகப் பதிவின் மூலம் திருமண பந்தத்தில் இணைந்து கொள்ளும் அனைவரும் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பிக்க வேண்டுமென பதிவாளர் நாயகம் அறிவித்துள் ளார்.

இதுவரை காலமும் விவாகப் பதிவின் போது பிறப்புச் சான்றிதமும் தேசிய அடையாள அட்டையும் கட்டாயப்படுத்தப்படவில்லை.

எனினும், அண்மைக் காலமாக திருமண வயதெல்லையைப் பூர்த்தி செய்யதா சிறுவர் சிறுமியர் விவாகப் பதிவு செய்து கொண்டுள்ளமை விசாரணைகளின் மூலம் புலனாகியுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் நோக்கில் அரசாங்கம் இந்த புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

கடவுச் சீட்டு, சாரதி அனுமதிப்பத்திரம் போன்ற ஏதேனும் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் இல்லாவிட்டால் கிராம உத்தியோகத்தர் வயதினை உறுதிப்படுத்த வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

உரிய ஆவணங்களை சமர்ப்பிக்காதவர்களுக்கு இடையில் பதிவுத்திருமணங்கள்செய்யப்படமாட்டாதென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# சன்சீ கப்பலை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை

493 இலங்கை அகதிகளை ஏற்றிச் சென்ற எம்.சீ.சன்.சீ.கப்பல் கனடாவின் நனாய்மோ கப்பற் தளத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. நேற்று அதிகாலை இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக கனேடிய இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்கான காரணம் குறித்து அதிகாரிகள் சரியான விளக்கத்தை வழங்கவில்லை.

எனினும் இந்தக் கப்பலை விற்பனை செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதாக முன்னதாக தகவல்கள் வெளியாகி இருந்தன. எவ்வாறாயினும் கப்பல் தொடர்பான விசாரணைகள் நிறைவடையும் வரையில் கப்பலை வன்குவாரில் இருந்து வெளியேற்றப் போவதில்லை எனப் பாதுகாப்பு தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் எம்.வீ.சன்.சீ. கப்பல் மூலம் கனடா சென்ற இலங்கை அகதிகளின் குடியுரிமை வழங்கல் விசாரணைகள் தொடர்ந்து இடம்பெறுகின்றன.

இதுவரையில் 30 க்கும் அதிக மானவர்களுக்கான விசாரணைகள் நிறைவடைந்து வெளியேறி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# 09.10.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

### நிகழ்வுகள்

- 1003-லெயிஃப் எரிக்சன் கனடாவில் லான்ஸ் ஒக்ஸ்மெடோஸ் என்ற இடத்தில் தரையிறங்கி, அமெரிக்காவில் காலடி வைத்த முதலாவது ஐரோப்பியர் ஆனார்.
- 1582-கிரெகொரியின் நாட்காட்டி அறிமுகப்படுத்தப்பட்டதை அடுத்து இத்தாலி, போலந்து, போர்த்துக்கல், ஸ்பெயின் ஆகிய நாடுகளில் புதிய நாட்காட்டியில் இவ்வாண்டின் இந்நாள் இடம்பெறவில்லை.
- 1604 -சுப்பர்நோவா, பால் வெளியில் கண்டு பிடிக்கப்பட்டது.
- 1760 -ஏழாண்டுப் போர்: ரஷ்யா பேர்லின் நகரைப் பிடித்தது.
- 1771 -டச்சு சரக்குக் கப்பல் பின்லாந்துக் கரையில் மூழ்கியது.
- 1799 - லூட்டின் என்ற கப்பல் நெதர்லாந்தில் 240 பேருடனும் £1,200,000 பெருமதியான பொருட்களுடனும் மூழ்கியது.
- 1804 - டாஸ்மானியா தலைநகர் ஹோபார்ட் நகரம் அமைக்கப்பட்டது.
- 1806 -பிரஷ்யா பிரான்ஸ் மீது போர் தொடுத்தது.
- 1820 -கயாக்கில் ஸ்பெயினிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 1831 -கிரேக்கத் தலைவர் இயோனிஸ் கப்பொடீஸ்ட்றியா படுகொலை செய்யப்பட்டார்.
- 1835 -கொழும்பு றோயல் கல்லூரி ஆரம் பிக்கப்பட்டது.
- 1854 - ரஷ்யாவில் செவஸ்தபோல் மீதான தாக்குதலை பிரித்தானியா, பிரான்ஸ், மற்றும் துருக்கியப் படைகள் ஆரம்பித்தன.
- 1871 - மூன்று நாட்களுக்கு முன்னர் சிக்காகோவில் பரவிய பெரும் தீ அணைக்கப்பட்டது. நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.
- 1888 - வோஷிங்டன் நினைவுச் சின்னம், அக்காலத்தில் உலகின் உயரமான கட்டடம், வோஷிங்டன் டிசியில் பொதுமக்கள் பார்வைக்குத் திறக்கப்பட்டது.
- 1910 - மாறுவேடத்தில் உலகப் பயணம் மேற்கொண்ட பின்னர் வ.வே.சு.ஐயர் புதுச்சேரி திரும்பினார்.
- 1914 - முதலாம் உலகப் போர்:பெல்ஜியத்தின் ஆண்ட்வேர்ப் நகரம் ஜெர்மனியிடம் வீழ்ந்தது.
- 1934 - யூகோஸ்லாவியாவின் மன்னன் முதலாம் அலெக்சாண்டர் கொல்லப்பட்டான்.
- 1941 - பனாமாவில் இடம்பெற்ற புரட்சியின் பின்னர் ரிக்கார்டோ டெலா கார்டியா ஜனாதிபதியானார்.
- 1962 - உகாண்டா பிரித்தானியாவிடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1963 - வடகிழக்கு இத்தாலியில் இடம் பெற்ற நிலச்சரிவில் 2ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.
- 1970 - கம்போடியாவில் கெமர் குடியரசு அறிவிக்கப்பட்டது.
- 1981-பிரான்சில் மரணதண்டனை நிறுத்தப்பட்டது.
- 1983 - ரங்கூனில் தென் கொரிய ஜனாதிபதி சுன் டூ-ஹூ வான் மீது இடம் பெற்ற குண்டுத்தாக்குதலில் அவர் உயிர்தப்பினார். நான்கு அமைச்சர்கள் உட்பட பலர் உயிரிழந்தனர்.
- 1987 -யாழ்ப்பாணத்தில் நிதர்சனம் தொலைக்காட்சி நிறுவன மற்றும் முரசொலி நாளிதழ் கட்டடங்களை இந்திய இராணுவத்தினர் தகர்த்தனர்.
- 1989 - ரஷ்யாவின வரோனியொஷ் அருகில் ஒரு பறக்கும் தட்டு இறங்கியதாக சோவியத் ஒன்றிய செய்தித்தாபனம் அறிவித்தது.
- 2001-இந்தியாவில் பாவேந்தர் பாரதி தாசனுக்கு அஞ்சல்தலை வெளியிடப்பட்டது.
- 2004 - ஆப்கானிஸ்தானில் முதற்தடவையாக ஜனநாயகத் தேர்தல் இடம்பெற்றது.
- 2006 - வடகொரியா தனது முதலாவது அணுவாயுதச் சோதனையை வெற்றிகரமாக நிகழ்த்தியது.


### பிறப்புகள்

- 1897 - எம்.பக்தவத்சலம், தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் (இ. 1987)
- 1940 - ஜான் லெனன், ஆங்கிலப் பாடகர், இசையமைப்பாளர் (இ. 1980)
- 1945 - விஜய குமாரணதுங்க, இலங்கையின் சிங்கள திரைப்பட நடிகர், அரசியல்வாதி (இ. 1988)
- 1968 -அன்புமணி ராமதாஸ், தமிழக அரசியல்வாதி

### இறப்புகள்


- 1943 - பீட்டர் சீமன், டச்சு இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1865)

**1967 - கெரில்லாத் தலைவர் சே.குவேரா, பொலிவியாவில் கைதுசெய்யப்பட்ட அடுத்த நாள் புரட்சியைத் தூண்டினார் என்ற குற்றச்சாட்டில் தூக்கிலிடப் பட்டார்.**



# மிளகாயில் பீடைகளும் முகாமைத்துவமும்

12-VII



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

# இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

ஒரு வேர்த்தொகுதியில் எவ்வளவு வேர் மயிர்கள் பரந்துபட்டு உருவாக்கியிருக்கின்றனவோ அதுவே பயிரின் செழிப்பிற்கும் வேர்த்தொகுதியின் சிறந்த தொழிற்பாட்டுக்கும் உதாரணமாகும்.

வேர்த்தொகுதியில் செழிப்பான இளம் வேர் மயிர்களில்லையாயின் அந்த வேர்த்தொகுதி உயிர்ப்பிழந்ததாகவே கருதலாம்.

**எப்படி இப்படி வரும்?**


மேலே குறிப்பிட்டதுபோன்று விளைநிலத்தில் காற்றின்றிய சுவாசம் நிகழ்த்துவதற்கான சந்தர்ப்பம் ஏற்படுவதற்கு பல காரணங்களுண்டு. அவற்றைப் பற்றி சற்று விரிவாக நோக்கினால் இவ்வாறான நோய்கள் ஏற்படுவதை வருமுன்னே தவிர்க்கலாம், தடுக்கலாம் (Preventive is better than cure).

1.பள்ளமான விளைநிலங்களில் மிளகாய், கத்தரி, தக்காளி போன்ற பயிர்களை நடுகைசெய்யும்போது உயர்த்திய பாத்திகளில் நடுகல் சிறந்தது. இரண்டு பாத்திகளுக்கிடையில் வாய்க்கால் போன்று இருப்பது மழைகூடி நீர்தேங்கி நிற்கும் போது வேர்த்தொகுதி பாதிக்கப்படும் வாய்ப்பைக் குறைத்துவிடும். இன்னும் குறிப்பாக இவ்வாறான நோய்கள் முன்னர் ஏற்பட்ட இடங்களாயின் உயர்த்திய பாத்திகளில் (Raised beds) நடுகை செய்வதை எப்போதுமே கடைப்பிடித்தல் நல்லது.

2.விளைநிலங்களில் நீர் தேங்குவதை தவிர்ப்பது அவசியம். நீர் வடிந்தோடுவதற்கான வாய்க்கால்களை குறிப்பாக மழை காலங்களில் முன்கூட்டியே வெட்டித் தயாராக வைத்திருப்பது நல்லது. பள்ளமான விளைநிலங்களாயின் எதுவுமே செய்யமுடியாதிருப்பினும் வெளிநீர் உட்புகாவண்ணம் இயன்றவரை தடுப்புக்களை அமைப்பது நல்லது.

3. பல இடங்களில் நன்றாக உக்காத கூட்டுரத்தையும், சில வேளைகளில் உடனடியான விலங்குக் கழிவுகளான சாணம் போன்றவற்றையும் இடுவதை அவதானிக்கலாம். இவ்வாறான அரைகுறையாக உக்கிய கூட்டுரத்தினால் பாதகமே தவிர நன்மை விளையாது. அரைகுறையாக உக்கிய கூட்டுரம் இன்னும் உக்கவேண்டியிருப்பதனால் அந்தப் பகுதி நீர் கூடினால் முழுமையான கான்றின்றிய சுவாசத்திலேயே இருக்கும். இது பயிர்களின் வேர்த்தொகுதிக்கு பாதிப்பையே ஏற்படுத்தும். எனவே தான் நீர் தேங்கக் கூடிய இடங்களில் அதிகளவிலான நன்றாக உக்காத கூட்டுரத்தையோ அல்லது விலங்குக் கழிவுகளையோ இடுவதை தவிர்ப்பது என்றுமே நல்லது.

4. நோயேற்படும் என அனுமானிக்கும் விளைநிலங்களில் வளரும் பயிர்களுக்கு அளவுக்கதிகமாக தழைச்சத்தினை (நைதரசன் பசளைகளான- யூரியா போன்றவற்றை) இடுவதனை தவிர்ப்பது நல்லது. அதிகமான தழைச்சத்து கிடைத்தால் தரை மேல் பகுதிகளான இலை, கிளை என்பன செழிப்பாக வளர்ச்சியடைந்திருக்கும். இதனால் தரைமேல் பகுதியிலுள்ள பயிரினது பாரம்வழமையை விட அதிகமாக இருக்கும். இதுவும் பயிரினுடைய வாடலைதடுத்து நிறுத்தப்பயன்படாது. இன்னொரு பக்கமாக நோக்கினால் எங்களூரில் சிலருக்கு உடல் பெருத்து கால்கள் சிறியதாக இருப்பதுபோல பயிரின் நிலமேல் பகுதி(Canopy) தேவைக்கதிகமான வளர்ச்சியடைவதாகவும் வேர்த்தொகுதி அதற்கிணைவாக இல்லாதிருப்பதாலும் இரண்டுக்குமிடையிலான சமநிலை பேணப்படாது இருக்கும். இதுவும் கழுத்தழுகல் நோய்த்தொற்று விரைந்து ஏற்பட அனுகூலமாயிருக்கும்.



**என்னசெய்யலாம்?**

மழை நீர் தேங்கக்கூடியதும், அதிகமான மழை பெய்யும் என எதிர்பார்க் கும் காலங்களிலும் உயர்த்திய பாத்தியில் இப்பயிர்களை வளர்ப்பதுடன் சிபார்சு செய்த அளவில் கூட்டுரம் அதுவும் நன்றாக உக்கிய கூட்டுரத்தை இடவேண்டும். தழைச்சத்தினை அதிகமாக இடக்கூடாது. இவ்வாறான சூழ் நிலையில் பயிரின் வேர்த்தொகுதிக்கு பாது காவலனாக இருக்கும் ரைக்கோடேர்மா என்னும் விவசாயிக்கு நன்மைதரும் பூஞ்சணத்தை நாற்று பரிகரித்தல் மூலமும், கன்றினைச் சுற்றி ஊற்றிவிடுவதன்மூலமும் தீய பூஞ்சணங்கள் வேர்த்தொகுதியை நெருங்குவதை ஓரளவிற்கு தவிர்க்கலாம். நோய் ஏற்பட்டபின் கப்ரான், திராம் போன்ற பூஞ்சண நாசினிகளின் பயன்பாடு பெரிதாக இருக்காது. எனவே திட்டமிட்ட பயிர்ச்செய்கையாக இது அமைய வேண்டும் என்பதை புரிந்துகொள்ள முடிகின்றது அல்லவா! (தொடரும்)

# பொன்சேகாவின் நாடாளுமன்ற பதவி பறிபோயுள்ளதாக கருதவேண்டாம்

## தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை

(கொழும்பு)

ஜனநாயக தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளும்மன்ற உறுப்பினருமான சரத் பொன்சேகாவின் பதவி பறிபோயுள்ளதாக கருதவேண்டாம் என போல் ரத்னாயக்க சட்ட நிறுவனம் நாடாளுமன்ற செயலாளர் மற்றும் தேர்தல் ஆணையாளரிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

சரத் பொன்சேகாவின் நாடாளுமன்ற பதவி பறிபோயுள்ளதாக நாடாளுமன்ற பதில் செயலாளர், தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்திருந்தமை குறித்து கவனத்தில் கொண்டு இந்தக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

சரத் பொன்சேகாவுக்கு சிவில் நீதிமன்றம் தண்டனை விதிக்கவில்லை எனவும் இராணுவ நீதிமன்றமே தண்டனை விதித்திருப்பதாகவும் தெரிவித்துள்ள குறித்த சட்ட நிறுவனம் இராணுவ நீதிமன்றம் நாட்டின் அரசியலமைப்புக்கு உட்பட்டதல்ல என சுட்டிக்காட்டியுள்ளது.

இதனால் இராணுவ நீதிமன்றம் வழங்கிய தண்டனையினால் பொன்சேகாவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை பறிக்க முடியாது எனவும் கூறியுள்ளது.

இதனால் சரத்பொன்சேகாவின் பதவி பறிக்கப்பட்டதாக கருதவேண்டாம் எனவும் போல் ரத்னாயக்க சட்ட நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளது. அதேவேளை இரண்டாவது இராணுவ நீதிமன்றத் தீர்ப்பு எதிராக சரத் பொன்சேகாவினால் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது எனவும் அந்த சட்ட நிறுவனம் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## சிறைச்சாலை ஆணையாளர் - பொன்சேகா 30 நிமிடம் பேச்சுவார்த்தை


சிறைச்சாலைகள் ஆணையாளர் வீ.ஆர்.டி சில்வாவிற்கும் ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத்பொன்சேகாவிற்கும் இடையில் 30 நிமிட பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

இச்சந்திப்பின் போது சிறைச்சாலையில் தமக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்புக் கடற்படை முகாமில் தடுத்துவைக்கப்பட்ட காலத்தில் வழங்கப்பட்ட மருத்துவ அறிக்கை ஆகியவற்றை வழங்குமாறு சரத்பொன்சேகா கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விடயம் குறித்து தாம் இராணுவத் தளபதியிடம் அறிவித்துள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். மேலும் பல விடயங்கள் குறித்தும் சரத் பொன்சேகா தம்முடன் பேச்சுவார்த்தை நடத்தியதாக அவர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)




ஊர்காவற்றுறை தம்பாட்டி கிராமப்பகுதியில் தெரிவுசெய்யப்பட்ட 200 பயனாளிகளுக்கு 5 வகையான பழமரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டன. இதில் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் தெ.கிருபைநாதன் நிகழ்வின் ஆரம்ப உரையினை ஆற்றுவதையும் SOND நிறுவன ஊர்காவற்றுறைத் திட்டப் பணியாளர் த.திருமாறன் பயனாளி ஒருவருக்கு பழமரக் கன்று வழங்குவதையும் ஊர்காவற்றுறை தம்பாட்டி கிராம மாதர் சங்கத் தலைவர் பயனாளி ஒருவருக்கு பழமரக்கன்று வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட பயனாளிகளையும் படங்களில் காணலாம்.



IOM நிறுவன நிதி அனுசரணையுடன் SOND நிறுவனத்தால் ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் நாரந்தனை, மெலிஞ்சிமுனை புளியங்கூடல் பிரதேச மீள்குடியமர்ந்த மக்களுக்கான சுகாதார மேம்பாட்டு விழிப்புணர்வுக் கருத்தரங்கு கடந்தசெப்ரெம்பர் 19;20,21,22 ஆம் திகதிகளிலும் ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட 45 சுகாதாரத் தொண்டர்களுக்கான சுகாதார மேம்பாட்டு பயிற்சி கடந்தசெப்ரெம்பர் 23,24,25 ஆம் திகதிகளிலும் நடைபெற்றன. இறுதிநாள் நிகழ்வில் சுகாதாரத் தொண்டர்களுக்கு சுகாதார மேம்பாட்டுக்கான பொருட்கள் அடங்கிய பொதியும் வழங்கப்பட்டது. இந்நிகழ்வுகளை படங்களில் காணலாம்.

# பொன்சேகாவை சங்கடத்தில் தள்ளியது எதிர்க்கட்சிகளும் அமெ.தூதரகமுமே

## அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சி அரசியல்வாதிகளும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் அதிகாரிகளுமே சரத்பொன்சேகாவை சங்கடத்தில் தள்ளியுள்ளனர். இவர்களது பேச்சினை இனியும் கேட்டுக்கொண்டிருக்காது அனோமா ஜனாதிபதியிடம் மன்னிப்புக் கோருவதன் மூலமே தனது கணவரை விடுவித்துக் கொள்ளமுடியும் என்று அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் தெரிவிக்கையில்,

சரத் பொன்சேகா என்பவருக்கு சல்யூட் அடிக்கவும் சல்யூட் வாங்கவும் மாத்திரமே தெரியும். அவருக்கு அரசியல் தெரியாது.

இருந்தும் யுத்தம் தொடர்பில் நன்கு தெரியும். ஆனாலும் அரசியல் தெரியாத ஒருவரை கொண்டு வந்து எதிர்க்கட்சிகளைச் சார்ந்தவர்கள் இவ்வாறான சங்கடத்தில் தள்ளிவிட்டுள்ளனர். இதற்கு இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின்அதிகாரிகளும் உதவி புரிந்தனர்.


சரத் பொன்சேகாவை நினைக்கும்போது எனக்கும் கவலையாக இருக்கின்றது. எதுவ்வாறு இருப்பினும் இராணுவ நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு முப்படைகளின் தளபதி என்ற வகையில் ஜனாதிபதியினால் அதற்கு ஒப்புதல் அளிக்காதிருக்க முடியாது.

இராணுவ நீதிமன்றத்தில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள சரத் பொன்சேகா விடுவிக்கப்பட வேண்டும் என்றாலோ அல்லது தனது கணவர் தனக்கு வேண்டும் என்றாலோ அனோமா பொன்சேகா ஜனாதிபதியிடம் மன்னிப்புக் கோர வேண்டும்.

எதிர்க்கட்சியினரின் பேச்சினைக் கேட்டு மன்னிப்புக்கோராதிருப்பதில் பலன் ஏதும் கிட்டப்போவதில்லை. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது கணவர் விஜய குமாரதுங்க சிறையில் இருந்த சமயத்தில் அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனவிடம் மன்னிப்பு வழங்குமாறு கோரியதையடுத்தே அவருக்கு மன்னிப்பு வழங்கப்பட்டது.

அனோமாவுக்கு தனது கணவர் வேண்டுமென்றால் மன்னிப்புக் கோருவதைத் தவிர வேறு வழிகிடையாது. வீதி வீதியாக அலைவதில் நன்மையில்லை.

சரத்பொன்சேகா சிறையில் இருக்க வேண்டியவர் அல்ல... அவர் வெளியில் இருக்கவேண் டும் என்றே நாம் விரும்புகிறோம்.



ஆனாலும் அவர் வெளியில் வருவதை எதிர்க்கட்சியினர் விரும்பவில்லை. இதனாலேயே பொன் சேகா மன்னிப் புக் கேட்கக் கூடாது என்று அனோமா ஊபாகத்தூண்டி விடு கின்றனர்.

பொன்சேகாவின் குடும்பத்தில் இருந்து எதிர்க்கட்சிகள் அரசியல் இலாபம் தேட முயற்சிக்க வேண்டாம் என்றார். (ஸ்ரீ-2)

## மணல் ஏல விற்பனை

யாழ்.நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடமையாக்கப்பட்ட மணல் கும்பிகளை எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணி தொடக்கம் மாலை 4.15 மணி வரை பகிரங்க ஏலத்தில் விடப்படவுள்ளதாக யாழ்.நீதவான் நீதிமன்ற பதிவாளர் திருமதி. வை. சிவசுந்தரம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## பொலிஸ் நடமாடும் சேவை

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டைப் பொலிஸாரினால் நடமாடும் சேவை ஒன்று இன்று காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை யாழ் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அடையாள அட்டை இல்லாதவர்கள் அதனோடு தொடர்புடைய் உரிய ஆவணங்களை அச்சுப் பதிப்பு செய்து சமர்ப்பிப்பதன் மூலம் தமது அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளலாமென வட்டுக்கோட்டை பொலிஸார் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

## 9 தமிழர்களுடன் மற்றொரு கப்பல் கனடாவை சென்றடைந்துள்ளது

(கொழும்பு)

இலங்கைத் தமிழர்களை உள்ளடக்கிய புதிய கப்பலொன்று கனடாவின் மொன்றியல் துறைமுகத்தை சென்றடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இக்கப்பல் ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான மொறக்கோவில் இருந்து புறப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இக் கப்பலிலிருந்த 9 தமிழர்கள் மொன்றியல் துறைமுகத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டிருப்பதாகக் தெரியவருகிறது.

இதேவேளை கப்பலொன்றின் மூலம் சட்டவிரோதமான முறையில் வந்திருந்த 9 வெளிநாட்டவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக கனேடிய எல்லைப் பாதுகாப்புப் படையினர் ஒப்புக் கொண்டுள்ளனர்.

ஆயினும் இவர்கள் எந்நாட்டவர்கள் என்ற விபரத்தை வெளியிட மறுத்துவிட்டனர். (ஸ்ரீ-2)

## வெளிநாட்டு விஜயங்களில் எதிர்க்கட்சியினருக்கும் சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டும்

### ஐ.தே.க.கோரிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயங்களின்போது எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

அமைச்சர் ஜீ.எல்.பீரிசிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி அமரர் ஜே.ஆர். ஜயர்வர்த்தனவின் ஆட்சிக் காலத்தில் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக்கூட்டங்களுக்கு எதிர்க்கட்சி உறுப்பினர்களும் அழைத்துச் செல்லப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியள்ளார்.

கடந்த 2002 ஆம் ஆண்டு பிரதமராக பதவி வகித்த ரணில் விக்கிரமசிங்க, தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கியதாகவும் எதிர்க்கட்சியில் திறமை மிக்க இளம் தலைவர்கள் அங்கம் வகிப்பதாகவும் அவர்களுக்கு சரியான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டியது அவசியமானதெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக தமக்குவழங்கப்பட்ட அழைப்பிற்காக நன்றி பாராட்டுவதாகவும், எதிர்க்கட்சித் தலைவரின் அறிவுறுத்தலுக்கு அமைய அந்த அழைப்பை நிராகரித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார். தமது சொந்த செலவில் அமெரிக்கா வில் வதியும் தமது பிள்ளைகளைப் பார்வை யிடுவதற்காக சென்றதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## நுரைச்சோலை நிலக்கரி மின்உற்பத்தி நிலையம் தேசிய மின்உற்பத்தி நிலையத்துடன் இணைப்பு

(கொழும்பு)

நுரைச்சோலை நிலக்கரி மின் உற்பத்தி நிலையம் எதிர்வரும் நவம்பர் மாதம் பதினேழாம் திகதி தேசிய மின்சார உற்பத்தி நிலையத்துடன் இணைக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினம், இரண்டாவது பதவிப்பிரமாணம் என்பவற்றுடன் இத் திட்டம் நிறைவேற்றப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 900 மெகா வோட் மின்சாரம் வழங்கலுக்காக இவ்வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. இதற்கான நிதி வழங்கலை சீன அரசாங்கம் வழங்கியுள்ளது. (ஸ்ரீ)

## பயிர்ச் செய்கையை ஆரம்பிக்குமாறு வன்னி விவசாயிகளிடம் கோரிக்கை


(கிளிநொச்சி)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மக்கள்பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்று விவசாய அமைச்சின் வடக்கு மாகாணச் செயலாளர் எஸ்.பத்மநாதன் அறிவித்தல் விடுத்துள்ளார்.

மக்கள் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளத் தவறும் பட்சத்தில் அந்தக் காணிகள் பெரும்போகச் செய்கைக்காக ஏனைய விவசாயிகளுக்கு கையளிக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் விடுவிக்கப்பட்டள்ள பயிர்ச்செய்கைக்குரிய நிலங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளவுள்ள விவசாயிகளுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படவுள்ளதாகவும் கூறியுள்ளார். (ச-5)

# பொன்சேகாவின் பேராணை மனு ஒத்திவைக்கப்பட்டுள்ளது



(கொழும்பு)

சரத்பொன்சேகாவுக்கு முதலாவது இராணுவ நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு பேராணை கோரி மேன்முறையீட்டு நீதிமன் றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு, எதிர்வரும் 15ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த மனு நேற்று நீதியரசர்களான சத்யா ஹெட்டிகே மற்றும் லேக்கம் வசம் ஆகியோரின் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது இந்த வழக்கில் இருந்து தாம் விலகுவதாக நீதியரசர் லேகம் வசம் தெரிவித்தார்.

அதேநேரம் நீதியரசர் சத்தியா ஹெட்டிகே இந்த வழக்கை விசாரணை செய்வதற்கு சரத்பொன்சேகாவின் தரப்பு ஆட்சேபனை தெரிவித்தது.

இதனை அடுத்து இந்த வழக்கு எதிர்வரும் 15ஆம் திகதி பிற்பகல்2 மணிக்கு நீதியரசர் களான கோகுல் குலதுங்க மற்றும் உபாலி அபேரத்ன ஆகியோர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (ஶ்ரீ-2)



பீப்பிள்ஸ் லீசிங் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி டி.பி. குமாரகே, இந்தியா அசோக் லேலண்ட் நிறுவனத்தின் பிரதம செயற்பாட்டு அதிகாரி வினோத்.கே. தாசரியுடன் கைகுலுக்கிக்கொள்வதையும் அசோக் லேலண்ட் நிறுவனத்தின் ஏனைய அதிகாரிகளையும் படத்தில் காணலாம்.

# எதிர்க்கட்சிகள் அரசியல் நாடகத்தை நடத்துகின்றன

## அரசாங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத்பொன்சேகாவை விடுதலை செய்து நடந்துகொள்வதற்கான செயற்பாடு கள் எனக் கூறி, எதிர்க்கட்சிகள் அரசியல் நாடகத்தை நடத்துவதாக அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றின்போது அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன இதனைத் தெரிவித் துள்ளார்.

தமது அரசியல் நோக்கத்துக்காக எதிர்க் கட்சிகள் சரத் பொன்சேகாவை தொடர்ந்தும் சிறை வைத்துக் கொள்ளவும் தயாராக இருப் பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சரத் பொன் சேகாவுக்கு இராணுவ நீதிமன்றமே தீர்ப்பை வழங்கியுள்ளது. ஆனால், அதற்கு அரசியல் சாயம் பூசப்பட்டு எதிர்க்கட்சிகள் குற்றச் சாட்டுக்களை முன்வைக்கின்றன.

எனினும், சரத் பொன்சேகாவை விடுதலை செய்து கொள்வதற்கான வழிகள் இருந்தும் அதற்குப் புறம்பாக எதிர்க்கட்சிகள் செயற்படு கின்றமை அதன் அரசியல் நோக்கத்தை காட்டுகிறது என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சரத் பொன்சேகாவின் விடுதலை தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி மகிந்த ராஜ பக்சவுக்கு அனுப்பி இருந்த கடிதம் தொடர்பி லும் அவர் இதன்போது கருத்து தெரிவித் திருந்தார். கடந்த காலத்தில் எஸ்.பி. திஸா நாயக்க ஐக்கிய தேசிய கட்சியில் இருந்த காலங்களில் சிறையில் தடுத்துவைக்கப்பட்டி ருந்தார். அப்போது ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான அமைப்பாளராக இருந்த எஸ்.பி. திஸாநாயக்கவை விடுவிக்க கோரி ரணில் விக்கிரமசிங்க எந்த கடிதத்தையும் அனுப்ப வில்லை. தற்போது சரத் பொன்சேகா தொடர்பில் அவர் செயற்படுகின்றமையும் அவரது அரசியல் நோக்கத்தை வெளிக்காட்டுவதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஶ்ரீ-2)

# வடமாகாணத்தில் சுங்க திணைக்கள அலுவலகங்களை திறக்க நடவடிக்கை

(கொழும்பு)

வடமாகாணத்தில் சுங்கத் திணைக் களத்தின் அலுவலங்களை மீண்டும் திறப் பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். குடா நாட்டில் மாத்திரம் ஐந்து சுங்க அலுவலகங்கள் முன்னர் இயங்கியதாக உதவிச் சுங்க அதிகாரி சாகர மஹனாம குறிப்பிட்டார்.

ஆனால் யுத்தம் இடம்பெற்ற 30 வருடகால பகுதியில் இவை செயற்படவில் லையெனவும் யுத்தம் காரணமாகச் சில அலுவலகங்கள் சேதமடைந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

குறித்த அலுவலகங்களை மீண்டும் அமைப்பது தொடர்பில் ஆராய்வதற்காகத் தான் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டதாக உதவிச் சுங்க அதிகாரி சாகர மஹானாம தெரிவித்தார். (ஶ்ரீ-2)

# வாழ்வின் வசந்தம் நூல் வெளியீட்டுவிழா

பண்ணாகம் மெய்கண்டானும் அண்ணா கலை மன்றமும் இணைந்து நடத்தும் விரிவுரையாளர் விஸ்வமகாதேவன் எழுதிய வாழ்வின் வசந்தம் நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை மாலை 3.05 மணிக்கு யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தி யாலயத்தில் யாழ்.பல்கலைக்கழக முன் னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரி யருமான பொ. பாலசுந்தரம்பிள்ளை தலை மையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வரவேற்புரையை அதிபர் க.சந்திரசேகரன், ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஶ்ரீலஶ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் மற்றும் ஆலய குருமார்கள் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து நூல் வெளியீட்டுரையை திருமதி நாச்சியார் செல்வநாயகமும் ஆற்ற நூல் ஆய்வுரை யை சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் நிகழ் த்துவார்.

இ ந் நூ லி ன் அணிந்துரையை பண்டிதர் ப.சாந்த குமார் வழங்கவு ள்ளார். (ஶ்ரீ)


## நீங்காத நினைவில் ஓராண்டு

மலர்வு: 26.09.1949



மறைவு: 20.09.2009

திதி:09.10.2010

அமரர் சிவசம்பு செந்தில்நாதன்

(முன்னாள் இலங்கை வங்கி முகாமையாளர்)

அன்பாய் அறிவாய் அரவணைப்பால் அறமாய் அருளாய்
ஆன்மீகமாய் ஆயிரமாய் ஆற்றுப்படுத்தும் ஆற்றலின் ஆற்றலாய்
இலங்கை வங்கியின் இணையில்லா முகாமையில் இணைந்திருந்தீர்
ஈகையில் சமூகத்தின் ஈடில்லாச் சேவையில் சிறந்துமிருந்த
உயர்திரு செந்தில்நாதன் அமரராகி ஆண்டொன்றானதையா

கண்ணியமாய் கருணையாய் புண்ணியப் புருசனாய்
எண்ணியாங்கு புத்திரரை முந்தியிருத்திய தந்தையாய்
மண்ணுலகில் மாண்புமிகு மாதிரியான மாமனாய்
புண்ணியப் பயனான பேரனின் பாசப் பாட்டனாய்
திண்ணிய அளவையூர் முத்துமாரியின் தொண்டனாய்
விண்ணுலகுக்கு செந்தில்நாதன் சென்றடைந்து வருடமொன்றானதே

என்றும் தங்கள் அடிச்சுவட்டை பின்பற்றி வாழும்

குடும்பத்தினர்

560,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0212225205

(2633)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## கலைப்பீடம்

### புதிய கல்வியாண்டு கற்றல் செயற்பாடுகள் ஆரம்பம் 2009/2010

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக, கலைப்பீடத்திற்கு கல்வியாண்டு 2009/2010 இல் "கலை, சட்டம், இராமநாதன் நுண்கலைக்கழகத்தின் இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும்" ஆகிய கற்கைநெறிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்ட புதுமுக மாணவர்களுக்கான புதிய கல்வியாண்டு 2009/2010 இற்கான வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டம் (Orientation programme) பின்வரும் ஒழுங்குகளில் நடைபெறும்.

| குழு | காலம் | இடம் |
|---|---|---|
| குழு(A) (கலை , சட்ட மாணவர்கள்) | 18.10.2010 காலை 9.00 மணி | கைலாசபதி கலையரங்கம், யாழ்.பல்கலைக்கழக பிரதான வளாகம் |
| குழு(B) (இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும் மாணவர்கள்) | 19.10.2010 காலை 9.00 மணி | இராமநாதன் நுண்கலைக்கழகம், மருதனார்மடம். |

மாணவர்கள் குறிப்பிட்ட திகதிகளில் காலை 8.30 மணிக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்

பதிவாளர்
யாழ்.பல்கலைக்கழகம்.
04/10/2010

(C-1375)


# மனித உரிமை மீறல் குறித்த விசாரணைகள் சுயாதீனமான முறையில் நடத்தப்பட வேண்டும்

## ஐ.நா.வின் முன்னாள் துணை பொதுச் செயலர் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையில் இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்றதாக குற்றம் சுமத்தப்படும் மனித உரிமை மீறல்கள் சம்பவங்கள் தொடர்பில் சுயாதீனமாக விசாரணைகள் நடத் தப்பட வேண்டுமென ஐக்கிய நாடு கள் அமைப்பின் முன்னாள் துணை பொதுச் செயலாளர் டெனிஸ் ஹாலிடே தெரிவித்துள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் விசாரணை கள் பக்கச் சார்பற்ற முறையில் அமைய வேண்டுமென குறிப்பிட் டுள்ளார்.


யுத்தத்தின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் யுத்தக் குற்றச் செயல்கள் போன்ற நடவடிக் கைகள் குறித்து இலங்கை உதா சீனமான போக்கைப் பின்பற்றி வருவதாக அவர் குற்றம் சுமத்தி யுள்ளார்.

இலங்கையின் இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்ற உரிமை மீறல்கள் தொடர்பில் டப்ளின் நடைபெற்ற விசாரணைகளின் போது அவர் இதனைக் குறிப்பிட் டுள்ளார்.

இந்த விசாரணைகளின் போது சட்டத்திற்கு புறம்பான முறை யிலான படுகொலைச் சம்பவங்கள் குறித்த வீடியோ கட்சிகள் ஒளிபரப்புச் செய்யப்பட்டுள்ளது.

இலங்கை தொடர்பாக டப்ளி னில் நடைபெற்று வரும் விசார ணைக் குழுவில் ஹாலிடே இடம் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக் கது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக் கும் அரசாங்கத்திற்கும் இடை யிலான யுத்த நிறுத்த உடன்படிக்கை வீழ்ச்சியடைவதற்கு அமெரிக்கா வும் பிரித்தானியாவும் காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஶ்ரீ-2)



யா/மாரீசன்கூடல் றோ.க.த.க. பாடசாலையில் யுனிசெவ் நிறுவனத்தால் நிர்மாணிக்கப்பட்ட சிறுவர் பூங்காவை மாரீசன் கூடல் பங்குத்தந்தை அருட்பணி எம்.எம்.எச்.ஞானேந்திரன் அடிகளார் திறந்துவைப்பதையும் பாடசாலையில் நடைபெற்ற ஆரம்பக் கல்வி செயன் முறைக் கண்காட்சியை சண்டிலிப்பாய் கோட்ட ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி றூபா உதயரட்ணம் ஆரம்பித்து வைப்பதையும் அருகில் அதிபர் சூ.நோபேட் உதயகுமார் நிற்பதையும் படங்களில் காணலாம்.

## செயலமர்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் தரம் 6, 7 மாணவர்களுக்கான வாசிப்பு முகாம் சம்பந்தமான ஆசிரியர் தரவட்டச் செயலமர்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 1 மணிக்கு தென்மராட்சி வலயக் கல்வி அலவலக கேட்போர் கூடத்தில் நடை பெறவுள்ளது.

இதில் தரம் 6,7 மாணவர்களுக்கு தமிழ்ப்பாடம் கற்பிக்கும் தென்மராட்சி பாட சாலை ஆசிரியர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் தெரிவித்துள் ளார். (ஸ்ரீ-29)

# முன்பள்ளி சிறார்களின் கலைநிகழ்வும் கண்காட்சியும்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண 'முன்பள்ளி சிறார்களின் கலைநிகழ்வும் கண்காட்சியும்' வடக்கு மாகாண கல்விப் பண்பாட்டு விளையாட்டுத் துறை அமைச்சின் ஆரம்பப் பிள்ளை கல்வி அபிவிருத்திப் பிரிவினரின் ஏற்பாட்டில் நாளையும் நாளை மறுதினமும் காலை 9 மணி தொடக்கம் மாலை 3.30 மணிவரை யாழ். இந்துக் கல்லூரியில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச் சின் செயலாளர் எல்.இளங்கோவன், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் மற்றும் வடமாகாணக் கல்வி அமைச்சின் ஆரம்பப்பிள்ளை கல்வி அபிவிருத்தி பிரி வின் உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி. ஜெயா தம்பையா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

எனவே அனைத்து பாடசாலை அதிபர் களும் மாணவர்கள் இக்கண்காட்சியை பார்வையிடுவதற்கான ஒழுங்குகளை மேற் கொள்ளுமாறு வலிகாமம் ஆரம்பப் பிள்ளை கல்வி அபிவிருத்தி பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.புவனேசன் அறிவித்துள் ளார். (ஸ்ரீ-2)

## ஏடு தொடக்கலுக்கான ஓலைச்சுவடிகள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சைவபரிபாலன சபையினால் ஏடு தொடக்கலுக்கு உரிய ஓலைச்சுவடிகள் சைவபரிபாலன சபையில் வைத்து இலவச மாக வழங்கப்படும் என்று பரிபாலன சபை தேர்வுச் செயலாளர் அறிவித்துள் ளார். (ஸ்ரீ-2)

## விதவைகள், ஊனமுற்றோருக்கு கடனுதவி வழங்கல்

ஐ.ஓ.எம். நிறுவனத்தினரால் மாயவனூர் கிராம சேவையாளர் அலுவலர் பிரிவில் வைத்து வித வைகள் மற்றும் ஊனமுற்றோர் ஆகியோருக்கு மாதர் சங்கம் ஊடாக 50 ஆயிரம் ரூபா கடனு தவி வழங்குவதற்கான முதற்கட்டத் தெரிவு இடம்பெற்றது.

இதில் 50 பேர் வரை பயனடை யவுள்ளனர்.

இக்கடனுதவியானது 30 ஆயி ரம் ரூபா மானியமாகவும் 20 ஆயி ரம் ரூபா மீளக் கட்டுதல் என்ற அடிப்படையில் ஏற்பாடு செய்யப் பட் டதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)



சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற்ற இசைவிழாவில் லண்டன் நாதவித்தியாலய மாணவர்களான சகானா சாந்தகுணம் வயலின் இசைப்பதையும் சேயோன் சாந்தகுணம் மிருதங்கம் இசைப்பதையும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் சங்கீத ஆசிரியை கீதமணி கிரிதரன் நறிப்படுத்துவதையும் படத்தில் காணலாம்.

# மக்கள் பிரதிநிதிகள் ஜனநாயகத்தை நிலைநாட்ட குரல் கொடுக்க வேண்டும்

## தென்னாபிரிக்க எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

மக்கள் பிரதிநிதிகள் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கு குரல் கொடுக்க வேண்டு மென தென் ஆபிரிக்காவின் எதிர்க் கட்சித் தலைவர் அதோல் ட்ரோலிப் தகவல் தெரி வித்துள்ளார்.

மக்கள் பிரதிநிதிகள் நாடாளுமன்றில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தால் மக்கள் உயிர்த்தியாகம் செய்ய வேண்டிய அவசியம் கிடையாதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.


மக்களினால் தெரிவு செய்யப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனநாயகத் தை நிலைநாட்டுவதில் அதிக ஆர்வம் காட்ட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

முன்னாள் அமைச்சர் அமரர் லலித் அத் துலத் முதலியின் 17 ஆவது சிராத்த தினத்தை முன்னிட்டு பண்டாரநாயக்க மாநாட்டு மண் டபத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்ட தாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசிய கட்சியின் கொழும்பு மாவட்ட தலைவர் ரவி கருணாநாயக்கவின் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றுள் ளது. (ஸ்ரீ-2)

# லங்கா லயன் கழகத்திற்கு வடமராட்சி வீரர் தெரிவு



(கரவெட்டி)

இலங்கை கிரிக்கெற் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட தேசிய அங்கத்துவ கழகமான லங்கா லயன் கழகத்துக்கு வடமராட் சியைச் சேர்ந்த வீரர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறை கழுகு அணியின் அணித்தலைவரும் சிற ந்த விக்கெற் காப்பாளருமான ஆனந்தகுயில் முல்லை திவி யன் (வயது 23) என்ற வீரரே இவ்வாறு தெரிவு செய்யப் பட்டுள்ளார்.

இவர் யாழ்.மாவட்டத்தில் சிறந்த வீரராக திகழ்வதுடன் யாழ். நெல்லியடி மத்திய மகா வித்தியாலய பாடசாலை அணியில் இடம்பிடித்து தனது திறமைகளை வெளிக் காட்டியதுடன் மாவட்ட மாகாண அணியில் தெரிவு சய்யப்பட்டு தனது திறமைகளை வெளிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4-24)



காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியில் உலக ஆசிரியர் தினம் கடந்த 6 ஆம் திகதி நடைபெற்றது. இந்நிகழ்வில் மாணவர்கள், அதிபர் , ஆசிரியர் களை அழைத்து வருவதனையும் கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியர் மங்கல விளக்கேற்றுவதனையும் விருந்தினராகக் கலந்து கொண்ட ஓய்வு பெற்ற ஆசிரியர் வி.ஜெகதீஸ்வரசர்மாவை கல்லூரி அதிபர் சி.சோமசேகரம் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதனையும் ஆசிரியர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள் :-ப.ஐங்கரன்)

# தமிழக சட்டமன்ற தேர்தலில் அ.தி.மு.கவும் கூட்டணிக் கட்சிகளும் பெரு வெற்றி பெறும்

## ஜெயலலிதா பேட்டி

தமிழக சட்டமன்றத் தேர்தல் நேர்மையாக நடந்தால் அ.தி.மு.கவும் கூட்டணிக் கட்சிகளும் பெருவெற்றிபெறும் என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

அவர் ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில்,

**கேள்வி:-** சட்டசபை தேர்தல் பிரசாரத்தை நீங்கள் இப்போதே தொடங்கி விட்டது போல தெரிகிறதே? உங்கள் கூட்டத்தில் அதிக அளவு மக்கள் திரண்டனர். எதிர்வரும் 2011 தேர்தல் அ.தி.மு.கவுக்கு எப்படி இருக்கும் என கருதுகிறீர்கள்?

**பதில்:-** தேர்தல் நேர்மையாக நடந்தால் அ.தி.மு.கவும் கூட்டணி கட்சிகளும் பெரும் வெற்றியைப் பெறும். ஆனால் நேர்மையாக தேர்தல் நடக்குமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

**கேள்வி:-** உங்களுடன் ம.தி.மு.க., கம்யூனிஸ்ட் கட்சிகள் மட்டுமே கூட்டணியில் உள்ளன. ஆனால் தி.மு.க. அணியில் காங்கிரஸ், விடுதலை சிறுத்தை கட்சிகள் இருக் கின்றன. பா.ம.கவும் சேரும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. எனவே அவர்களை எதிர் கொள்வது கடிகமாக இருக்கலாம். விஜய காந்த் தனியாக போட்டியிடலாம் என கருதப் படுகிறது. இப்படி இருந்தால் அரசுக்கு எதிரான வாக்குகள் சிதைந்துவிடுமே?

**பதில்:-** இது இப்போது உள்ள நிலைமை. ஆனால் இந்த கூட்டணிகள் மாறலாம்.

**கேள்வி:-** அகில இந்திய காங்கிரஸ் பொதுச் செயலாளர் குலாம்நபி ஆசாத் தி.மு.கவுடன் காங்கிரஸ் கூட்டணி நீடிக்கும் அதில் எந்த மாற்றமும் இல்லை என்று கூறி இருக்கிறாரே?

**பதில்:-** அது பற்றி எந்த பதிலும் சொல்ல விரும்பவில்லை. ஆனால் தி.மு.க. ஆட்சி பற்றி காங்கிரஸ் தலைமை அதிருப்தியில் உள்ளது. தொடர்ந்து இந்த கூட்டணியில் நீடிக்க வேண்டுமா? என்று ஆலோசித்து வருகின்றன.

**கேள்வி:-** உங்கள் தேர்தல் பிரசாரம் எப்படி இருக்கும்?

**பதில்:-** கோவையிலும் திருச்சியிலும் நான் பேசியதை அறிந்து இருப்பீர்கள். அடுத்து மதுரையில் எதிர்வரும் 18 ஆம் திகதி நடக்கும் கூட்டத்தில் என் பிரசார மைய கருத்துக்களை கூறுவேன்.

**கேள்வி:-** மதுரை பொதுக் கூட்டம் பற்றி பல்வேறு சர்ச்சை எழுந்துள்ளதே?

**பதில்:-** எனக்கு கொலை மிரட்டல் வந்ததை தவிர வேறு எந்த சர்ச்சையும் இல்லை.

**கேள்வி:-** கொலை மிரட்டலை அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதுகிறீர்களா?

**பதில்:-** நான் அப்படி கருதவில்லை. ஆனால் எனது கட்சிக்காரர்கள் இதை முக்கியமானதாக கருதுகின்றனர். எனவேதான் அவர்கள் இது பற்றி பிரதமர், உள்துறை மந்திரி, மாநில தலைமை செயலாளர், உள்துறை செயலாளர் ஆகியோரிடம் புகார் கொடுத்துள்ளனர். இது வரை எனக்கு 10 மிரட்டல்கள் வந்துள்ளன.

**கேள்வி:-** உங்கள் கூட்டணி நிலைமை திருப்தியாக உள்ளதா?

**பதில்:-** என்னும் நிறைய நடக்கலாம். தற்போதைய நிலையில் இது இறுதியானது அல்ல. இன்னும் நிறைய காலம் இருக்கிறது. அப்போது கூட்டணியில் மாற்றம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**கேள்வி:-** உங்கள் கட்சியில் இருந்து மூத்த தலைவர்கள் பலர் வெளியேறி விட்டார்கள். இதனால் கட்சிக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது போல தோன்றுகிறதே?

**பதில்:-** சிலபேர் வெளியேறி இருப்பதால் கட்சிக்கு எந்த பாதிப்பும் இல்லை. கோவை, திருச்சி கூட்டத்தை பார்த்த பிறகும் இந்த கேள்வியைக் கேட்பது தான் வியப்பாக இருக்கிறது. அடுத்த மதுரையில் கூடும் கூட்டத்தை பொறுத்திருந்து பாருங்கள். கட்சியை விட்டு வெளியேறியவர்கள் எல்லாம் இப்போது வருத்தப்பட்டுகொண்டிருக்கிறார்கள். இது தொண்டர்களின் கட்சி, தொண்டர்கள் தான் மற்றவர்களை விட முதன்மையானவர்கள். சக்திமிக்கவர்கள்.

**கேள்வி:-** ஈழப்போர் முடிந்து விட்டது. விடுதலைப்புலித் தலைவர்கள் இப்போது இல்லை. எனவே விடுதலைப்புலிகள் தடையை விலக்கிக் கொள்ளலாம் என நீங்கள் கருதுகிறீர்களா? உங்கள் கூட்டணி தலைவர் வைகோ விடுதலைப் புலிகளுக்கு தடை விதிக்ககூடாது என்கிறாரே?

**பதில்:-** வைகோ தனிக் கொள்கை வைத்துள்ளார். அதே போல நாங்களும் கொள்கை வைத்துள்ளோம். நாங்கள் கூட்டணியாக இருப்பதால் எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது இல்லை. நாங்கள் விடுதலைப்புலிகளை எதிர்ப்பது நீடிக்கிறது.


மத்திய அரசு விடுதலைப்புலிகளை தடை செய்வதற்கு நாங்களும் ஒரு கருவியாக இருந்தோம். அதே நேரத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு நாங்கள் ஆதரவாக இருக்கிறோம். அவர்கள் இலங்கை அரசால் மிகவும் மோசமாக நடத்தப்பட்டு வருகின்றனர். தடுப்பு வேலிக்குள் வைக்கப்பட்ட மக்களை சொந்த இடங்களுக்கு அனுப்ப வேண்டும்.

**கேள்வி:-** ஆணாதிக்கம் உள்ள அரசியலில் பெண்களும் பங்கேற்று பணியை செய்வது கடிணமானது என்று முன்பு கூறி இருந்தீர்கள். கடந்த 30 ஆண்டுகளாக நீங்கள் எப்படி அரசியலை எதிர் கொள்கிறீர்கள்?

**பதில்:-** எனது வாழ்க்கையில் எல்லாவற்றையும் துணிவோடும் மனவலிமையோடும் எதிர் கொண்டு வருகிறேன். பெண்ணாக இருப்ப தால் அரசியலில் எந்த கருணையையும் எதிர் பார்க்க முடியாது. எல்லாவற்றையும் சந்தித்தே ஆக வேண்டும் என்று அவர் கூறினார். (2)

# தமது பொருளாதார நலனை கருத்திற்கொண்டு மட்டுமே அமெரிக்கா செயற்பட்டு வருகின்றது

## பிரணாப் முகர்ஜி அதிருப்தி



அமெரிக்கா தங்களது பொருளாதார நலனை மட்டுமே கருத்தில் கொண்டு மேற்கொண்டுள்ள தற்காப்பு நடவடிக்கைக் கொள்கைகள் ஏற்புடையதல்ல என இந்திய மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறினார்.

நியூயோர்க்கில் நடைபெறும் இந்திய முதலீட்டு அமைப்பின் கூட்டத்தில் பங்கேற்பதற்காக நியூயோர்க் சென்றுள்ள மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி நேற்று முன்தினம் செய்தி நிறுவனம் ஒன்றிற்கு அளித்துள்ள பேட்டியில் கூறியிருப்பதாவது, தங்களது பொருளாதார நலனை மட்டுமே கருத்திற் கொண்டு அமெரிக்கா மேற்கொண்டுள்ள கொள்கை முடிவுகள் தற்காப்பு நோக்குக் கொண்டவை. இதை ஏற்பதற்கு இல்லை. அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்டன் மற்றும் அமெரிக்காவின் உயர் அதிகாரிகளை சந்திக்கும் போது இக் கருத்தை வலியுறுத்த இருக்கிறேன். சர்வதேச அளவில் பொருளாதாரம் மோசமாகியுள்ள நிலையில் தற்காப்புக் கொள்கை சரியானதாக இருக்காது. பொருட்கள் தடையின்றிக் கிடைக்கவும் முதலீடுகளும் பணிகளும் எங்கு தேவையோ அங்கு தடையின்றி செல்ல வேண்டும்.

அப்போது தான் சர்வதேச அளவில் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சிக்கலை தீர்க்க முடியும். மாறாக தங்கள் பொருளாதார பாதிப்பிற்காக அவுட்சோர்சிங் உட்பட பல விடயங்களைத் தடுக்கும் செயல் சரியல்ல. தென் கொரியாவில் இம்மாத இறுதியில் நடைபெற இருக்கும் ஜி 20 நாடுகளின் நிதியமைச்சர்கள் மாநாட்டில் தற்காப்பு கொள்கைகளுக்கு எதிராக இந்தியா சார்பில் கருத்துக்கள் தெரிவிக்கப்படும் என பிரணாப் முகர்ஜி கூறினார்.

இந்திய முதலீட்டாளர்கள் அமைப்பில் பேசிய பிரணாப் முகர்ஜி கூறியதாவது, உலகிலேயே வேகமான பொருளாதார வளர்ச்சியைக் கண்டுவரும் இரண்டாவது நாடு இந்தியா. 9 சதவீத மொத்த உள்நாட்டு உற்பத்தியை விரைவில் எட்ட இருக்கிறோம். உலகளவில் பொருளாதாரம் நலிவடைந்த நிலையிலும் கடந்த 2008 தொடக்கம் 2009 ஆம் ஆண்டு இந்தியாவில் பொருளாதார வளர்ச்சி 6.7 சதவீதமாக இருந்தது. அதற்கு முன் தொடர்ந்து மூன்றாண்டுகளாக 9 சதவீதத்திற்கு மேல் இருந்தது. 2009 தொடக்கம் இவ்வாண்டு வரை 7.4 வீதமாக இருந்தது.

வளர்ந்து வரும் நாடுகளுக்கு சர்வதேச நிதியத்தின் ஒதுக்கீடு 5 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாக அதிகரிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி உள்ளேன். மேலும் உலகளவில் பொருளாதார வளர்ச்சிக்கு வளரும் நாடுகள் தங்கள் பங்கைச் சீராகச் செய்கின்றன என்று பிரணாப் முகர்ஜி கூறினார்.

இதற்கிடையில் சர்வதேச நிதியம் (ஐ.எம்.எப்) நேற்று முன்தினம் வெளியிட்ட பொருளாதார அறிக்கையில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி இந்தாண்டு 9.7 சதவீதமாக இருக்கும். அடுத்தாண்டு 8.4 சதவீதமாக இருக்கும் என்று குறிப்பிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# இலங்கைத் தமிழர் குறித்த ஒரு நபர்குழு அறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்படும்

## ஜெயந்தி நடராஜன் தெரிவிப்பு

இலங்கை தமிழர் பிரச்சினை தொடர்பாக ஒரு நபர் குழு தனது அறிக்கையை தீவிரமாக தயாரித்து வருகிறது என அகில இந்திய காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் ஜெயந்தி நடராஜன் தெரிவித்தார்.

முதல்வர் கருணாநிதியை அவரது கோபாலபுரம் இல்லத்தில் அகில இந்திய காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் ஜெயந்தி நடராஜன் சந்தித்தார். இச்சந்திப்புக்கு பின்னர் அவர் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதில் அளிக்கையில்,

கேள்வி: இலங்கை தமிழர் பிரச்சினை தொடர்பாக ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட ஒரு நபர் குழு தனது அறிக்கையை அளித்து விட்டதா?

பதில்: ஒரு நபர் குழு தனது அறிக்கையை தீவிரமாக தயாரித்து வருகிறது. அறிக்கை தயாரிக்கப்பட்டு மத்திய அரசிடம் சமர்ப்பிக்கப்படும்.

அதன் பின்னர் அந்த அறிக்கை குறித்து முதல்வர் கருணாநிதியிடம் கலந்தாலோசித்து அவர் கூறும் கருத் துக்களின் அடிப்படையில் இலங்கை தமிழ் மக்களுக்கு என்னென்ன வகையில் உதவிகளை வழங்க வேண்டுமோ அவ்வளவும் செய்யப்படும் என்றார். (ஸ்ரீ-2)

# பாரதச் செய்திகள்

## இலங்கை அகதிகளை சட்டவிரோதமான முறையில் படகில் ஏற்றி அனுப்ப முயன்ற நால்வர் கைது

(புதுச்சேரி)

இலங்கை அகதிகளை சட்டவிரேதமான முறையில் படகில் ஏற்றி அனுப்ப முயன்றது தொடர்பாக தி.மு.க. கவுன்சிலர் உட்பட நான்கு பேரை பொலிஸார் கைது செய்தனர். காரைக்காலில் புதிதாகக் கட்டப்பட்டு வரும் மீன்பிடி துறைமுகம் பகுதியில் கடந்த சில நாட்களுக்கு முன் கவனிப்பாரற்று நின்று கொண்டிருந்த மீன்பிடி விசைப்படகை கடலோரப் பொலிஸார் கைப்பற்றி விசாரணை நடத்தினர்.

பிடிபட்ட படகு புதுச்சேரி வீராம்பட்டினத்தைச் சேர்ந்த தி.மு.க. கவுன்சிலர் சக்திவேலுக்கு சொந்தமானது என்பது தெரிய வந்தது. இதுகுறித்து புதுச்சேரி புலனாய்வுப் பிரிவு பொலிஸார் விசாரணை நடத்தினர்.

தமிழ்ப் பகுதியிலுள்ள இலங்கை அகதிகள் சிலரை அவர்களது சொந்த நாட்டிற்கு அனுப்பி வைப்பதற்காக கடந்த 4 ஆம் திகதி கவுன்சிலர் சக்திவேலுக்கு சொந்தமான படகில் புதுச்சேரி தேங்காய்திட்டு துறைமுகப் பகுதியில் இருந்து ஏற்றிக் கொண்டு சென்றுள்ளனர்.

இந்த விவரம் புலனாய்வுத்துறை பொலிஸாரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

இதையறிந்த படகில் இருந்தவர்கள் இலங்கை அகதிகளை மீண்டும் புதுச்சேரிக்கு அழைத்து வந்து விட்டுள்ளனர். பின் அந்தப் படகைப் புதுச்சேரியிலிருந்து காரைக்கால் துறைமுகப் பகுதிக்கு ஓட்டிச் சென்று அங்கேயே விட்டு விட்டுச் சென்றது. பொலிஸ் விசாரணையில் தெரியவந்தது. இது தொடர்பாக புதுச்சேரி புலனாய்வுத்துறை பொலிஸ் எஸ்.பி. ரவீந்திரன் தலைமையில் பொலிஸார் விசாரணை நடத்தி சம்பவத்தில் தொடர்புடையதாகக் கூறப்படும் தி.மு.க. கவுன்சிலர் சக்திவேல் மற்றும் வீராம்பட்டினத்தைச் சேர்ந்த சிலோன் கண்ணன் , வைத்திக்குப்பம் ஜீவா, அரியாங்குப்பம் லோகு அய்யப்பன் ஆகிய நான்கு பேரை நேற்று முன் தினம் கைது செய்தனர்.

(ஸ்ரீ-2)

காலம் உண்மையைக் கண்டுபிடித்து உலகிற்கு வெளிப்படுத்திவிடும்.

—லத்தீன் பழமொழி

வலம்புரி

T.P. 021 567 1530

Web: www.valampurii.com

e-mail: editor@valampurii.com

## நடப்பதோ நாடகமும் நடிப்பும் துடிக்கிறது பாவப்பட்ட தமிழினம்

1983ஆம் ஆண்டிற்கு முன்பு, யாழ்ப்பாணத்தில் குடியிருந்தோம் என்று கூறிக்கொண்டு ஒரு தொகுதி சிங்கள மக்கள் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்து யாழ்.புகையிரத நிலையத்தில் தங்கியுள்ளனர்.

இதுபற்றி தமக்கு எதுவும் தெரியாது என அரச அதிகாரிகள் கூறுகின்றனர்.

சுமார் 30 வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாண மண்ணை விட்டு வெளியேறிய தென்பகுதி மக்கள் யாழ்ப்பாணத்தில் மீளக்குடியமர்வதில் எந்த ஆட்சேபமும் கிடையாது.

ஆனால் எதற்கும் சட்டரீதியாக அணுகுமுறை தேவை. யாழ்.மாவட்டத்திலிருந்து 1983ஆம் ஆண்டு வெளியேறிய பின்னர் தென்பகுதியில் வாழ்ந்த இந்த மக்கள் முதலில் தமது மீளக்குடியமர்வு தொடர்பில் யாழ். மாவட்ட அரச அதிபருடன் கலந்தாலோசித்திருக்க வேண்டும்.

ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை என யாழ். அரச அதிபர் தெரிவிப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமது மீள் குடியமர்வு தொடர்பில் எவருக்கும் எந்தத் தகவலும் தெரிவிக்காமல் திடீரென பஸ்சில் ஏறி யாழ்.புகையிரத நிலையத்துக்கு போய் தங்கியிருப்போம் என முடிவெடுப்பது என்பது எவ்வகையில் சாத்தியமும் பொருத்தமானதுமாகும் என்பது குறித்து சிந்திக்க வேண்டும்.

ஆக இதற்குள் ஏதோ வில்லங்கம் இருப்பது மட்டும் எம் சிற்றறிவுக்குத் தெரிகிறது.

தமது சொந்த இடத்திலிருந்து இடம்பெயர்ந்த ஒருசில தமிழ் குடும்பங்கள் முன்பு யாழ். புகையிரத நிலையத்தில் தங்கியிருந்தனர். அந்தக் குடும்பங்களை உடனடியாக வெளியேறுமாறு பணிக்கப்பட்டது.

இதற்கு மேலாக யாழ்ப்பாண மாவட்ட எல்லைக்குள் புகையிரதப் பாதைப் பகுதியில் குடியிருந்த தமிழ் மக்கள் உடனடியாக வெளியேற்றப்பட்டனர். நிலைமை இதுவாக இருக்கும் போது தென்பகுதி மக்களை யாழ். புகையிரத நிலையத்தில் தங்கியிருப்பதற்கு அனுமதியளித்தது யார்? அனுமதியின்றி அடாத்தாக அவர்கள் யாழ். புகையிரத நிலையத்தில் தங்கியிருப்பார்களாயின் அவர்களை வெளியேறுமாறு பணிப்பு விடுவதற்கு அரச அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காதது எதற்காக?

எல்லாமே நாடகமும் நடிப்பும்தான் நடக்கிறது.

பாவப்பட்ட தமிழினம் பதவி ஆசைக்காக தன்னினம் விற்கும் கூட்டத்தின் கொடுமைக்குள் ஆளாகியுள்ளது.

எதுவாயினும் 1983 யூலைக்கலவரத்தில் தென்பகுதியில் எல்லாம் இழந்து தங்கள் இருப்பிடத்தையும் இழந்த தமிழ் மக்கள் அந்த் இடங்களுக்குப் போகமுடியுமா? அதற்கு வசதிகள் உண்டா? அப்படிப் போக முடிந்தால் எடுத்த எடுப்பில் அங்கு போய்த் தங்கமுடியுமா?

இவற்றையெல்லாம் ஆராய்ந்தால் யாழ். புகையிரத நிலையத்தில் தங்கியுள்ள தென்பகுதி மக்கள் ஏற்கனவே போடப்பட்ட திட்டமிடலின் அடிப்படையில்தான் இங்கு வந்துள்ளனர் என்பது தெளிவாகும்.

அட! நாசமறுப்பு. யாழ்.புகையிரத நிலையத்தில் தேவைக்கதிகமான மலசுவடம் அமைக்கும் போதே தெரிந்திருக்க வேண்டும் அல்லவா! ஏதோ நாடகம் நடக்கப்போகின்றதென்று.

## வவுனியா– துணுக்காய் வரை இலவச சேவையில் ஈடுபட்ட பேருந்து நிறுத்தப்பட்டது

(வவுனியா)

வடக்கில் இடம்பெயர்ந்த மக்கள் மீள் குடியேற்றப்பட்ட பிரதேசங்களில் கடமையாற்றி வரும் அரச ஊழியர்களின் பயணத்திற்காக இலவசமாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுவந்த இரண்டு பேருந்துகள் ஒரு பேருந்து சுமார் ஒரு வாரகாலமாக சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை என இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தப் பேருந்துகள் யாழ்ப்பாணத்திலிருந்து துணுக்காய் வரையிலும் வவுனியாவிலிருந்து துணுக்காய் வரையிலும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வந்தன. வவுனியாவில் இருந்து துணுக்காய் வரை சேவையில் ஈடுபடுத்தப்பட்ட பேருந்தே நிறுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பேருந்துச் சேவை நடைபெறாத நிலையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதேசங்களில் கற்பிக்கும் ஆசிரியர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என சங்கம் குறிப்பிட்டுள்ளது.

அரசாங்கம் பேருந்துக்கான கட்டணங்களை செலுத்தாதன் காரணமாகவே அந்தச் சேவை நிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். (எ-5)

## யாழ். ஆஸ்பத்திரியில் வழங்கப்பட்ட கீரைக்கறிக்குள் இருந்து அட்டை மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வழங்கப்பட்ட உணவுக்குள் இருந்து அட்டை ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை சிற்றூழியர்களுக்குத் தினமும் மதிய உணவு வழங்கப்படுவது வழக்கம்.

அதேபோன்று நேற்றும் மதிய உணவு வழங்கப்பட்ட போது அதனுள் இருந்த கீரைக்கறிக்குள் இருந்து அட்டை ஒன்று மீட்கப்பட் டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக போதனா வைத்தியசாலையின் நிர்வாக உத்தியோகத்தரிடம் முறையிடப்பட்டுள்ளது. (ச)

## சரத் பொன் சேகாவுக்கு ஒத்துழைக்கும் புலிகளின் ஆதரவு அமைப்புக்கள் அரசாங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சரத் பொன்சேகாவுக்கு ஆதரவாக வெளிநாடுகளில் நடை பெறும் போராட்டங்களுக்கு விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான அமைப்புகள் ஒத்துழைத்து வருவதாக அரசாங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

சரத் பொன்சேகாவிற்கு விதிக்கப்பட்ட தண்டனையை பிழையான வகையில் அர்த்தப்படுத்தி நாட்டு மக்களையும் சர்வதேச சமூகத்தையும் திசை திருப்ப சில சக்திகள் முயன்று வருவதாக பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகா விவகாரத் தைப் பயன்படுத்தி சிலர் அரசியல் லாபங்களை ஈட்டிக்கொள்ள முயற்சிக்கின்றனர்.

வேறு விடயங்கள் எதனையும் பேச முடியாத காரணத்தினால் ஜே.வி.பி. மற்றும் ஐக்கிய தேசிய கட்சி ஆகியன சரத் பொன்சேகா கைது விவகாரத்தை பூதாகரப் படுத்தி வருகின்றன.

சரத் பொன்சேகாவிற்கு ஆதரவாக லண்டனில் நடத்தப்பட்ட போராட்டங்களுக்கு புலி ஆதரவு அமைப்புகள் ஒத்துழைப்பு வழங்கியுள்ளன.

லண்டனில் நடைபெற்ற எதிர்ப்பு போராட்டங்களில் சரத் பொன்சேகாவின் பிள்ளைகளும் கலந்துகொண்டனர்.

சரத் பொன்சேகா ஓர் அரசியல் கைதி என அடையாளப்படுத்தி அதன் மூலம் அரசியல் கட்சிகள் பிரசாரங்களை முன்னெடுத்து வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-5)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஏழாலை வடக்கு அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன்பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழா நாளை 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை அதிபர் த.வாமதேவன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக கல்வியியல் பேராசிரியரும் சட்டத்துறை தலைவருமான மா.சின்னத்தம்பி பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ச-6)

## உள்ளூரில் இடம்பெயர்ந்தோருக்கு யூலை, ஆகஸ்ட், செப்டெம்பர் மாத நிவாரணம்

(யாழ்ப்பணம்)

2006 ஆகஸ்ட் மாதம் 11 ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூரில் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு யூலை– ஆகஸ்ட் மற்றும்செப்டெம்பர் மாதத்துக்கான இலவச உணவு நிவாரணம் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்நிவாரண விநியோகத்துக்குரிய பொருட்களுக்கான வழங்கற் கட்டளைகளை மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் பெற்று பொருட்களை நாவற்குழி உணவுக் களஞ்சியத்திலிருந்து எடுத்துச் செல்லுமாறு பல நோக்குக் கூட்டறவுச் சங்கங்களுக்கு யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார்.

இவ் நிவாரண விநியோகத்தை எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. வழங்கப்படவுள்ள பொருட்களின் விபரம் வருமாறு,

| பொருட்கள் | விலை | 01 அங் | 2 அங் | 3 அங் | 4 அங் | 05அங் |
|---|---|---|---|---|---|---|
| சிவப்பரிசி | 49.60 | 3.275 | 5.700 | 8.875 | 9.775 | 13.575 |
| கோதுமைமா | 59.59 | 1.000 | 2.000 | 3.000 | 4.000 | 4.000 |
| சீனி | 86.00 | 1.000 | 2.000 | 2.000 | 2.500 | 3.000 |
| பருப்பு | 138.70 | 0.200 | 0.300 | 0.350 | 0.500 | 0.650 |

## சர்வதேச சிறுவர் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுவும் அரச சார்பற்ற நிறுவனங்களும் இணைந்து நடத்தும் சர்வதேச சிறுவர் தினம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என் டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினர்களாக, யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான முருகேசு சந்திரகுமார் மற்றும் சில்வேஸ்திரி அலன்ரின், யாழ்.மாவட்ட மாநகர சபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக, யாழ்மாவட்ட யுனிசெப் அலுவலகத் தலைவர் டமஸ்கஸ் மச்சேரி, சிறுவர் பாதுகாப்புத்திட்ட முகாமையாளர் கந்தையா மகேந்திரன், யாழ்.மாவட்ட டி.ஆர்.சி. அலுவலகத் தலைவர் செல்வி வடியோலா புளோரஸ் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

அத்துடன் யாழ்.மத்திய கல்லூரியில் இருந்து யாழ்.வீரசிங்கம் மண்டபம் வரை காலை 8.30 மணிக்கு சிறுவர்களின் உரிமைகளை வலியுறுத்தும் சமாதானப் பாத யாத்திரை நடைபெறவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## சுவாமி விவேகானந்தரின் ஆசிமொழிகள்



☆ ஒவ்வொருவருக்குள்ளும் தெய்வீக சக்தி ஒளிந்து கிடக்கிறது. அதை வெளிக் கொண்டு வருவது தான் வாழ்வின் இலட்சியம். இதற்கு அகவாழ்விலும், புறவாழ்விலும் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ள வேண்டும்.

☆ பசியில் உழன்று கொண்டிருப்பவனிடம் தத்துவம் பேசுவது அவனை அவமதிக்கும் செயலாகும். அவனுக்கு உணவளித்த பின்னரே, ஆன்மிக போதனையை தொடங்க வேண்டும்.

☆ மனமும் செயலும் ஒருமித்து நிற்கும் ஒருவன் எச்செயலைச் செய்தாலும் அதில் அவன் வெற்றி பெறுகிறான். அரிய செயல்கள் யாவுமே பலத்த இடையூறுகளுக்குப் பின்னரே கைகூடுகின்றன. ஆகையால், ஆண்மையோடு விடாது முயற்சி செய்யுங்கள்.

☆ ஒருவன் நெருப்பின் நடுவில் கூட துயில் கொள்ள முடியும். ஆனால், வறுமையின் பிடியில் துயில் கொள்ள முடியாது.

☆ தெய்வீகத் தன்மை இல்லாமல் பெறுகின்ற மிதமிஞ்சிய அறிவும் ஆற்றலும் மனிதனை சாத்தான்களாக்கி ஆணவத்தில் தள்ளி விடுகின்றன.

☆ பெரியவர்கள் உலகில் பெருந்தியாகங்களைச் செய்கிறார்கள். அதன் விளைவாக வரும் நன்மைகளை மனிதகுலம் முழுவதும் அனுபவிக்கிறது.

# பாகிஸ்தானில் தற்கொலைத் தாக்குதல்; 10 பேர் உடல் சிதறிப்பலி; 60 பேர் காயம்

(கராச்சி)

பாகிஸ்தானின் கராச்சி நகரில் முஸ்லிம்களின் அப்துல்லா ஷா காஷி என்ற புனித வழிபாட்டு தலம் உள்ளது. நேற்று முன்தினம் இங்கு இலட்சக்கணக்கானவர்கள் கூடி தொழுகை நடத்தினர்.

மேலும் அன்னதானமும் வழங்கப்பட்டது. மாலையில் வழிபாட்டு தலத்தின் வாசலில் திடீரென குண்டு வெடித்தது உடனே அலறியடித்தபடி மக்கள் அங்கும் இங்கும் ஓடினர். இதனால் அங்கு பதட்டமும் பரபரப்பும் ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து அடுத்த சில வினாடிகளில் அங்கு வரும் பார்வையாளர்களின் காலணிகளைப் பாதுகாக்கும் இடத்திலும் குண்டு வெடித்ததில் அப்பகுதி எங்கும் கரும் புகை மண்டலமாக காட்சியளித்தது.

இதில் 10 பேர் அதே இடத்தில் உடல் சிதறி பலியாகியதுடன் 60 பேர் காயம் அடைந்தனர். இவர்கள் அனைவரும் கராச்சியில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றனர்.

குண்டு வெடிப்பு தீவிர வாதிகளின் தற்கொலை தாக்குதல் என சிந்து மாகாண உள்துறை மந்திரி ஷல்பிகர் அலி மிர்ஷா தெரிவித்துள்ளார்.

வழிபாட்டு தலத்துக்கு தற்கொலை தாக்குதல் தீவிரவாதிகள் வந்தனர். அவர்களில் ஒருவனை வாசலில் வைத்து பாதுகாப்பு அதிகாரிகள் மடக்கி பிடித்து விட்டனர். இருந்தும் தப்பி ஓடிய அவன் கூட்டத்திற்குள் புகுந்து தனது உடலில் கட்டியிருந்த குண்டை வெடிக்க செய்தான்.

மற்றொருவன் காலணிகள் பாதுகாக்கும் இடத்துக்கு சென்று குண்டை வெடிக்க செய்து இருக்கிறான். பலியானவர்களில் 2 பேரின் தலைகள் சிக்கியுள்ளன. அது தற்கொலை தீவிரவாதிகளின் தலை எனத் தெரிகிறது. மேலும் இச்சம்பவம் குறித்து தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. அங்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## இங்கிலாந்து அரசின் விசா கட்டுப்பாடுகளுக்கு நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானிகள் கண்டனம்

(லண்டன்)

இங்கிலாந்து பிரதமர் டேவிட் கமரூன் இந்தியா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ஆகியவற்றில் இருந்து படித்த திறமைசாலிகள் இங்கிலாந்தில் குடியேறுவதற்கு விசா கட்டுப்பாடுகளை விதித்து உள்ளார்.

இதற்கு இங்கிலாந்து நாட்டை சேர்ந்த நோபல் பரிசு பெற்ற 8 விஞ்ஞானிகள் கண்டனம் தெரிவித்து இருக்கிறார்கள்.

இந்தியா போன்ற நாடுகளில் இருந்து குடியேறுவதற்கு இங்கிலாந்து விதித்திருக்கும் கட்டுப்பாடுகள் அறிவியல் தொழில் துறைகளில் திறமையானவர்களுக்கு பஞ்சத்தை ஏற்படுத்தும் என்று தெரிவித்து இருக்கிறார்கள். இந்தக் கண்டன அறிக்கையில் மற்ற விஞ்ஞானிகளுடன் தமிழ் நாட்டில் பிறந்த வெங்கடராமன் ராமகிருஷ்ணனும் கையெழுத்திட்டு இருக்கிறார். இவர் கடந்த ஆண்டு நோபல் பரிசு பெற்றவர் ஆவார். (ஸ்ரீ-2)



அமெரிக்காவின் புதிய புலனாய்வு அமைப்பின் அதிகாரம் குறித்த சட்டத்திற்கு அந்நாட்டு ஜனாதிபதி ஒபாமா வோஷிங்டனில் ஜனாதிபதி மாளிகையில் கையெழுத்திட்டார். அருகில் பாராளுமன்ற புலனாய்வு குழு தலைவர் சில்வஸ்டர் ரைஸ் காணப்படுகின்றார்.




## காஷ்மீர் பிரச்சினையை இருநாடுகளும் பேச்சு நடத்தி தீர்த்துக் கொள்ள வேண்டும்

### அமெரிக்கா கருத்து

(வோஷிங்டன்)

காஷ்மீர் பிரச்சினையை இந்தியா- பாகிஸ்தான் நாடுகள் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று அமெரிக்கா கருத்து தெரிவித்துள்ளது. இது குறித்து அமெரிக்காவின் வெளி உறவுத்துறை செய்தி தொடர்பாளர் பி.ஜே: குரேலே நிருபர்களிடம் கூறுகையில்,

இந்தியாவும், பாகிஸ்தானும் அண்டை நாடுகள். எனவே இரு நாடுகளுக்கும் இடையே சுமுகமான உறவு அவசியம். ஆனால் இரு நாடுகள் இடையே காஷ்மீர் பிரச்சினை முக்கிய பிரச்சினையாக இருக்கிறது. இந்த பிரச்சினையில் தலையிட நாங்கள் விரும்பவில்லை. இரு நாடுகளுமே பேச்சு நடத்தி காஷ்மீர் பிரச்சினையை தீர்த்துக் கொள்ள வேண்டும்.

பாகிஸ்தானின் ஜனாதிபதியாக முஷரப் இருந்த போது காஷ்மீர் பிரச்சினைக்கு முடிவு காணப்படும் நிலை உருவானது. ஆனால் அவரது பதவி பறி போனதால் அத்துடன் நின்று விட்டது.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா நவம்பர் மாதம் முதல் வாரத்தில் இந்தியா செல்கிறார். அவர் டெல்லி, மும்பை ஆகிய நகரங்களுக்கு செல்கிறார். அவருடைய இந்திய வருகைக்கும் இந்தியா - பாகிஸ்தான் பேச்சுக்கும் தொடர்பு இல்லை.

இந்தியாவில் பிரதமர் மன்மோகன்சிங் மற்றும் இந்திய தலைவர்களை ஒபாமா சந்தித்து பேசுகிறார். அமெரிக்கா- இந்தியா நல்லுறவை பலப்படுத்தும் விதமாக ஒபாமாவின் பயணம் அமையும் என அமெரிக்கா செய்தி தொடர்பாளர் கூறினார். (ஸ்ரீ-2)

# நேபாள பிரதமர் தேர்தல் தொடர்பில் இழுபறி நீடிப்பு

(காத்மாண்டு)

நேபாளத்தில் பிரதமரைத் தெரிவு செய்வதற்காக 11 ஆவது முறையாக நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தலிலும் முடிவு ஏற்படவில்லை. 601 உறுப்பினர்கள் கொண்ட அரசியல் நிர்ணய சபையில் மாவோயிஸ்டுகளுக்கு 238 உறுப்பினர்களும் நேபாள காங்கிரசுக்கு 114 உறுப்பினர்களும் உள்ளனர்.

22 கட்சிகள் கூட்டணி ஆட்சி நடைபெற்று வந்த நிலையில் மாவோயிஸ்டுகளின் நெருக்குதல் காரணமாக பிரதமராக இருந்த மாதவ் குமார் நேபாள் கடந்த ஜுன் 30 இல் இராஜினாமா செய்தார்.

இதையடுத்து பிரதமரைத் தேர்வு செய்வதற்காக தேர்தல் நடைபெற்று வருகிறது. பிரதமராகத் தேர்வு பெற 301 உறுப்பினர்களின் ஆதரவு தேவை. முதல் 7 சுற்றுகளில் பெரும்பான்மை பெற முடியாததால் மாவோயிஸ்டு தலைவர் பிரசண்மா தேர்தலில் இருந்து விலகுவதாக அறிவித்தார்.

மாவோயிஸ்டுகளும் ஐக்கிய மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சியும் பிரதமர் தேர்தலில் பங்கேற்கப் போவதில்லை என அறிவித்தன.

களத்தில் நேபாள காங்கிரஸ் தலைவர் இராமச்சந்திர பௌத்யால் மட்டுமே உள்ள நிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தலில் 145 உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

இதில் பௌத்யானுக்கு ஆதரவாக 104 பேரும் எதிர்த்து ஒருவரும் நடுநிலை வகித்து 40 பேரும் வாக்களித்தனர். இதையடுத்து அடுத்த சுற்றுத் தேர்தல் நாளை நடைபெறுகிறது. (ஸ்ரீ-2)

# 10-10-10 இல் திருமணம் செய்ய அவுஸ்திரேலியர்கள் ஆர்வம்

(மெல்போர்ன்)

அவுஸ்திரேலியர்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை மிகவும் விசேடமான நல்ல நாள் என்று கருதுகின்றனர்.

ஏனெனில் இவ்வருடம் ஒக்டோபர் மாதமும் வருடத்தில் 10 ஆவது மாதத்தில் வருகிறது. எனவே நாளை ஞாயிற்றுக்கிழமை 10.10.10 என அழைக்கப்படுகிறது. வாழ்க்கையில் ஒருமுறை வரும் என்பதால் மிகவும் விசேடமான நாள் என கருதுகின்றனர்.

எனவே அன்றைய தினம் திருமணம் செய்து கொள்ள அவுஸ்திரேலிய தம்பதிகள் மிகவும் ஆர்வமாக உள்ளனர்.

மேலும் திருமணம் நடைபெறும் நேரத்தை காலை 10.10 மணி என்றும் நிர்ணயித்துள்ளதாக அவுஸ்திரேலியாவில் இருந்து வெளிவரும் ஒரு பத்திரிகை வெளியிட்டுள்ளது. இவர்களை போலவே சீனர்களும் நாளை மறுதினம் அதிக அளவில் திருமணம் செய்ய உள்ளனர். (ஸ்ரீ-2)

# பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் ஜெர்மனி தீவிரவாதிகளுக்கு பயிற்சி

## வீடியோ ஆதாரம் வெளியானது

ஆப்கானிஸ்தானில் ஐரோப்பாவைச் சேர்ந்த சில தீவிரவாதிகள் இருப்பதாக கைது செய்யப்பட்ட தலிபான்கள் தெரிவித்தனர். மேலும் பாகிஸ்தானின் வடக்கு வசிரிஸ்தானில் அமெரிக்கா நடத்திய ஏவுகணை தாக்குதலில் ஜெர்மனியை சேர்ந்த தீவிரவாதிகள் பலியாகினர்.

இதைத் தொடர்ந்து அல்கொய்தா மற்றும் தலிபான்களுடன் ஜெர்மனியை சேர்ந்த தீவிரவாதிகள் இருப்பது உறுதி செய்யப்பட்டது. இந்த நிலையில் ஜெர்மனியை சேர்ந்த மொனிர் சவுகா என்பவரின் ஜிகாத் வீடியோ தீவிரவாதிகளின் இணையத்தளத்தில் வெளியாகியுள்ளது.

அதில் ஆப்கானிஸ்தானை ஒட்டியுள்ள பாகிஸ்தான் எல்லையில் மலைப்பகுதியில் ஜெர்மனியைச் சேர்ந்த தீவிரவாதிகள் பயிற்சி பெறும் காட்சிகள் இடம்பெற்றுள்ளது.


15 தொடக்கம் 40 ஜெர்மனி தீவிரவாதிகள் ஏ.கே. 47 ரக துப்பாக்கியால் சுட்டு பயிற்சி பெறும் காட்சி இடம் பெற்றுள்ளது. பயிற்சி பெற்றபின் இவர்கள் ஆப்கானிஸ்தானுக்குள் புகுந்து பன்னாட்டு இராணுவத்துக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

மற்றும் சிலர் ஐரோப்பிய நாடுகளுக்கு திரும்பி தீவரவாத நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர் என்று இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)



இரண்டாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த உரோமப் பேரரசர்கள் போரின் போது அணியும் வெண்கலத்தால் செய்யப்பட்ட முகவடிவிலான தலை கவசங்களை இலண்டனைச் சேர்ந்த கிறிஸ்டி என்னும் ஏல நிறுவனம் 4 இலட்சத்து 75 ஆயிரம் டொலர் அளவிற்கு பெயர் வெளியிட விரும்பாத ஒருவருக்கு விற்பனை செய்துள்ளது.






மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் நேற்று யாழ்.நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற சிவில் சமூகத்துடனான கலந் துரையாடல் நிகழ்வில் விருந்தினர்கள் மற்றும் மதகுருமார்கள் மேடையில் இருப்பதையும், ஐ.நாவின் அபிவிருத்திசெயற்திட்ட வதிவிடப்பிரதிநிதி பிளோனாபயற் மங்கல விளக்கேற்றுவதையும், ம.உ. ஆணைக் குழுவின் யாழ். இணைப்பாளர் த.கனகராஜ் உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

## விசாரணையின் போது வாய்த்தர்க்கம் இருவருக்கு 12ஆம் திகதி வரை மறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்றுக்கொண்டிருந்த போது வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்ட இருவர் நீதி மன்றை அவமதித்த குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

முன்னர் இடம்பெற்ற தகராறு ஒன்று காரணமாக நீதிமன்றத்துக்கு விசாரணைக் கென வந்திருந்த இருவர், அவர்கள் தொடர்பான விசாரணை நடைபெற்றுக்கொண்டிருந்த போது வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

இதனை அடுத்து அவ்வழக்கை ஒத்தி வைத்த நீதவான் அவர்கள் இருவரையும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ச)

# அவுஸ்.க்கு தங்கம் வென்ற இலங்கைத் தமிழ் வீரன்



(புதுடில்லி)

பொதுநலவாய நாடுகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி இந்தியாவின் தலைநகர் டில்லியில் இடம்பெற்று வருகின்றது. இதில் அவுஸ்திரேலியாவின் உடற்பயிற்சி சார்பாக பிரசாந்தும் போட்டியிட்டார்.

இதில் அவுஸ்திரேலிய அணிக்கு முதலாமிடம் கிடைத்தது. உடற்பயிற்சிப் போட்டியில் அவுஸ்திரேலிய அணிக்கு தங்கப்பதக்கம் கிடைக்கப்பெற்றிருக்கும் முதலாவது சந்தர்ப்பமும் இதுவே ஆகும்.

பொதுநலவாய நாடுகளுக்கு இடையிலான விளையாட்டுப் பேட்டியின் வரலாற்றில் தங்கப்பதக்கத்தை உடற்பயிற்சிப் போட்டியில் பெறுகின்ற மூன்றாவது நாடு அவுஸ்திரேலியவே ஆகும்.

கனடா 4 தடவைகளிலும், பிரித்தானியா இரு தடவைகளிலும் கடந்த காலங்களில் உடற்பயிற்சிப் போட்டியில் தங்கப்பதக்கங்களை வென்றிருந்தன. பிரசாந்தன் 1986 ஆம் ஆண்டு அக்டோபர் முதலாம் திகதி அவுஸ்திரேலியாவில் பிறந்தவர்.

இவரின் பெற்றோர் இலங்கைத்தமிழர்கள். ஆனால் 1983 ஆம் ஆண்டு இப்பெற்றோர் அவுஸ்திரேலியாவுக்க வந்து குடியேறி விட்டார்கள். பிரசாந் சிட்னியில் வசிக்கின்றார்.

இவருக்கு இரு தங்கைமார் உள்ளனர். பிரசாந் உடற்பயிற்சிப் போட்டிகளில் கடந்த காலங்களில் உலகளாவிய ரீதியில் ஏராளமான சாதனைகளை நிலை நாட்டியுள்ளார். (ச-5)

# ஜீ.எஸ்.பி. வரிச் சலுகை பங்களாதேஷுக்கு

(கொழும்பு)

இலங்கையிடமிருந்து கை நழுவிச் சென்றிருக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின ஜி.எஸ்.பி வரிச் சலுகை பங்களாதேஷிற்கு கிடைத்துள்ளது. அந்நாட்டின் பிரபல ஆங்கில நாளேடான டெய்லிஸ்ரார் இத்தகவலை வெளியிட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி வரிச்சலுகை வறிய 16 நாடுகளுக்கு அந்நாட்டின் மனித உரிமைகள் மீது செலுத்திவரும் அக்கறையின் அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றது.

ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை இலங்கை தொடர்ந்து பெற வேண்டுமானால் மனித உரிமைகளை மதித்து நடக்குமென எழுத்துமூல வாக்குறுதிதர வேண்டும் என்பது உட்பட 15 நிபந்தனைகள் விதித்திருந்தது.

ஆனால் நிபந்தனைகளை ஏற்க இலங்கை மறுத்துவிட்டது. இதனால் இலங்கைக்கான இச்சலுகை ஐரோப்பிய ஒன்றியத்தால் கடந்த ஆகஸ்ட் 15 ஆம் திகதி முதல் நிறுத்தப் பட்டுவிட்டது.

இதனால் மாதாந்தம் குறைந்தது250 ஆயிரம் டொலர் இழப்பை இலங்கை எதிர் கொள்ளவேண்டியுள்ளது.

இலங்கையின் ஆடை உற்பத்தித் துறைக்கு ஜி.எஸ்.பி. வரிச்சலுகை வரப்பிரசாதமாக இருந்து வந்தது. இப்போது இச்சலுகை பங்களாதேஷிற்கு கிடைக்கவுள்ளது. (ச-5)

## விற்பனைக்கு

யாழ்– காரைநகர் பிரதான வீதியில் சண்டிலிப்பாய் 7 ஆம் கட்டையடி யில் (ஐயனார் சிலைக்கு அரு காமையில்) உள்ள இரண்டு கடைக் கட்டிடமும், மேல்மாடியும் குழாய்க் கிணற்றுடன் கூடிய சிறிய வீட்டுடன் 4 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு. நேரடியாக தொடர்பு கொள்ளவும்.

T.P : 0778445726 (2619)

## மாநகரசபை யாழ்ப்பாணம்
### அகற்றப்பட்ட அனுமதியற்ற விளம்பரப் பொருட்களை பகிரங்க ஏலம் கோரல்

எமது சபையின் எல்லைக்குள் சபையின் அனுமதி பெறாமல் அமைக்கப்பட்ட விளம்பரப் பலகை மற்றும் பதாகைகள் அகற்றப்பட்டு சபை வளாகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அவற்றை உரியவர்கள் உடனடியாக சபையுடன் தொடர்பு கொண்டு உரிய அனுமதியினைப் பெற்று 2010.10.15ஆம் திகதிக்கு முன்னதாக எடுத்துச் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தவறின் இப்பொருட்கள் அனைத்தும் 2010.10.21ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் பகிரங்க ஏலம் மூலம் வழங்கப்படும்.

(திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா),
மாநகர முதல்வர்,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

(C-1378)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது சங்கத்தின் முன்னாள் தலைவரும்
தற்போதைய போசகருமான
திரு. ந.சபாரத்தின சிங்கி
(Sc.Trained, B.A, Dip in Education, Dip in Agr.M.Ed)
அவர்கள் கடந்த (06.10.2010) புதன்கிழமை நடைபெற்ற யாழ்.பல்கலைக்கழகப் பொதுப் பட்டமளிப்பு விழாவில் கல்வியல் முதுமாணிப் பட்டம் பெற்றமையை இட்டு மனதார பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகிறோம்.

வட்டு. இந்து வாலிபர் சங்கம்-வட்டுக்கோட்டை
வட்டு. இந்து வாலிபர் சங்கம்-கொழும்புக்கிளை
வட்டு. இந்து வாலிபர் சங்கம்-கனடாக்கிளை

(C-1376)

# மெனிக்பாம் முகாமிலுள்ளவர்களுக்கு தொற்று நோய் ஏற்படும் அபாயம்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பியிடம் முறையீடு

(வவுனியா)

மெனிக்பாம் வலயம் 4 முகாமில் உள்ள மக்கள் தொற்று அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மெனிக்பாமில் உள்ள வலயம் 4 இல் சுமார் 3 ஆயிரத்து 700 மக்கள் வசிக்கின்றனர். இவர்களை இங்கிருந்து கதிர்காமர் முகாமுக்குச் செல்லுமாறு இராணுவத்தினர் உத்தரவிட்டிருந்தனர்.

இங்குள்ள மக்கள் அங்கு வசதிகள் காணாது என்றும் ஒவ்வொரு முகாமாகத் தாங்கள் மாறுவதற்கு விரும்பவில்லை என்றும் தெரிவித்துத் தொடர்ந்து அங்கேயே தங்கி வந்தனர்.

இந் நிலையில் ஒக்டோபர் முதலாம் திகதியிலிருந்து இந்த வலயத்திற்கு கழிவுகளை அகற்றும் ஊர்திகளைப் பாதுகாப்புத் தரப்பினர் நிறுத்தி விட்டனர்.

குப்பை அள்ளும் வண்டிகள் கூட வருவதில்லை என அங்கிருப்பவர்கள் அரசியல்வாதிகளிடம் முறையிட்டுள்ளனர். இதற்கு முன்பு ஊர்திகள் தினமும் வந்து சுத்தம் செய்தன.

வாகனங்களை இப்படித் திடீர் திடீரென நிறுத்தியது அந்த மக்களைப் பெரிதும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. 3 ஆயிரத்து 700ற்கும் மேற்பட்ட மக்கள் தங்கியுள்ளதால் நூற்றுக்கும் மேற்பட்ட மலக் குழிகள் நிரம்பி வழிகின்றன.

இதனால் மலக்கூடங்களும் பாவிக்கப்பட முடியாமல் உள்ளது. மலக்கூடங்களில் புழு நெளிகிறது. மக்கள் சொல்லொண்ணாத் துன்பம் அனுபவித்து வருவதாக மக்கள், முறையிட்டுள்ளனர்.

தற்போது மழை பெய்து வருவதால் கழிவு நீரும் மழை நீரும் சேர்ந்து மக்களின் குடியிருப்புக்குள் செல்வதால் தொற்று நோய் பரவும் அபாயம் நிலவுகின்றது.

முன்பு இயங்கி வந்த மருத்துவமனையும் மூடப்பட்டு அதற்குப் பதிலாக நடமாடும் சேவை வழங்கப்பட்டது. இப்பொழுது அதுவும் நிறுத்தபபட்டு விட்டது.

கதிர்காமர் முகாமில் விறகு, தண்ணீர் போன்றவற்றுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாலேயே இங்கிருப்பவர்கள் கதிர்காமர் முகாமுக்குச் செல்ல மறுக்கின்றனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

முகாமை விட்டு வெளியேற மறுத்ததால் தான் இப்படித் தங்களைத் துன்புறுத்துகின்றனர் என்று அங்கிருப்பவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கும்படி அங்குள்ள மக்கள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனைக் கேட்டுள்ளனர்.

தாம் உரியவர்களுடன் கலந்து பேசி விரைந்து நடவடிக்கை எடுப்பதாக சிவசக்தி ஆனந்தன் அவர்களிடம் கூறியதாக ஊடகங்களுக்குத் தெரிவித்தனர். (ச-5)

## பொன்சேகாவுக்குப் பதிலாக லக்ஸ்மன் நிபுனாராச்சி?

(கொழும்பு)

ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகாவுக்குப் பதிலாக அந்தக் கூட்டணியின் பட்டியலில் அடுத்த நிலையிலிருக்கும் லக்ஸ்மன் நிபுனராட்சியை நாடாளுமன்ற உறுப்பினராக வர்த்தமானி அறிவித்தலை வெளியிடத் தயாராகி வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் அரசாங்க அச்சகத்துக்குக் கிடைத்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

சரத் பொன்சேகாவின் நாடாளுமன்றப் பதவி பறிபோயுள்ளதாகத் தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்திருந்த நாடாளுமன்ற செயலாளர் அந்தப் பதவிக்குரியவரை நியமனம் செய்யுமாறு கேட்டிருந்தார். (ச-5)

## கனேடிய தூதரக அதிகாரி யாழ்ப்பாணம் விஜயம்

இலங்கைக்கான கனேடிய தூதரக அதிகாரி ஒருவர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார். எதிர்வரும் 14 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ள இவர் யாழ்.ஆயர் இல்லத்தில் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான குழுவைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். (ச)

## எம்.பி. பதவி வெற்றிடத்...

விக்க முடியும் என கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு நாடாளுமன்ற நியதிகளுக்கு முரணானது என கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு இரண்டாண்டு கால கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டால் அவரது உறுப்புரிமை உடனடியாக இரத்தாகும் என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சரத் பொன்சேகாவுக்கு விதிக்கப்பட்ட தண்டனை மற்றும் சுவரொட்டி ஒட்டுவதற்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்டுள்ள தடை என்பனவற்றுக்கு எதிர்ப்பை வெளியிடும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் பாரிய போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

கொழும்புக் கோட்டை ரயில் நிலையத்துக்கு அருகில் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதி சர்வாதிகாரத்தை நோக்கி நகர்வதாகத் தெரிவித்து அச்சிடப்பட்டுள்ள சுவரொட்டிகளை எதிர்க்கட்சித் தலைவர் ஒட்டி, சுவரொட்டி ஒட்டும் போராட்டத்தை ஆரம்பித்து வைத்துள்ளார். (ச-5)

## சரத்...

ணைகளிலிருந்து விலகியுள்ளனர்.

சொந்தக் காரணங்களை முன்னிட்டுத் தான் இந்த விசாரணைகளில் கலந்து கொள்ள முடியாது என்று கூறி நீதிபதி டி.எஸ்.சி.லெகம்வசம் என்பவர் விலகினார்.

நீதிமன்றத்தின் தலைவரான நீதிபதி சத்யா ஹெட்டிகே மீது சரத் பொன்சேகாவின் சட்டத்தரணிகள் எதிர்ப்புத் தெரிவித்ததை அடுத்து அவரும் விசாரணையிலிருந்து விலகிக் கொண்டுள்ளார். (ச-5)

## நான்...

சேகாவோ, பொன்கேகாவின் குடும்பத்தினரோ ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் மன்னிப்புக் கோரினால் இச் சிறைத் தண்டனையை மீள்பரிசீலனை செய்ய ஜனாதிபதி தயாராகவுள்ளார் என்று அமைச்சர்களான விமல் வீரவன்ச, ஹெகலிய ரம்பக்வெல ஆகியோர் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார்கள்.

அப்போதே கணவர் விஜயதுங்கவுக்காக சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அன்று ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனவிடம் மன்னிப்புக் கோரியிருந்தார் என்றும் அவர்கள் தெரிவித்திருந்தார்கள்.

ஆனால் கணவருக்காக அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவிடம் மன்னிப்புக் கோரியிருக்கவேயில்லை என்றும் இரு அமைச்சர்களும் பொய் சொல்லியிருக்கின்றார்கள் என்றும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கூறியுள்ளார். (ச-5)

## ஜனாதிபதி செயலக ஆலோச...

பட்டு வருகின்றன.

முன்னறிவித்தல் எதுவுமின்றி வந்து, தாங்கள் யாழ்ப்பாணத்திலேயே இருக்க வேண்டும். திரும்பிப் போகப் போவதில்லை எனத் தெரிவித்திருக்கும் இந்தக் குடும்பங்களின் நடவடிக்கை யாழ்ப்பாணத்தின் நிர்வாகத்துக்கு ஒரு சங்கடமான நிலைமையை ஏற்படுத்தியுள்ளது.

30 ஆண்டுகளுக்கு மேல் இடம்பெயர்ந்திருக்கின்ற மக்களுக்கு எப்படியான ஒழுங்குகளைச் செய்ய வேண்டும் எனத் தெரிவிக்கப்படவில்லை.

அதேவேளை இவர்களுக்கு சொந்தக் காணிகளோ வீடுகளோ இல்லாத காரணத்தினால் இவர்களுக்கு அரச காணிகள் கொடுத்து மீள்குடியமர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அப்படியானால் எங்களுக்கு கால அவகாசம், சரியான ஆவணங்கள் என்பன தேவை. முக்கிய ஆவணத்தோடு ஜனாதிபதி செயலகத்திற்கு அறிவித்து அவர்களிடமிருந்து ஆலோசனைகளைப் பெற்று அவர்களின் கொள்கைகளின்படியே மீள்குடியமர்வுகளைச் செய்ய முடியும் என்றார். (ச-5,6)

## இறுதி யுத்த மனித உரிமை...

தின்போது தெற்காசிய நாடுகளின் யுத்தக் குற்றச்சாட்டுக்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான ஆதாரங்கள் முன்வைக்கப்பட்டன.

இதன்போது இலங்கையின் யுத்த காலத்தில் சட்டத்துக்கு முரணாக இடம்பெற்ற கொலைகள், வைத்தியசாலைகள் மீது இராணுவத்தினர் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டமை போன்ற சம்பவங்களுக்கான வீடியோக் காட்சிகளும் ஒளிபரப்பப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் இலங்கை தொடர்பிலான டப்ளினின் மக்கள் நீதிமன்றத்தில் அங்கம் வகித்த நீதிபதி லோவ்லரும் கலந்து கொண்டிருந்தார்.

இதன்போது சுமார் 20ற்கும் அதிகமானவர்களின் சாட்சியங்கள் பெறப்பட்டதுடன் நூற்றுக் கணக்கான எழுத்தாவணங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டன.

இவை இலங்கை அரசாங்கத்தின் யுத்தக் குற்றச்சாட்டுக்கான ஆதாரங்களாக அமை[illegible]துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை இந்தக் கூட்டத்தின்போது கடந்த 2002 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்குமிடையிலான சமாதான உடன்படிக்கை முறிந்து போனமைக்கு அமெரிக்காவும் பிரித்தானியாவும் பொறுப்புக் கூற வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## அமைதிக்கான நோபல் பரிசு...

அளவில் கருத்துச் சுதந்திரத்துக்கு ஆதரவாகக் குரல் கொடுப்பவர்களில் குறிப்பிடத்தக்கவர்.

சீனாவில் அரசியல் மாற்றங்கள் வேண்டி 300 க்கும் மேற்பட்ட மனித உரிமை ஆர்வலர்கள், அறிஞர்களுடன் இணைந்து சார்ட்டர் 8 என்ற சாசனத்தை வெளியிட்டார்.

அதில் முழு வீச்சிலான அரசியல் சீர்திருத்தம், நாடாளுமன்ற சுதந்திரம், மத வழிபாட்டு சுதந்திரம் போன்றவை ஆணித்தரமாக வலியுறுத்தப்பட்டது.

இந்த மகத்தான அரசியல் போராட்டத்தின் எதிரொலியாக 2008 ஆம் ஆண்டு சீன அரசால் கைது செய்யப்பட்டு 2009 -ல் அவருக்கு 11 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

அவர் சிறையில் இருந்தபோதே அமைதி நோபலுக்கான பரிந்துரையில் இடம்பெற்றார். லியூ ஜியாபோவுக்கு நோபல் பரிசு வழங்குவது நோபல் கொள்கைகளுக்கு எதிரானது என்று சீன அரசு கடும் எதிர்ப்பு தெரிவித்தது.

இந்த எதிர்ப்புக்களை மீறி அவரை அமைதி நோபலுக்குத் தேர்ந்தெடுத்துள்ளது நோர்வே நோபல் குழு.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள நோர்வே நோபல் குழு, லியூ ஜியாபோவுக்கு அமைதி நோபல் வழங்குவதில் தெளிவுடன் தான் செயற்பட்டோம் என்று தெரிவித்திருக்கின்றது.

ஸ்வீடன் அறிவியியலாளரும், டைனமிட்டைக் கண்டுபிடித்தவருமான ஆர்ஃபர்ட் நோபலின் நினைவாக வழங்கப்படும் நோபல் பரிசுகள் அவரது நினைவு நாளான டிசம்பர் 10 ஆம் திகதியன்று வழங்கப்படுவது வழக்கம். (ச-5)

## போதியளவு...

உறுப்பினர்களுக்கும் விசேட நாளாந்த கொடுப்பனவுகள் வழங்கப்படுவதுடன் மாதாந்த ஊதியம் ஒன்றும் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு மேலதிகமாக ஐந்து வருடங்களுக்கு மேல் அங்கத்துவம் வகிக்கும் உறுப்பினர்களுக்கு ஓய்வூதியமும் வழங்கப்படுகின்றது.

தீர்வையற்ற வாகன வசதி, பணியாளர்கள், இராஜதந்திர கடவுச்சீட்டு எனப் பல்வேறு சலுகைகளை நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனுபவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-5)


## மரண அறிவித்தல்

### திருமதி விஜயகுமாரி சற்குணநாதன்

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது அவுஸ்திரேலியாவில் வசித்து வந்தவருமாகிய திருமதி சற்குணநாதன் விஜயகுமாரி அவர்கள் 07.10.2010 (காலை) அவுஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் சங்கானையைச் சேர்ந்தவரும் தற்போது அவுஸ்திரேலியாவில் வசிப்பவருமான நவரட்ணம் சற்குணநாதனின் (நாதன்-Rtd.Lake House Printing Manager) அன்பு மனைவியும் இந்து, ஜனன் ஆகியோரின் அன்புத் தாயாரும்,

காலஞ்சென்ற ஜீவரட்ணம் மற்றும் ஈஸ்வரி தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான நவரட்ணம்-சரஸ்வதி தம்பதிகளின் மருமகளும், சந்திரகுமார், தேவகுமார், ராஜலக்ஷ்மி, ஜெகதா ஆகியோரின் அன்புச் சகோதரியும்,

சிவராஜேஸ்வரி, காலஞ்சென்றவர்களான இலங்கைநாதன், இரத்தினேஸ்வரி மற்றும் சிவனேஸ்வரி, பரமநாதன் (நிறஞ்சனாஸ், சங்கானை), காலஞ்சென்ற ஞானேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் திங்கட்கிழமை (11.10.2010) அன்று அவுஸ்திரேலியாவில் நடைபெறும்.

சரஸ்வதி இல்லம்,
பொன்னாலை வீதி,
சங்கானை.
தொ.பேசி. 0213213222 (சங்கானை)
0061297494794 (அவுஸ்திரேலியா)

தகவல்:
ந.பரமநாதன் (மைத்துனர்)
(நிறஞ்சனாஸ்)

(2635)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.10.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.